
கல்கி
KALKI
20·9·1964
30 காசு

கல்கி பொருளடக்கம்

குரோதி புரட்டாசி 4 — செப்டம்பர் 20

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

செய்தித் தாள்


ஞால மெங்கும் நடக்கும் செயல்களை
நமக்குக் கூறும் செய்தித்தாள்;
காலை - மாலை இரண்டு வேளையும்
கடையில் கிடைக்கும் செய்தித்தாள்;

விந்தை நிகழ்ச்சி எங்கே நடப்பினும்
விரைவில் காட்டும் செய்தித்தாள்;
சந்தைப் பொருள்கள் விலையின் நிலவரம்
சாற்றி யுதவும் செய்தித்தாள்;


விரும்பும் தலைவர் பேச்சைப் படத்துடன்
விளக்கிக் காட்டும் செய்தித்தாள்;
அரிய நிகழ்ச்சி நிரலை நித்தமும்
அறியச் செய்யும் செய்தித்தாள்;


பொருளா தார ஏற்றத் தாழ்வுகள்
புரிய வைக்கும் செய்தித்தாள்;
பொருள்கள் வாங்க - விற்க விளம்பரம்
போட்டுப் பரப்பும் செய்தித்தாள்!

- திருச்சி வாசுதேவன்



PK







மலர் 24

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 8

இதய சுத்தமும் நட்பும் வேண்டும்

ராஜாஜி

சரியாக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால், 1939-ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் இரண்டாவது உலக மகாயுத்தம் தொடங்கிற்று. தனியொரு சர்வாதிகாரியால் ஆறு கோடி மக்களை மயக்கி, கற்பனைக்கும் எட்டாத கொடுமைகளைப் புரியுமாறு தூண்ட முடியும் என்பதை ஹிட்லர் செய்து காட்டினார். ஜெர்மானியர்கள் மானுடப் பண்புகள் நிறைந்தவர்கள்; நல்ல புத்திசாலிகள். அப்படிப்பட்டவர்கள் ஒரு வெறி பிடித்த கொலையாளியின் யதேச்சாதிகாரத்தை ஒப்புக்கொண்டு மிருகத்தனமான தீங்குகளை இழைத்தது நம்ப முடியாத விஷயம். ஆனால் வாஸ்தவமாகவே இதைப் பார்த்தோம். மனித இயல்பில் ஒளிந்துகொண்டுள்ள ஓர் ஆபத்தான அம்சத்தை இது எடுத்துக் காட்டுகிறது.

ஹிட்லர் யுத்தம் தொடங்கியபோது திறம்பட இயங்கக்கூடிய போர்க் கருவிகள் உருவாகியிருந்தன. ஆண்டவன் அருளால் ஹிட்லர் ஆறாண்டுக் கொடுமைக்குப் பின்னர் முறியடிக்கப்பட்டார். ஆனால் இன்னும் மனிதகுலம் போர்க் கருவிகளிலிருந்து விடுபடவில்லை. ஹிட்லரின் காலத்திலிருந்ததைவிடப் பயங்கரமான, சிக்கலான அணுக் கருவிகள், ஜீவாணு விஷக் கருவிகள், ரசாயனக் கருவிகள் இவற்றிடையே உலகம் தடுமாறுகிறது. ஹிட்லரின் அழிவோடு வெறித்தனம் அழியவில்லை. அது உறக்க நிலையில் இன்னமும் உயிரோடு இருக்கிறது. வல்லரசுகள் புது யுத்தம் தொடங்குவதில்லை, அணு ஆயுதங்களைப் பிரயோகிப்பதில்லை என்று விவேகமாக முடிவு செய்துகொண்டிருப்பது உண்மைதான். ஆனால், வல்லரசுகள் தங்கள் பரஸ்பரப் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ளாத வரையில் சிறிய நாடுகளின் விவகாரங்களில் தலையிடா என்ற அந்தக் காரணத்தாலேயே இன்று சிறிய நாடுகள் தைரியமாகப் போரில் இறங்கியுள்ளன. உலக அமைதிக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது. மகா யுத்தத்தின் இருபத்தைந்தாம் ஆண்டின்போது நாம் பிரார்த்திப்போமாக: எந்தக் கொள்கையைக் கொண்ட அரசாங்கமாயினும் சரி, மனித குலம் நம்பிக்கையுடன் தன்னை ஒப்பித்துக் கொண்டுள்ள பல நாட்டு ஆட்சித் தலைவர்களும் விரைவிலேயே தங்களிடமுள்ள சர்வநாச ஆயுதங்களைக் கலைத்தழித்து, தெற்கு அண்டார்க்டிக் மகா சமுத்திரத்தின் அடியில் எறிந்து விட்டு, தேசிய ஆட்சி உரிமைகளை உலக மகாசபை ஒன்றிடம் ஒப்படைக்க வேண்டும் எனப் பிரார்த்திப்போமாக. உலகத்தில் சாந்தியும், நீதியும் நிலைப்பதற்கு இதைவிடச் சிறந்த வழி வேறு ஏதுமில்லை.

எதிராளி தன் தீர்ப்புக்கு ஒப்புக் கொள்ள வேண்டும் என்று ஒவ்வொரு தரப்பிலும் எதிர்பார்க்கும் வரையில் ஆயுத பரிகரணப் பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் காண முடியாது. தீரமுள்ளவர்கள் எதிராளியின் நடவடிக்கையை எதிர்பாராமலே துணிச்சலாகவும், நிபந்தனைகள் பேசாமலும் ஆயுதக் குறைப்பு நடவடிக்கையில் முதலடி வைக்கவேண்டும். இன்று நாம் காணும் பயங்கரக் குழப்பத்திலிருந்து விடுபடும் உபாயம் இதுதான். இந்த நடவடிக்கைக்குப் பின் பேச்சு வார்த்தைகள் பலனுள்ள முறையில் சூடுபிடிக்கும். ருஷியா இப்போது அடக்கமும் விவேகமும் பெற்று வருகிறது. இதை மற்ற நாடுகள் பயன்படுத்திக்கொண்டு சமாதான முயற்சியில் ஈடுபடவேண்டும். அறிவுக்குப்

பொருந்தியோ, அமைதியை விரும்பியோ, நம்பகமாகவோ நடந்து கொள்ளாத செஞ்சீனவுக்கு உலக நாடுகள் ஊக்கமளித்தால் விபரீதமாகும்.

★

காந்திஜியின் தலைமையில் இயக்கப்பட்ட காங்கிரஸ் கட்சி, இரண்டாவது உலக யுத்தத்தின் ஆரம்ப காலத்தில் ஹிட்லரை எதிர்த்த நேச நாடுகளுடன் ஒத்துழைக்க மறுத்தது. பல காரணங்களுக்காக மறுத்தது. பிற்பாடு ஒத்துழைப்பதாக முன் வந்தது. யுத்தத்தின் முடிவில் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிப்பதாக பிரிட்டன் வாக்குறுதி அளித்து, அதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்பதே காங்கிரஸ் அந்த நாட்களில் விதித்த நிபந்தனை. இதற்கு ஒப்புக் கொள்ளுமாறு பிரிட்டனை அமெரிக்கா தூண்டிய போதிலும் பிரிட்டன் தீர்மானமாக முடிவெடுக்கவில்லை. முஸ்லிம் லீகுக்கும் காங்கிரஸுக்கும் உள்ள பேதம் தீராத வரையில் இந்திய சுதந்திரத்தைப் பற்றி முடிவு செய்ய இயலாது என்று பிரிட்டன் கருதித் தன் வழியே சென்றது.

முடிவில் ஹிட்லர் தோல்வியுற்றார். யுத்தம் முடிந்த பின் லீக், காங்கிரஸ் இரண்டும் தேசப் பிரிவினைக்கு இணங்கின. காந்திஜி இதற்குச் சம்மதமளிக்க முடியாமல் சிறிது காலம் தயங்கினார். பின்னர், பிரிட்டிஷ் ஆட்சியை முடிக்க வேறு வழி ஏதும் இல்லை எனக் கண்டு தேசத்தின் சஸ்திர சிகித்சைக்கு இணங்கினார். பிரிட்டனும் சட்டப்படி வெளியேறியது. இந்தியா — பாகிஸ்தான் என்ற இரு சுதந்திர நாடுகளை நிறுவியபின் ஆங்கில ஆட்சி முடிந்தது.

இந்தியாவும், பாகிஸ்தானும் தனிப்பட்ட பூரண சுதந்திர நாடுகளாகுமுன்னர் பல திட்டங்கள் யோசிக்கப்பட்டன. இரு நாடுகளுக்கும் கூட்டாக ராணுவப் பாதுகாப்பு அமைத்துக் கொண்டு, தபால், ரயில் முதலிய பொதுப் பணி அமைப்புகள் போக எஞ்சிய எல்லா விஷயங்களிலும் பிரிந்து சுதந்திரமாக அரசியல் நடைபெறும் முறையில் சில திட்டங்கள் யோசிக்கப்பட்டன. ஆனால் ஏதேனும் ஒரு தரப்பினர் இந்த யோசனைகளுக்கு ஆட்சேபித்து வந்ததால் யோசனைகள் யாவும் நிராகரிக்கப்பட்டன. பெரும்பான்மையான ஹிந்துக்களின் ஆதிக்கத்தில் சிறுபான்மை முஸ்லீம்களை ஒருபோதும் நம்பி ஒப்பிக்க முடியாது என்றே லீக் தலைவர் ஜின்னா அவர்கள் எண்ணினார். எனவே, ஆங்கிலேயர்களின் ஆட்சி உரிமையைப் பூரணமாக நீக்க வேண்டும் என்று கோரும் எந்த யோசனையையும் ஏதேனும் ஓர் ஆட்சேபணை சொல்லி அவர் ஏற்க மறுத்து வந்தார். ஆனால் காந்திஜியும் காங்கிரஸும் ஆங்கிலேய ஆட்சி பூரணமாக நீங்க வேண்டும் என்பதையே வலியுறுத்தி வந்தனர். இந்த முட்டுக்கட்டை நிலை காரணமாகத்தான் அன்றைய இந்தியாவின் ஐக்கியத்தைத் தியாகம் செய்து, இரு சுதந்திர நாடுகளாக அதைப் பிரிக்கும் திட்டத்துக்கு ஒப்ப வேண்டியதாயிற்று. அன்றைய அவநம்பிக்கைச் சூழ்நிலை இன்னமும் மேக மூட்டமாக இருந்து வருகிறது. நீண்ட காலமாக வளர்ந்துள்ள பகையை விலக்கி இப்போது இரு நாடுகளும் நட்பு கொள்வதும், நீண்ட நாட்களாக இருந்து வந்த அவநம்பிக்கை தீர்ந்து பரஸ்பர நம்பிக்கை கொள்வதும் சிரமமான காரியம். ஆனால் இதுவே முன்னெப்போதையும் விட அவசியமான காரியம். முன்பு அந்நியர் ஆட்சியிலிருந்து விடுபடுவதை எவ்வளவு முக்கியமாகக் கருதினோமோ, அதை விட முக்கியமாக இன்று இந்தியா—பாகிஸ்தான் நட்டைக் கருத வேண்டும். இன்னும் சொல்லப் போனால், அன்று நாம் பெற்ற சுதந்திரத்தைவிட, இப்போது நாம் பெற வேண்டிய நட்பு மிகவும் அவசியமானது. ஏனெனில், அப்போது நாம் பெற்ற சுதந்திரத்தைக் காத்துக் கொள்வதற்கு இந்த நட்பே உறுதுணை. அந்நிய நாடுகளுக்கு ஏராளமாகக் கடன்பட்டு இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளும் திவாலாகாமல் காத்துக் கொள்ள இந்த நட்பு ஒன்றே மார்க்கம்.

ஹிட்லர்—யுத்தத்தின் நினைவுத் தினத்தன்று நம் மனத்திலுள்ள அசட்டு முரண்பாடுகளை நீக்கித் தூய்மை பெறுவோமாக! முன்பு ஒரே இந்தியாவாக இருந்து இரு துண்டுகளாகியுள்ள நாடுகள் பரஸ்பர நம்பிக்கையும் நல்லெண்ணமும் கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்வோமாக! இந்த இலட்சியத்தை அடைவதற்கு நம்மால் இயன்ற எல்லாவற்றையும் செய்வதற்குச் சங்கல்பம் கொள்வோமாக! மனத்தில் எவ்விதத் தயக்கமும், நிபந்தனையுமில்லாமல் நட்புப் பணியில் ஈடுபடுவோம். காலம் கடத்துவதால் நல்லுணர்வுகள் பாதிக்கப்படக் கூடும்; தைரியமாக நடவடிக்கை எடுக்கும் ஊக்கம் குன்றிப் போகக் கூடும். எனவே, கால தாமதமின்றி உடனடியாக நட்புப் பணியைத் தொடங்குவோமாக!

என்ன சேதி?

ஒன்று சேர வாரீர்!

சமீபத்தில் புதுதில்லி சென்றிருந்த ராஜாஜி அவர்கள் அங்குள்ள சுதந்திர சங்கத்தில் சிந்தனையைக் கிளறும் ஓர் அரிய உரை நிகழ்த்தினார். பெருத்த ஊழல்களுக்கு இடமளிக்கும் தற்போதைய தேர்தல் முறையை எவ்வகையிலேனும் மாற்றி அமைக்க வேண்டும் என்றும் இதற்காக ஒரு சோதனைக் குழு அமைத்து ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்றும் கூறினார். இந்தயோசனையை ஆட்சியாளர் ஏற்று உரியன செய்ய வேண்டுமென விரும்புகிறோம்.

எல்லா எதிர்க் கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஆளும் கட்சியை எதிர்த்தால் தான் ஜனநாயகம் இரு கால்களையும் ஊன்றி நிற்க முடியும் என்பதை இந்தப் பேச்சில் ராஜாஜி வலியுறுத்தினார். சேர 'முடியாது' என்று சொல்வது சரியல்ல; சேர 'மாட்டோம்' என்பதுதான் தற்போதைய நிலை. 'சேரமாட்டோம்' என்ற பிடிவாதத்தை விட்டு எதிர்க் கட்சிகள் யாவும் இப்போது ஒன்று சேர்ந்தேயாக வேண்டும். பாகிஸ்தானை விடச் சீனாதான் பெரிய விரோதி என்பதை ஜனசங்கத்தினர் உணர வேண்டும். காங்கிரஸை எதிர்ப்பதாகச் சொல்லிக் கொண்டே, காங்கிரஸைவிட அதிகமாகச் சர்க்கார் சர்வப் பிரவேசத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று கருதும் சோஷலிஸ்டுகள் அக்கருத்தைக் கைவிட்டேயாக வேண்டும். இந்தக் கொள்கை மாறுதல்கள் இல்லாமல், சர்க்காரிடம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதில் பொருளில்லை. 22,000 கோடி ரூபாயில் உத்தேசித்துள்ள நான்காம் திட்டம் நாட்டு மக்களின் இரத்தத்தை உறிஞ்சப்போகும் பெரும் எதிரி என்பதை எதிர்க் கட்சிகள் யாவும் உணர்ந்து, மற்ற எதிர்ப்புக் கருத்துக்களை எல்லாம் ஒதுக்கி வைத்து ஒன்று சேர வேண்டும்.

எதிர்பார்த்தது நடந்தது

நாம் சென்ற இதழில் எதிர்பார்த்துக் கூறியது போலவே கேரளத்தில் மந்திரி சபை கவிழ்ந்து கவர்னர் ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. அடுத்த பிப்ரவரியில் நடக்கவிருக்கும் தேர்தல்களில் ஊழல்கள் குறைய இது ஒரு நல்ல சூழ்நிலை. 'மக்களிடம் நல்ல பெயரெடுக்க வேண்டும்; பொறுப்புணர்ந்து செயலாற்ற வேண்டும்' என்று கவர்னர் ஸ்ரீ கிரி அவர்கள் கூறியிருப்பது போல், மக்கள் பிரதிநிதிகள் எனச் சொல்லிக் கொள்ளும் மந்திரிகள் யாரும் இதுவரை பேசியதில்லை. நிர்வாகத் திறமை மிக்க ஸ்ரீ டி. என். எஸ். ராகவன் அவர்களின் உதவி கேரள கவர்னருக்குக் கிட்டியிருப்பது நல்ல ஆரம்பம்.

எதிர்க் கட்சிகள் காரணமல்ல

மஸானி அவர்கள் மக்கள் சபையில் நிகழ்த்தியுள்ள உரையைப் படித்தபின் எவருமே உணவுப் பண்ட விலை உயர்வுக்குச் சர்க்கார்தான் காரணம் என்று சந்தேகமறத் தெரிந்து கொள்வார்கள். ரூபாயின் மதிப்பு பதினேழு பைசாவாகக் குறைந்திருப்பதாகப் பொருளாதார நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் சர்க்காரின் பணவீக்கம் உண்டாக்கும் திட்டங்களேயன்றி வேறல்ல. பணத்தின் மதிப்பு ஒரேயடியாக விழுந்திருப்பதால் மற்றவர்களைப் போல விவசாயிகளும்தானே பாதிக்கப் படுவார்கள்? அவர்கள் சிரமமும் செலவும் செய்து உற்பத்தி செய்யும் தானியங்களின் விலை உயராமல் எப்படியிருக்கும்?

'நெல் விலையை உயர்த்தி நிர்ணயம் செய்வோம்; ஆனால் நெல் வாங்குவோர் அதிக விலை கொடுக்க வேண்டியிராது' என்று உணவு மந்திரி திரு சுப்பிரமணியம் 'பொடி' வைத்துப் பேசியிருக்கிறார். அப்படியானால் விவசாயிக்கு அரசாங்கம் மறைமுக மானியம் வழங்கப் போகிறது என்று பொருளா? அவ்வாறெனில், இந்த மானியத் தொகை மக்களின் வரிப் பணத்திலிருந்துதானே வந்தாக வேண்டும்? 'நெல் வாங்குவோர் அதிக விலை தரவேண்டாம்' என்று மந்திரி அவர்கள் அபயஹஸ்தம் காட்டியுள்ள போதிலும், வரி உயர்வு என்ற பெயரில் அவர்கள்தான் விவசாயி மானியத்தை ஈடுகட்ட வேண்டும். மக்களிடமிருந்து வரிகள் வாங்காமல், அரசாங்கத்துக்கு என்றே தனியாகச் சொத்து இருப்பதுபோல் குறிப்பிட்டு, மக்கள் தாங்கவேண்டிய பாரத்தை அரசாங்கமே தாங்குகிறது என்பதாகப் பேசுவது மாயப் பேச்சு.

மகத்தான கொடுமை

ஸொலிஸிடர் ஜெனரல் ஸ்ரீ ஸன்யால் அவர்கள் கொலையுண்ட சேதி கேட்டுத் திடுக்கிடாதவர் இல்லை. தேசத்தின் தலைநகரில், பிரதமர், சபாநாயகர் முதலியோரின் இல்லத்துக்கு அருகில் இவ்வாறு ஒரு தீச்செயல் நடந்திருப்பது ஆட்சிக்கு ஒரு பெரிய களங்கமாகும்.

திருப்புகழ்மணி

கே. பாலசுப்பிரமணிய ஐயர், எம். எல். ஸி.

வழக்கறிஞர்கள் பலரும், அன்பர்களும், நண்பர்களும் சேர்ந்து திருப்புகழ்மணி ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களுடைய சதாபிஷேக விழாவைச் சிறந்த முறையில் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது எனக்கும் எல்லோருக்குமே பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது. எனக்கும் அவருக்கும் நட்பு ஏற்பட்டு, வளர்ந்து இப்போது ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. 1914 - ம் ஆண்டில் முதன் முதலாக எனக்கு அவருடன் தொடர்பு ஏற்பட்டது. இதற்கு ஒரு முக்கிய காரணம் என் தகப்பனார் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யருக்கு இவர் மீது ஏற்பட்ட அன்பும் மதிப்புமேயாகும். இதையொட்டியே என் மீது இவர் அன்பு செலுத்தலானார்.

பெரிய வழக்கறிஞரும், அரசியல் வாதியுமான எம். ஏ. கோவிந்தராகவ அய்யர் அவர்களிடம் திருப்புகழ்மணி சட்டத்தைப் பயின்றார்.

சேலத்தில் புகழ்பெற்ற வக்கீலாயிருந்து, பிறகு சென்னைக்கு வந்து தொழிலை நன்றாக நடத்திச் சேலம் சுப்பிரமணிய அய்யர் என்பவர் கீழ் வக்கீல் தொழிலை ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யர் தொடங்கினார். அந்தக் காலங்களில் சுப்பிரமணிய அய்யருக்காக இவர் கோர்ட்டில் ஆஜராவது வழக்கம். அப்பொழுது என் தகப்பனார் நீதிபதியாக இருந்தார். இவருடைய நாவன்மையையும் சட்டத்திறமையையும் நன்கு உணர்ந்து, இவரிடம் அன்பையும், மதிப்பையும் செலுத்தலானார் என் தகப்பனார். ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யர் 1907ம் ஆண்டில் வழக்கறிஞராகச் சென்னை ஹைகோர்ட்டில் பதிவு செய்து கொண்டார். இதே சமயத்தில் காலஞ் சென்ற அல்லாடி ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யரும் ஸ்ரீ கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரும் பதிவு செய்து கொண்டனர். வெகு சீக்கிரத்திலேயே, ஜில்லாக்களில் உள்ள வக்கீல்களின் அதிக உதவியில்லாமலேயே டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் பெரிய வக்கீலாகப் பெயர் பெறலானார்.

திருப்புகழில் இணைத்துச் சிறந்து விளங்கிய வள்ளிமலை ஸ்வாமிகள் அவர்களிடத்தில் 1921ம் ஆண்டில் இவருக்குப் பழக்கம் ஏற்படலாயிற்று. ஸ்வாமிகளிடத்தில் சிஷ்யராகவும் ஆகித் திருப்புகழ் பாடுவதிலும், முருக பக்தியிலும் பெரும் ஈடுபாட்டைக் கொண்டார். மயிலை கிழக்கு மாட வீதியில் இவர் இல்லத்தில் அடிக்கடி ஸ்வாமிகளின் பஜனையும், பக்தர்களுக்கு விருந்தும் நடைபெறும். கிருஷ்ணஸ்வாமி அய்யரிடம் அன்புள்ள நானும் பஜனைகளில் கலந்து கொள்ள வாய்ப்புக் கொண்டேன். இவருக்கு இயற்கையிலேயே சங்கீதத்தில் நல்ல ஞானமும், ராகங்களைப் பாடுவதில் திறனும் உண்டு. நாளடைவில் இவை நன்கு வளர்ச்சி பெறத் திருப்புகழ் பஜனை காரணமாயிற்று. முருகன் கோயிலுக்குப் பக்தர்களுடன் அடிக்கடி செல்வதும் வீதிகளில் கோஷ்டியாகப் பஜனை செய்வதும் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யருக்கு வழக்கமாகி விட்டன. 1927ம் ஆண்டு மே மாதத்தில் மகா தபஸ்வியும் ஆத்மஞானியுமாகிய சிருங்கேரி பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகர பாரதி அவர்கள் கோயமுத்தூருக்கு யாத்திரையாக வந்திருந்தார்கள். அச்சமயம் ஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களும் நீதிபதியாகவிருந்த ஸ்ரீ சந்திரசேகரய்யர் அவர்களும், மற்றும் சில நண்பர்களும் சேர்ந்து திருப்புகழ் கோஷ்டியாக ஸ்வாமிகளின் பூஜா காலங்களில் திருப்புகழ் பஜனை செய்யும் பொருட்டுக் கோவைக்குப் போயிருந்தோம். அதே சமயத்தில் காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்கள் மலபார் ஜில்லாவில் யாத்திரை செய்து கொண்டு பல்லாவூர் என்ற கிராமத்தில் தங்கியிருந்தார்கள். நாங்கள் அதைக் கேள்விப்பட்டு, சிருங்கேரி பீடாதிபதிகளுடைய மனப்பூர்வமான அநுமதியை வாங்கிக் கொண்டு பல்லாவூரில் தங்கியிருக்கும் ஸ்வாமிகளைத் தரிசிப்பதற்கு கோஷ்டியாகச் சென்றோம். பல்லாவூருக்கு நாங்கள் போகும்போது ராத்திரி ஒன்பது மணியாகிவிட்டது.



திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர்

அன்றிரவே ஸ்வாமிகளைத் தரிசிக்க எங்களுக்கு அருள் கிடைத்தது. எங்கள் எல்லோரையும் புன்சிரிப்புடன் கருணை கூர்ந்து வரவேற்று ஒவ்வொருவருடனும் நன்றாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அச்சமயத்திலேயே இடைரென்று மடத்துக் காரியஸ்தர் அவர்கள் டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களுக்குக் கௌரிசங்கரம் அமைத்த மணிகளுடன் கூடிய ருத்திராக்ஷத்தைக் கழுத்தில் போட்டார்கள். பொன்னாடையும் போர்த்தினார்கள். ஸ்வாமிகள் "திருப்புகழ் மணி" என்ற விருதையும் அளித்தார்கள்.

திருப்புகழ்மணியின் முருக பக்தியைப் புகழ்ந்து பேசி, மக்களிடையே பஜனை மூலமாகப் பக்தியைப் பரப்ப வேண்டுமென்று ஆசி கூறி டி. எம். என்ற பெயருக்கே 'திருப்புகழ்மணி' என்ற பெயரும் பொருத்தமாக இருக்கிறது என்பதை ஸ்வாமிகள் அறிவித்தார்கள்.

அங்கிருந்து மீண்டும் கோயமுத்தூருக்கு வந்து சேர்ந்தோம். சிருங்கிரி சுவாமிகள் பல்லாவூரில் நடந்ததை யெல்லாம் கேட்டு மனம் மகிழ்ந்து, 'அதை என்னுடைய விருதாகவும் கொள்ள வேண்டும்' என்று ஆசி கூறினார்கள்.

இவரிடம் அன்புகொண்ட சில நண்பர்கள் இவ்வாறு அடிக்கடி திருப்பதிகளுக்குச் சென்று கொண்டும் பஜனை செய்து கொண்டுமே இருந்து வந்தால் வக்கீல் தொழிலுக்குக் கேடு வரும் என்றுகூட இவரை எச்சரித்தனர். ஆனால் இதற்கு மாறாகத் தொழில் நன்றாக ஓங்கிற்று. காரணம் இவர் மனம் முருகனிடம் ஈடுபட்டு இவர் பக்தியில் திளைத்திருந்ததேயாகும். பற்றில்லாமல் நிஷ்காம்யமாக கோர்ட்டில் வாதாடுவதே இவருடைய தனிச் சிறப்பாகும். சென்னை வக்கீல்களின் சங்கத்துக்குத் தலைவராகவும், ஜட்ஜுகளின் மதிப்புக்குப் பாத்திரராகவும், கட்சிக்காரர்களின் நலனுக்குப் பாடுபடுபவராகவும் கிருஷ்ண ஸ்வாமி அய்யர் சிறந்து விளங்கலானார்.


இவரிடத்தில் மதிப்பு காரணமாக, அப்பொழுது திருவிதாங்கூரில் திவானாக இருந்த மதிப்புக்குரிய டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் இவரைத் திருவிதாங்கூர் ஹைகோர்ட்டின் பிரதம நீதிபதியாக 1942ல் நியமித்தார்.

அங்கு பல வருஷங்களாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலேயே இருந்து வந்த வழக்குகளை யெல்லாம் தீர்த்து அவைகளை முடித்து வைத்தார். பிறகு சென்னையில் மறுபடியும் வழக்கறிஞர் தொழிலைத் தொடர்ந்து, தற்காலம் நம்மில் ஒரு தலை சிறந்த வக்கீலாக எல்லோராலும் புகழப் பட்டு வருகின்றார். இவரைப் பற்றி எண்ணும் போது இவரின் எல்லை கடந்த முருக பக்தியும், பஜனை செய்யும் காலத்தில் எல்லாவற்றையும் மறந்து ஆனந்தக் கண்ணீர் சொரியும் காட்சியுமே நம் முன் நிற்கின்றன. ஒவ்வோர் ஆங்கில ஆண்டின் கடைசி தினமும், பக்தர்களின் கோஷ்டியுடன் இவர் திருத்தணிகைக்குச் சென்று திருப்புகழ் பாடிக் கொண்டே திருப்படிகளை ஏறும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

1941ல் தமிழர்களின் சொந்தப் பத்திரிகையான கல்கி ஆரம்பமாகப் போகும் செய்தி அறிந்து தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமானின் ஆறு முகங்களின் சின்னமாக ஆறு ரூபாய்களைத் தமது அன்புடனும் ஆசியுடனும் மூலதனத்தில் சேர்க்கும்படி அனுப்பி வைத்தார் திருப்புகழ்மணி திரு டி. எம். கிருஷ்ண சுவாமி அய்யர் அவர்கள். அந்த ரூபாயைக் கொண்டு வாங்கிய மர அமைப்பின் பேரில் தான் கல்கியை அச்சிட்ட முதல் அச்சு இயந்திரம் நிறுவப்பட்டிக்கிறது.

மயிலை பி. எஸ். உயர்நிலைப் பள்ளி, வெங்கடரமண ஆயுர்வேத கலாசாலை போன்ற பல கல்வி ஸ்தாபனங்களின் நிர்வாகக் குழுவில் அங்கத்தினராக இருந்து சிறந்த பணியாற்றி வருகின்றார்.

அன்னாரின் சதாபிஷேகத்தைக் கொண்டாடி அவர் பல்லாண்டு நீடூழி வாழ முருகனைப் பிரார்த்திப்போம். அன்னாருடன் ஐம்பது ஆண்டுகளாக எனக்கு ஏற்பட்டுள்ள நட்பை என் பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன்.


பனாமா
இழுக்க இழுக்க
இன்பம்
இறுதிவரை
Panama
20
CIGARETTES
Specially blended for a cool and pleasant smoke from selected Virginia Tobacco leaves.
பிரத்தியேகத் தயாரிப்பாளர்கள்:
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட். பம்பாய்.56
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது
GT. (P) 633TM
Greens' Advtg.

வளரும் விஞ்ஞானம்

ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகளுக்குப் பல வகைகளிலும் பயன்படக் கூடிய நூதனக் கருவி ஒன்றை மேற்கு ஜெர்மனி எஞ்சினியர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதன் மூலம் ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்கலாம். ஒரு விசையை அழுத்தினால், இதே கருவி படுக்கை அறை விளக்காக மாறும். அவசரத்துக்கு மணி அடித்து யாரையேனும் அழைப்பதற்கும் இதை உபயோகிக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக நோயாளியின் நாடித் துடிப்பு, உடல் சூடு, சுவாச வேகம் ஆகியவற்றையும் இக்கருவி துல்லியமாகக் கணக்கெடுக்கிறது. இந்தக் கருவியைத் தொலைபேசியாகப் பயன்படுத்தலாம். நோயாளி அவசரமாக நர்ஸை அழைக்க விரும்பினால், இந்தக் கருவியிலுள்ள ஒரு விசையை அழுத்த வேண்டும். நர்ஸ்கள் இருக்கும் அறையில் விளக்கெரியும். உடனே நர்ஸ் ஒலிபெருக்கி மூலம் நோயாளியுடன் பேசித் தேவையைத் தெரிந்து கொள்ளலாம். கவலைக்கிடமான நிலையிலுள்ள நோயாளியின் நாடித் துடிப்பு மோசமடைந்தாலோ அல்லது சுவாசம் நின்றாலோ, இந்தக் கருவி உடனே டாக்டரின் அறையில் அபாய ஒலியை எழுப்பும். டாக்டர் விரைந்து வந்து நோயாளியைக் கவனிக்கிறார்.

* * *

வெய்யில் கடுமையாக இருந்தால் கறுப்புக் கண்ணாடி (Sun glasses) அணிகிறோம். இதிலேயே வெய்யிலின் உக்கிரத்துக்கு ஏற்றவாறு நிறம் மாறும் மூக்குக் கண்ணாடிகளை ஓர் அமெரிக்கக் கம்பெனி தயாரிக்கவிருக்கிறது. சூரிய ஒளி பிரகாசமாக இருந்தால் கண்ணாடியின் நிறத்தில் கருமை அதிகமாகும். ஒளி குன்றினால் மூக்குக் கண்ணாடியின் நிறமும் அதற்கேற்ப இலேசாகும். வெய்யிலில் சுற்றுவோர் மட்டுமின்றிப் பெரிய தொழிற்சாலைகளில் ''வெல்டிங்'' வேலை செய்வோர் கண்களைப் பதிக்கக் கூடிய பிரகாசத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் இதனைப் பயன்படுத்தலாம். இந்த மூக்குக் கண்ணாடியின் நிற மாறுதல் ஒரு விநாடியில் ஆயிரம் முறை வேறுமாறுதலும் நடைபெற முடியுமாம்; அத்தனை வேகமாக ஒளியின் பிரகாசத்தைக் கூட்டவும் குறைக்கவும் கூடுமானால்!

* * *

பீச்சுக்கும், பிக்னிக்குக்கும் போகும்போது கையில் சிறிய டிரான்ஸிஸ்டர் ரேடியோவைத் தூக்கிக் கொண்டு செல்வது இப்போதெல்லாம் சர்வ சாதாரணமாகி விட்டது. பிக்னிக் பிரியர்களுக்கு நியூயார்க்கிலுள்ள ஒரு ஸ்தாபனம் மற்றுமொரு புதிய அனுகூலம் செய்திருக்கிறது. காரியாலயத்துக்கு எடுத்துப் போகும் தோல் பை அளவினதாக ஒரு சிறிய 'ரெப்ரிஜிரேட்டர்' தயாரித்திருக்கிறது. கார் பாட்டரிகளிலோ அல்லது சாதாரண பாட்டரிகளிலோ இணைத்து விட்டால் இது ஐஸ் தயாரிப்பதுடன் பானங்களைக் குளிரச் செய்தும் உதவுகிறது.


இதை விடச் சற்றுப் பெரிய ஐஸ்பெட்டி வேண்டுமென்றாலும் கிடைக்கும். பல்வேறு அளவுகளில் உள்ள ஐஸ் பெட்டிகளிலிருந்து அவரவர் தேவைக்கு ஏற்பப் பொறுக்கி எடுத்து வாங்கிக் கொள்ளலாம். இந்த ஐஸ் பெட்டிகள் கொஞ்சம்கூடச் சத்தம் போடுவதில்லையாம்! அவை இயங்குவதே தெரியாதாம்!

* * *


ஆரோக்கியமான நிலைமையில் ஒலி அலைகள் காதிலுள்ள சவ்வின் மீது பட்டு அதில் அதிர்வை ஏற்படுத்துகின்றன. சுத்தி எலும்பு, பட்டறைச் சிற்றெலும்பு, அங்கவடி எலும்பு ஆகிய மூன்று செவி எலும்புகளுக்கு இந்த அதிர்வு அனுப்பப்படுகிறது. இவற்றிலிருந்து இந்த அதிர்வு செவி நரம்பின் மூலம் மூளைக்குத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் உடற்கூற்றில் ஏற்படும் சில மாறுதல்களினால் சில சமயங்களில் அங்கவடி எலும்பு அசைவற்றுப் போவதுண்டு. இதன் விளைவாக, காதுகளில் இடையறாத சத்தம் உண்டாகிச் செவியாற்றல் துரிதமாகக் கெட்டு விடுகிறது. இதற்குச் சிகிச்சை ஏதாவது உண்டா? உண்டு என்கின்றனர் சோவியத் வைத்தியத் துறை நிபுணர்கள்.

அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டிய இடம் ஒரு சதுர சென்டிமீட்டருக்கும் குறைவானது. 4 மில்லி மீட்டர் உயரமும், 3 மில்லி மீட்டர் நீளமும் 1.4 மில்லி மீட்டர் அகலமுமுடைய எலும்பில் சர்ஜன்கள் அறுவைச் சிகிச்சை செய்தாக வேண்டும். 2.5 மில்லிகிராம் எடையுள்ள இந்த எலும்பில் பொற்கொல்லரின் நகாசு வேலையை ஒத்த இந்த அறுவைச் சிகிச்சையை நுண்பெருக்கியின் உதவியுடன் (மைக்ராஸ்கோப்பு) செய்யவேண்டியிருக்கிறது.



அங்கவடி எலும்புக்கு அதன் அசைவுத் தன்மையைத் திரும்ப அளிப்பதே இந்தச் சிகிச்சையின் நோக்கம். இந்தச் சிகிச்சையாளர்கள், ''செவிட்டுத்தனத்தை வென்று கண்டவர்கள்'' என்று மிகப் பொருத்தமாக அழைக்கப்படுகின்றனர். இந்த அறுவைச் சிகிச்சையின் மூலம் அங்கவடி எலும்பு முழுவதையுமோ அல்லது சேதமான பகுதியையோ அகற்றி விட்டு, அதற்குப் பதிலாகச் செயற்கை எலும்பு வைக்கப்படுகிறது. விஞ்ஞான விந்தை இது.



நங்கையர் செய்யும் நற்பணிகள்

'ஆங்கில டைஜஸ்டி'ல் ஒரு வேடிக்கைக் கதை வெளியாகியிருந்தது. பொருட் காட்சியைப் பார்வையிட ஒருவர் தம் மனைவியோடும் குழந்தை குட்டிகளோடும் வந்திருந்தார். ஒரு சிறிய கூடாரத்தின் வாசலில் ஒருவன் பெரிய முரசொன்றை முழக்கியவாறே, ''வாருங்கள், வாருங்கள்! இந்த விசித்திரக் குள்ளனைக் காண வாருங்கள்!'' என்று கத்தினான். பார்வையிட வந்த மனிதர் தம் குடும்பத்தோடு அப்படியே கூடாரத்தின் முன்னால் வந்து நின்று விட்டார். உடனே அந்த முரசறைபவன், ''வாருங்கள். ஆளுக்கு இரண்டணாத் தான். விசித்திரக் குள்ளனைப் பார்க்கலாம்!'' என்றான் மறுபடியும்.

''எனக்குக் கொடுத்துக் கட்டாது. நானும், எனது மனைவியும், பதின்மூன்று குழந்தைகளும் பார்க்கணும்னா நிறைய செலவாகுமே?'' என்றார் அந்த மனிதர்.

''இவையெல்லாம் உங்கள் குழந்தைகளா?''

''ஆமாம்!''

''அப்படியா! கொஞ்சம் இருங்கள். அந்த விசித்திரக் குள்ளனுக்கு உங்களை ஒரு முறை காட்டி விடுகிறேன்!'' என்றானும் அந்த முரசறைபவன்.

நெய்வேலி நகரத்தில் பிரும்மாண்டமாக எழுந்த தொழிற்சாலைகளைக் காணச் சென்றவர்களை, அந்தத் தொழிற்சாலைகளைவிட அன்று மாதர்களும், குழந்தைகளும் தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களோடு சாரி சாரியாகச் சென்ற காட்சி அப்படி அதிசயிக்க வைத்தது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் தொழிற்சாலையில் பணிபுரிபவர்களுக்காக எண்ணாயிரம் வீடுகளுக்குமேல் கட்டி, நவீன வசதிகளும் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்ட பொழுது திகைப்பாயிருந்தது. பூங்கா, மாதர் சங்கம், பொழுது போக்குமிடங்கள் ஆகிய அனைத்தும் அந்நகரில் இடம் பெற்றுள்ளன. குக் கிராமமாகத் திகழ்ந்த இடம் ஒரு பெரிய நகரமாக மாறியிருக்கிறது.

நெய்வேலியில் முதன் முதலில் பழுப்பு நிலக்கரித் தொழிற்சாலைக்கு அஸ்திவாரமிட்ட நாளிலிருந்தே மந்தாரக் குப்பத்தில் ஒரு மாதர் சங்கம் தொடங்கப்பட்டது. நாளுக்கு நாள் பல்கிப் பெருகி வளரும் தொழில் முன்னேற்றத்துக்கேற்ப நெய்வேலி நகரிலும் மூன்று மாதர் சங்கங்கள் பணியாற்றத் தொடங்கின. காவேரி, வைகை, பவானி என்ற நம் நாட்டுப் புனித நதிகளின் பெயர்களைத் தாங்கி இந்நகரில் மூன்று தனித் தனி சங்கங்கள் செயலாற்றின. இந்த மூன்று மாதர் சங்கங்களையும் இணைத்துச் செயலாற்ற வைத்த பெருமை நெய்வேலி பழுப்பு நிலக்கரி தொழிற்சாலையின் தலைவர் திரு சுப்பராமனைச் சாரும். காவேரி, வைகை, பவானி மாதர் சங்கங்கள் இணைந்துள்ள நெய்வேலி மாதர் சங்கத்துக்குத் தலைவி ஸ்ரீமதி பத்மா ரங்கா. இவர் நெய்வேலி பழுப்பு நிலக்கரித் தொழிற்சாலையின் நிதி ஆலோசகர் ஸ்ரீ ரங்கா அவர்களின் மனைவியார். மாதர் சங்கத்துக் காரியதரிசியாக இருப்பவர் மைசூரைச் சேர்ந்த ஸ்ரீமதி கிருபா ரங்கராஜ்.

''எங்கள் மாதர் சங்கத்தில் சாதாரணத் தொழிலாளரின் மனைவியிலிருந்து மிகப் பெரிய அதிகாரியின் மனைவி வரை எல்லோரும் சரிசமமாக இணைந்து பணி புரிகிறோம். விளையாட்டு, பொழுது போக்குக்கான வசதிகளை லிக்னைட் கார்ப்பரேஷன் எங்களுக்குச் செய்து தந்துள்ளது'' என்று பெருமையுடன் கூறினார் மாதர் சங்கத்தின் ஆதரவாளரான ஸ்ரீமதி கல்பகம் சுப்பராமன்.

நெய்வேலி தொழில் நகரத்தில் இந்தியாவிலுள்ள பல பகுதிகளைச் சேர்ந்த, பல மொழிகளைக் கொண்டவர்கள் இருப்பதால், ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்ட ஆரம்பக் கல்வி வகுப்புக்கள் மாதர் சங்கத்தால் நடத்தப்படுகின்றன.







நெய்வேலி மாதர் சங்கத்தின் ஒரு கிளையான மந்தாரக்குப்பத்திலுள்ள பவானி நிலையம் விசேஷமாகக் குழந்தைகள் விஷயத்தில் அதிக கவனம் செலுத்துகிறது. குழந்தைகளுக்கான சங்கத்தில் எண்பது குழந்தைகளுக்கு மேல் அங்கத்தினர்களாகச் சேர்ந்து, புத்தகங்கள், பத்திரிகைகள், விளையாட்டு வசதிகள் ஆகியவற்றில் கலந்து கொள்கிறார்கள். இந்தக் குழந்தைகள் சங்கத்தில் பதினாறு வயதுக்குள் உள்ள சிறுவர் சிறுமியரே அங்கத்தினராகச் சேரலாமாம். இங்கு ஓவியம், சித்திரம், சங்கீத வகுப்புக்களெல்லாம் நடத்தப்படுகின்றன. மாதர்களுக்கான விளையாட்டு வசதிகளும் உண்டு இங்கே. காவேரி நிலையம் என்ற மற்றொரு பகுதியில் குழந்தைகள் படிப்பு விஷயத்தில் அக்கறை செலுத்தப்படுகிறது. லிக்னைட் கார்ப்பரேஷன் புதிய கட்டடம் ஒன்று கட்டிக் கொடுத்து உதவியிருக்கிறது. மூன்றாவது கிளையான வைகை மாதர் சங்கத்தில் நாட்டியம், ஹிந்தி, மிருதங்க வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. தையற் கலை கற்றுக் கொடுப்பது விசேஷ அம்சமாகும்.

''நெய்வேலி மாதர் சங்கத்தில் தையற்கலை கற்றுக் கொடுப்பதால் மாதர்களாகிய எங்களுக்கு வருவாய் இருக்கிறது. நாங்கள் சோம்பி, வீண் அரட்டைகளில் பொழுதைக் கழிப்பதில்லை. பள்ளிகளில் ஐந்து வகுப்பு வரையில் படிக்கும் குழந்தைகளுக்குப் பள்ளி ஆடைகளை நாங்கள்தான் தைத்துக் கொடுக்கிறோம். லிக்னைட் கார்ப்பரேஷன் குழந்தைகளுக்கு இலவசமாக இந்த ஆடைகளை வழங்குவதோடு எங்களுக்கு முப்பது நாற்பது ரூபாய் அளிக்கவும் செய்கிறது!'' என்று பெருமையுடன் பகர்ந்தாள் ஒரு பெண்மணி. தான் தொழில் செய்து வருவதில் அவளுக்கு அளவு கடந்த ஆனந்தம்! சிலர் பணத்துக்குப் பதிலாகத் தவணை முறையில் தையல் இயந்திரங்களைச் சொந்தமாகப் பெற்றுக் கொள்ளவும் செய்கிறார்களாம்.

நெய்வேலியில் ஒவ்வொரு வீட்டுக்கும் தோட்ட வசதி செய்து கொள்ள வேண்டுமென்று நிறைய இடம் ஒதுக்கியிருக்கிறார்கள், பழுப்பு நிலக்கரி தொழிற்சாலை நிர்வாகிகள். மாதர் சங்கத்தினர் ஒவ்வொரு வீட்டிலும் காய்கறி பயிராக்குவதற்கு வேண்டிய யோசனைகளும் ஊக்கமும் அளித்து வருகிறார்கள். அதோடு தோட்ட அமைப்பு முதலானவற்றுக்கு நிபுணர்களின் யோசனையும் கிடைக்க வழி செய்திருக்கிறார்கள்.

''அயல் நாடுகளிலிருந்து ஆங்கிலேயர்கள், ரஷ்யர்கள், இத்தாலியர்கள், ஜெர்மானியர்கள் குடும்பம் குடும்பமாக நெய்வேலியில் இருக்கின்றனரே, அவர்கள் உங்கள் கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுகிறார்களா?''

''ஓ! தமிழ் வருஷப் பிறப்பன்று சோவியத் நாட்டு நிபுணர் குழுவைச் சேர்ந்த தமிழ் பேகம் சோவியத் மொழிபெயர்ப்பாளரான குமாரி தாலியா மகாகவி பாரதியாரின் பாடல்களைப் பாடி எங்களை மகிழ்வித்திருக்கிறார்! எங்கள் கலை விழாக்களிலும் அவர்கள் பங்கெடுத்துக் கொள்கிறார்கள்!''

நம் எல்லைப்புறத்தில் வெறிபிடித்த சீனன் தலைநீட்டியபோது நாட்டைக் காக்கும் நற்பணிக்கு நிதி தேட நெய்வேலி மாதர் சங்கத்தினர் ஒரு பொருட்காட்சியை நடத்தினர். இதனைச் சென்னை முதன் மந்திரி திரு பக்தவத்சலம் ஆரம்பித்து வைத்தார். இந்தப் பொருட்காட்சியிலிருந்து கிடைத்த பத்தாயிரம் ரூபாயைத் தேசப் பாதுகாப்பு நிதிக்கு அவர்கள் வழங்கி விட்டனர். பாகிஸ்தான் அகதிகளுக்காக நெய்வேலி நகரத்தில் வீட்டுக்கு வீடு சென்று உடையும், பொருளும், பணமும் வசூலித்து அனுப்பியுள்ளனர் இம் மாதர் சங்கத்தினர்.

சென்னை ராஜ்யம் நெய்வேலி அனல் மின்சாரத்தினால் ஒளிபெற்றுத் திகழ்கிறதென்றால் நெய்வேலி மாதர் சங்கத்தினரின் நற்பணிகளினால் மேலும் ஒளிவிட்டுப் பிரகாசிக்க முடிகிறது.

—காமு



எட்டாம் அத்தியாயம்

புலவனுக்கு அழைப்பு?

மயன் என்ற மாயச் சிற்பியின் கைவண்ணத்தால் பல அற்புதமான நகரங்கள் நிர்மாணிக்கப் பெற்றனவென்று பழங் கதைகள் சொல்லுகின்றன. மதுரைமா நகரத்தைப் புதுப்பிக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த பற்பல சிற்பிகளையும் எங்ஙனம் அந்த மயனின் மாய சக்தி ஆட்கொண்டு விட்டதோ தெரியவில்லை. நாளுக்கு நாள் புதுக் களை, நாளுக்கு நாள் புதுக் கலை, நாளுக்கு நாள் புதுப் பொலிவு, நாளுக்கு நாள் புத்தெழில் கூடியது அந்தப் பழம் பெரும் நகரத்துக்கு.

உழைத்தவர்கள் ஊதியத்துக்கென்று உழைத்தார்கள்! மகத்தான பெரும் பணி ஒன்றில் தாங்களும் பங்கு கொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததே என்ற பெருமை அவர்களுக்கு. ஊக்கமும் உற்சாகமும் கரை புரண்டு ஓட அவர்கள் தங்களுக்கு நேர்ந்த அழிவை அழிக்கத் துணிந்து விட்டார்கள். ஆக்கப் போர் புரிந்தார்கள்.

உழைப்பவர்களுக்கெல்லாம் உணவுக்கும் உறைவிடத்துக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பைந்தமிழ்க் குமரனால் அனுப்பி வைக்கப் பெற்ற ஆட்கள் நகரத்துக்கே புதிய நம்பிக்கையையும் அழகையும் தந்து கொண்டிருந்தார்கள். உழைப்பு நேரத்தில் உழைப்பு; ஓய்வு நேரத்தில் ஓய்வு; களிப்பு நேரத்தில் களிப்பு. நகரத்தின் நான்கு திசைகளிலும் முன்னிரவு நேரங்களில் ஆடல்களுக்கும் பாடல்களுக்கும் பஞ்சமில்லை; மாலைவேளைகளில் சொற்போர்களுக்கும், மற்போர்களுக்கும் பஞ்சமில்லை.

குலசேகர பாண்டியரின் தேர் அடிக்கடி நகரத்தைச் சுற்றி வரத் தொடங்கியது. உழைத்தவர்களுக்கு அவரைக் கண்டு விட்டால் ஒரே ஆனந்தம். நகரத்தின் வாணிபமும் மறுமலர்ச்சி பெற்றுச் சுறுசுறுப்பாக நடைபெற்று வருவதைக் கவனித்தார் பாண்டியர். தெருக்களில் முன் போல் ரதங்கள், குதிரைகள், சிவிகைகள், வண்டிகளின் போக்குவரத்து மிகுந்தது.

மன்னர் எவ்வளவுக்கெவ்வளவு மகிழ்ச்சியடைந்தாரோ அவ்வளவுக்கவ்வளவு அதிர்ச்சியுறத் தொடங்கி விட்டார் அமைச்சர் சயங்கொண்ட சோழ வல்லபர். மக்கள் கூட்டம் பைந்தமிழ்க் குமரனைப் பற்றிப் பேசிய பேச்சுக்கள் அவர் செவிகளில் நாராசமாய் ஒலித்தன. தென்பாண்டி நாட்டிலிருந்து வந்தவர்கள் அவனுடைய பெயரை ஒவ்வொருவரும் உச்சரித்து வாழ்த்தும்படி செய்து விட்டார்கள். இந்த நிலைமையைத்தான் அமைச்சரால் சிறிதும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அரசரின் மண்டபத்தில் அமைச்சரும் விழுப்பரையரும் அருகில் இருந்த போது, பாண்டியர் தம்முடைய கருத்தை வெளியிடலானார்:

''குடிமக்களுக்கு இப்போது அந்தப் புலவரை நேரில் காண வேண்டும் என்ற பேராவல் மிகுந்திருக்கிறது. அதே ஆவல் என்னையும் பற்றிக் கொண்டிருக்கிறது. அவரை நம்முடைய தலைநகரத்துக்கு அழைத்து வந்து நாம் பாராட்டினால், அதனால் மக்களுடைய உற்சாகமும் பெருகும்.''

இப்படிக் கூறி விட்டு அருகில் இருந்த இருவரையும் உற்றுப் பார்த்தார் அரசர். விழுப்பரையர் இதனால்

கயல்விழி

அகிலன்

மகிழ்ச்சியடைவார் என்று எதிர்பார்த்தார். ஆனால் பலனோ நேருக்கு மாறாக இருந்தது.

''சிறந்த யோசனை! அவனை உடனடியாக அழைத்து வர ஏற்பாடு செய்யலாம்'' என்று ஆவலோடு கூறினார் சயங்கொண்ட வல்லபர். அந்த ஆர்வத்தில், ''இப்போது திருநெல்வேலியில் தாமிரவருணிக் கரையில் அந்தப் புலவர் வாழ்ந்து வருவதாகத் தெரிகிறது; வரவழைத்து விடலாம்'' என்றார்.

விழுப்பரையருக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'அமைச்சருக்கு அவர் மீது இவ்வளவு அன்பு எப்போது ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது? அது சரி, தென் பாண்டியில் நெல்லைப் பகுதியில் அவர் இருப்பதை இவர் எங்ஙனம் அறிந்தார்?'

''விழுப்பரையர் ஏதும் கூறவில்லையே!'' என்றார் பாண்டியர்.

''காற்றைப் போல் கட்டின்றித் திரியும் புலவர் வகையைச் சேர்ந்த ஒருவர் அவர் என்று எனக்குத் தோன்றுகிறது. கானகத்திலும் பூங்காவிலும் கூவித் திரியும் குயிலை நாம் பொற்

கூண்டில் அடைக்க விரும்பினாலும் அது மகிழ்ச்சியுறாது. ஆகவே அவராக விரும்பினால் வரும்போது, நாம் அவரை வரவேற்போம்.''



''புலவருக்குப் புலவர் வஞ்சம் கொள்வது இயற்கைதான்!'' என்று கூறி நகைத்தார் அமைச்சர். ''அவன் இங்கு வந்தாலும் நாம் அவனை அரசவைப் புலவர்களின் தலைவனாகவா அமர்த்தப் போகிறோம்? அப்படியே அமர்த்தினாலும் தங்களுக்கு அடுத்தாற்போல் அவன் இருந்து விட்டுப் போகட்டும்.''

''அமைச்சர் அவர்கள் என்னை மன்னித்தருள வேண்டும்'' என்று குறுக்கிட்டார் விழுப்பரையர். ''அரசவைக் கவியாவதற்கு ஏங்குபவர்கள் சிலர் இருக்கலாம். 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்!' என்று சொல்பவர்களும் இருக்கலாம். நம்முடைய அழைப்பை ஒருவேளை அந்தக் கவி ஏற்றுக் கொண்டு இங்கு வர மறுத்தாரானால் நமக்கு அது இழுக்காகத் தோன்றும். புலவர்களுக்குச் செருக்கு உண்டு; அதிலும் இவரோ, இளைஞர் என்று கூறுகிறார்கள்.''

''காவலரின் கட்டளைக்குப் பணிய மறுக்கும் ஒருவன் இந்த நாட்டில் உலவ முடியுமா?'' என்று சினத்தோடு கேட்டார் அமைச்சர். சிரித்தார் அரசர்.

''சோழ நாட்டிலேயே அப்படி நடைபெற்றிருக்கிறது; அதுவும் இந்தக் குலோத்துங்கர் ஆட்சியிலேயே நடைபெற்றிருக்கிறது.''

துணுக்குற்றார் சயங் கொண்ட சோழ வல்லபர். சோழ நாட்டை விழுப்பரையர் இழிவுபடுத்துவதாக எண்ணி, ''அங்கு நடந்ததா?'' என்று கேட்டார்.

''வள்ளல் சடையப்பருடன் வாழ்ந்த கவிஞர் கம்பரைக் குலோத்துங்கர் தமது அரசவைப் பெருங் கவியாக்கினார். இராமனின் கதையைப் பாடச் செய்தார். ஆனால் அந்தக் கதையினூடே வள்ளல் சடையப்பருக்குக் கவிஞர் எவ்வளவு பெருமையளித்தாரோ, அந்த அளவுக்குப் புவிச் சக்கரவர்த்தியாம் குலோத்துங்கரைப் போற்ற முடியவில்லை. சடையப்பரின் பெயர் சொல்லி அவரை வாழ்த்தியவர், குலோத்துங்கரை, 'வீரன் தியாகமா விநோதன்', 'அகளங்கன்', 'அமலன்' என்று ஒரு சில இடங்களில் மட்டும் குறிப்பால்தான் உணர்த்தியுள்ளார். கடைசியில் கவிச் சக்கரவர்த்தியின் செருக்கும் புவிச் சக்கரவர்த்தியின் செருக்கும் போரிடத் தொடங்கி விட்டன. பிறகு நடந்தது நமக்கெல்லாம் தெரியும்.''

ஆம்! கவிச் சக்கரவர்த்தி தமக்காகப் புவிச் சக்கரவர்த்தி கட்டி வைத்த பொற் கூண்டிலிருந்து பறந்து போய் விட்டார். 'மன்னவனும் நீயோ, வளநாடும் உன்னதோ?' என்று கேட்டு விட்டு, 'குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு உண்டோ?' என்று இடித்துரைத்து விட்டு, கற்றவருக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு என்பதை நிலை நாட்டி விட்டார். எந்தச் சோழ வள நாட்டின் எழில் அனைத்தும் தம்முடைய அற்புதக் காவியத்தில் இறவாத சொற்சித்திரமாகத் தீட்டினாரோ அந்த வள நாட்டையே துறந்தார். வடக்கே சென்று விட்டார். காகதீய நாட்டுப் பேரரசனின் அன்பில் அவர் இப்போது திளைத்துக் கொண்டிருந்ததாகச் செய்தி வந்தது.

''கம்பர் நாட்டை விட்டுச் சென்றதால் சக்கரவர்த்திகளின் புகழுக்கே இழுக்கு நேர்ந்து விட்டதே! குடிமக்கள் பேசத் தொடங்கி விட்டார்களே!'' என்றார் விழுப்பரையர்.

சயங் கொண்ட சோழ வல்லபரின் முகம் சிறுத்தது. பற்களை நற நறவென்று கடித்த அவர், ''சக்கரவர்த்திகள் தியாக விநோதராக இருந்ததால் அந்தக் கம்பர் உயிரோடு நாட்டை விட்டு வெளியேறினார்!'' என்றார். ''நானாக இருந்திருந்தால் அந்தப் புலவரின் செருக்கை அரைக் கணத்தில் அடக்கி அவர் நாவைத் துண்டித்திருப்பேன்.''

விழுப்பரையரின் விழிகள் மின்னலெனப் பாய்ந்து குலசேகர பாண்டியரின் விழிகளைச் சந்தித்தன. 'கம்பரைப் போன்ற ஒரு மகாகவியையே சிறுமைப் படுத்தத் துணிந்த இவர் இருக்குமிடத்துக்கா பைந்தமிழ்க் குமரனை அழைக்க விரும்புகிறீர்கள்?' என்று அந்த விழிகள் அரசரைக் கேட்டன. பாண்டியர் அதைப் புரிந்து கொண்டு விட்டார்.

''அமைச்சர் அவர்களே!'' என்றார் அரசர். ''கவிஞர்களின் படைப்புச் செருக்குத்தான் அவர்களுடைய கற்பனை ஊற்று. ஆயிரமாயிரம் அரசர்களும் சக்கரவர்த்திகளும் இந்த மண்ணில் தோன்றுவார்கள்; மறைவார்கள். அரசுகளும் பேரரசுகளும் எழும்பி வளர்வதுமுண்டு; மறைந்து தேய்வதுமுண்டு. புவிச் சக்கரவர்த்திகளின் வாழ்வில் புல் பூண்டு முளைத்து விடுவது இயற்கை. ஆனால் கவிச்சக்கரவர்த்திகளின் கற்பனைச் செருக்கைக் காலனாலும் அழிக்க முடியாது.''

அமைச்சர் சயங்கொண்ட வல்லபருக்கு அதற்கு மேலும் அங்கு அமர்ந்திருக்கப் பிடிக்கவில்லை. தமது ஆசனத்திலிருந்து எழுந்தவாறே, ''கவிஞனை இங்கு அழைப்பது பற்றி அரசர் அவர்களின் முடிவான கருத்தை நான் அறியலாமோ?'' என்று கேட்டார்.

''இப்போது நாம் அழைக்க வேண்டாம். கவிஞர்களுடைய செருக்கோடு பொழுதுபோக்க நமக்கு நேரமில்லை. இளம் கவிஞராக இருப்பதால் உணர்ச்சி வயப்பட்டவராகவும் இருக்கலாம்'' என்றார் பாண்டியர்.

புயல் காற்றென அங்கிருந்து விரைந்தார் அமைச்சர். நேரில் அவனை வரவழைத்து அவன் செருக்கை அடக்க அவர் நினைத்த நினைவு ஈடேறவில்லை. மேலும் நாடாளும் வல்லமை பெற்ற பாண்டியரே ஏடாளும் புலவர்களிடம் இவ்வளவு பரிவு கொண்டிருந்தது அவருக்கு ஆத்திரமூட்டியது.

அமைச்சர் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த பாண்டியர் பிறகு விழுப்பரையரிடம் திரும்பினார். ''தாங்கள் எதற்காகத் தடுத்தீர்கள் என்று முதலில் புரியவில்லை. இப்போது நன்றாகப் புரிகிறது.''

'அரசே! தங்களுக்கே புரியாத மற்றோர் இரகசியமும் அதில் இருக்கிறது. அமைச்சர் மட்டுமென்ன? தாங்களும்

Light and soft through

Dralon®

A FIBRE OF
BAYER, GERMANY

® REGISTERED TRADE MARK OF
FARBENFABRIKEN BAYER AG LEVERKUSEN

ட்ராலான்®



இந்த அபூர்வமான
நூல் துணிமணிகளில்
மதிப்புமிக்கதான
'கார்டன்ஸ் ரோஸ்'
துணிமணிகளில்
உபயோகிக்கப்
பட்டிருக்கிறது.

ட்ராலான்®

'கார்டன்ஸ் ரோஸ்'
துணிமணிகளுக்கு நீங்கள்
விரும்பும் எல்லாவற்றையும்
கொடுக்கிறது.

* மிகவும் மென்மை மற்றும் குளுமை
* மடிப்புக்கலையாத தன்மை
* உண்மையிலேயே
கறைபடியாத தன்மை
* பட்டுப்போன்ற உணர்ச்சி,
எழிலான தோற்றம்

பல மனங்கவர் பாணிகள்
பிரபலமான கடைகளில்
கிடைக்கிறது.

தயாரிப்பவர்கள்.

தி கார்டன் ஸில்க் வீவிங் பேக்டரி, சூரத்.

வியாபார விபரங்களுக்கு:

பாரதி & கோ. கடியால் கல்லி,
முல்ஜி ஜேதா மார்க்கெட், பம்பாய்,

CBG-6 TAM

இப்போது அவரைக் காண முடியாது ; காணக் கூடாது!' என்று நினைத்துக் கொண்டார் விழுப்பரையர்.

திடீரென்று பாண்டியர் மற்றொரு சிக்கலை எழுப்பினார்: "ஏன், நாம் இருவருமே விரைவில் தென்பாண்டிய நாட்டுக்குச் சென்று அந்தப் புலவரைக் கண்டு விடுவோமே! எனக்கு ஏனோ சில தினங்களாகவே இப்படி ஓர் ஆவல் எழுந்து கொண்டிருக்கிறது."

விழுப்பரையர் சற்றே தடுமாறினார்: "காலம் வரும் போது அவரே இங்கு வருவார். அந்த நற்காலம் விரைவில் வரவேண்டுமென்று நாம் இறைவனை இறைஞ்சுவோம். தாங்கள் பணித்தால் முதலில் நான் தங்களது அன்பைச் சுமந்து கொண்டு அவரிடம் சென்று வருகிறேன்."

இதனால் பாண்டியர் மன நிறைவு கொள்ள வில்லை. அவருக்கே விளங்காத பாசம் ஒன்று அவரைப் பற்றிக் கொள்ளத் தொடங்கி விட்டது.

"போரில் நாடும் சுந்தர பாண்டியனும் வீழ்ந்த பிறகு எனக்கு மீண்டும் நம்மால் தலை தூக்கி எழுந்திருக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்படவில்லை. முதலில் மட்டியூரிலிருந்து வந்த செய்தியைக் கேட்டேன்; பிறகு மதுரைமா நகரத்தில் நடந்த அற்புதத்தைக் கண்டேன். விழுப்பரையரே! அந்தப் புலவர் வெறும் புலவரல்ல; தலைவர்!"

மெய் சிலிர்த்தது விழுப்பரையருக்கு.

பாண்டியர் தம்முடைய கழுத்தில் அணிந்திருந்த முத்தாரத்தை மெல்லக் கழற்றினார். கொற்கைச் சலாபத்தில் விளைந்த நன்முத்துக்கள் செறிந்த மாலை அது. சிறிது நேரம் அதையே உற்றுப் பார்த்து விட்டு, விழுப்பரையரிடம் கொடுத்தார்.

"இந்த மாலைக்கு என்னுடைய இதயத் துடிப்பின் இரகசியம் தெரியும். குடி மக்களுக்காக அது துடிக்கும் துடிப்பை இது உற்றுக் கேட்டிருக்கிறது. அதைப் போல் என் மன வேதனையையும் இது உணர்ந்திருக்கிறது. என்னைப் போல் துடித்து என் வேதனையில் பங்கு கொள்ள வந்த அந்த உத்தமனிடம் இதைக் கொண்டுபோய்க் கொடுங்கள்." பாண்டியரின் குரல் தழுதழுத்தது.

"அரசே! இறைவனின் கருணை எல்லையற்றது. அந்த ஊற்றுப் பெருக்கு எங்காவது ஒரு புறம் அடைபட்டுப் போனால், வேறொரு புறம் வேறோர் உருவில் அது பொங்கி எழுந்து விடுகிறது. ஆகவே தயவுசெய்து எதற்கும் கவலையுறாதீர்கள்."

"தாங்கள் சில தினங்களில் நெல்லைக்குப் புறப்பட்டுச் சென்று இதை அந்தப் புலவனுக்கு அளித்து வாருங்கள். புதுப் பொலிவோடு வளர்ந்து வரும் தலைநகரத்தைப் பற்றி அவரிடம் சொல்லுங்கள். அவர் எப்போது வந்தாலும் அரண்மனைக் கதவுகள் திறக்கப் பட்டேயிருக்கும் என்பதைக் கூறுங்கள்."

விழுப்பரையர் அந்த முத்தாரத்தைத் தம் கண்களில் ஒற்றிக் கொண்டார். அவரது விழிகளில் பிறந்த நன்முத்துக்களிரண்டு அதில் உதிர்ந்தன.

ஒன்பதாம் அத்தியாயம்

வந்தனள் ஒரு செந்திரு

வெற்றி கொண்ட வேகத்தில் காற்றைக் கிழித்துக் கொண்டு கடுகிப் பறந்தன இரண்டு குதிரைகள். அமைச்சர் சயங்கொண்ட சோழ வல்லபர் மதுரையை விட்டுப் புறப்பட்டு நான்கு தினங்களாகி விட்டன. அவர் இப்போது சோழ சாம்ராஜ்யத்தின் தலைநகரமான கங்கை கொண்ட சோழபுரத்தை நெருங்கிக் கொண்டிருந்தார்.

ஒற்றர் தலைவன் மாவலிராயனிடம் விரிவான ஓலை கொடுத்து அனுப்பியிருக்கலாம். அவர் அதை விரும்பவில்லை. சக்கரவர்த்திகளின் மனத்தில் ஆழப் பதியுமாறு நடப்பை எடுத்துக் கூற வேண்டும். வரப் போகும் ஆபத்தை அவருக்கு உணர்த்தி, அதற்கு உடனடியாக மாற்றுத் தேடுவதற்கு வழி வகை செய்ய வேண்டும். இனியும் அந்தப் புலவனைப் பாண்டிய நாட்டுக்குள் நடமாட விட்டுக்கொண்டிருந்தால், பிறகு அவன் தன்னுடைய ஆற்றலால் மக்களை எந்தப் பக்கம் திருப்பி விடுவான் என்று சொல்ல முடியாது. தலைக்கு மேல் வெள்ளம் கரைபுரண்டு விட்டால் பிறகு சக்கரவர்த்திகளின் முகத்தில் விழிப்பதே இயலாத காரியம்.

முதன் முதலில் அவனைப் பற்றிய தகவல் கிடைத்தபோது, 'திருவிழாக் கூட்டத்தில் தன் புலமையை விலை கூற வந்திருப்பான்' என்றுதான் அலட்சியமாக நினைத்தார். அவனைப் பிடித்து வரச் செய்த முயற்சி தோற்றபோது கூட அவருக்குக் கவலையில்லை. ஆனால்

அவனுக்காகவே திருவிழாக் கூட்டம் கூடுவதையும், அவன் சொல் கேட்டுத் தன் உடைமைகள் அனைத்தையும் வழங்குவதையும் கேட்டபோதுதான் அவரை அச்சம் பற்றிக் கொண்டது. பாண்டியருக்கு அவன் அனுப்பிவைத்த பொருட்குவியலைப் பார்த்தபோது, அவனையல்லவோ நாடாளும் மன்னனென்று மதிக்க வேண்டியிருக்கிறது!

கங்கை கொண்ட சோழபுரம் எப்போதுமே விழாக் கோலம் பூண்டது போல் காட்சியளிக்கக் கூடிய ஒரு பெரு நகரந்தான். ஏனோ இப்போது அது உண்மையிலேயே விழாக் கோலம் பூண்டு விளங்கியது. பணியாளர் பலர் கூட்டம் கூட்டமாகக் கூடி நகரத்தை மும்முரமாக அலங்கரித்துக் கொண்டிருந்தனர். சோழ சாம்ராஜ்யத்தின் புலிக் கொடிகளோடு சேர்ந்து கோசல (ஹொய்சால) சாம்ராஜ்யத்தின் புலித் தலை பொறித்த கொடிகளும் ஒன்றாக இணைந்து பறந்தன.

ரதத்தை நிறுத்தி, வழியில் தென்பட்ட மனிதரிடம் காரணத்தைக் கேட்டார் அமைச்சர்.

''கோசல சாம்ராஜ்யத்திலிருந்து சக்கரவர்த்திகள் வல்லாள தேவருடைய திருக் குமாரன் இங்கு வருகை தரப் போகிறார்'' என்று பதில் வந்தது.

''என்ன! வீர நரசிம்மர் துவார சமுத்திரத்திலிருந்து இங்கு வரப் போகிறாரா?''

''ஆமாம்.''

''ரதம் மெதுவாகச் செல்லட்டும்'' என்று சாரதியிடம் கட்டளையிட்டுவிட்டு, இருக்கையில் மெல்லச் சாய்ந்துகொண்டார் சோழ வல்லபர். குலோத்துங்க சோழரின் கவனமெல்லாம் இப்போது தமது நெருங்கிய உறவினரும் உற்ற துணைவருமான வீர நரசிம்மரை வரவேற்பதில் திரும்பி யிருக்கும். அவர் செய்திருக்கும் பிரம்மாண்டமான வரவேற்பு ஏற்பாடுகளிலேயே அவருடைய உள்ளத்தின் பூரிப்பு வெளிப்பட்டிருந்தது. உறவின் பூரிப்பா? அல்லது இராஜதந்திரமா? குலோத்துங்கரைப் பொறுத்தவரை இராஜ தந்திரமில்லாத செய்கை எதுவுமே இருக்க முடியாது.

வடக்கில் சளுக்க நாட்டையே விழுங்கி விட்டு உருவாகியிருந்த கோசல சாம்ராஜ்யத்தை அவர் எவ்வளவு லாகவமாக வளைத்துத் தம் கைக்குள் போட்டுக் கொண்டு விட்டார்!

வரப் போகும் விருந்தினரின் தந்தையான வல்லாளதேவர் பெயரில் மாத்திரம் வல்லாள தேவரல்லர், செயலிலும் வல்லாள கண்டர். வடக்கில் சளுக்க சாம்ராஜ்யத்துக்குக் கடைசி அடி கொடுத்து நொறுக்கி விட்டு, தெற்கில் குலோத்துங்கரின் கழுத்தைப் பிடிக்கக் காத்திருந்தார் அவர். சிறிதளவு குலோத்துங்கர் அயர்ந்திருந்தாலும், வல்லாளருடைய புலித் தலைக் கொடி சோழ நாட்டின் புலிக் கொடியை விழுங்கி விட்டிருக்கும்.

வல்லாளர் முந்திக் கொள்வதற்கு முன்பு, தாமே அவருடைய சிற்றரசான அதிகைமான்மீது படையெடுத்து அவனைத் தகடூரில் முறியடித்தார். அவனுக்காகப் பரிந்து கொண்டு வல்லாளர் பாய்ந்து வந்தபோது, வெற்றி பெற்றவர் என்ற செருக்கை விடாமல் அவரிடம் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். தம்முடைய தங்கையாகிய சோழமாதேவியை அவருக்கு மணம் முடித்துக் கொடுத்து, வலிமை வாய்ந்த ஒரு பகைவரைத் தமக்கு மைத்துனராக்கிக் கொண்டார்!

அந்தக் காலத்தில் சோழ நாட்டு அதிகாரிகள் தங்களுக்குள் பேசி நகைத்துக் கொள்ளும் பேச்சு இப்போது சோழ வல்லபரின் நினைவுக்கு வந்தது.

''கோசல நாட்டு வல்லாளதேவரோ லட்சம் போர்களுக்கு மேல் பலி கொடுத்துச் சளுக்கர்களை முறியடித்தார். அடுத்தாற்போல் நம்மையும் முறியடித்திருப்பார். ஆனால் நம்முடைய சக்கரவர்த்தியோ இளவரசியாரை ஆயுதமாக வைத்துக் கொண்டு அவரை ஒரே வீழ்த்தாக வீழ்த்தி விட்டார். இளவரசியாரின் கண் வலைக்குள் அவரைத் தள்ளி விட்டுத் தமக்கு அடிமையாகவே செய்து விட்டார்! நம் சாம்ராஜ்யத்தைப் பகைவர்களிடமிருந்து காக்கும் பொறுப்பும் இப்போது வல்லாளதேவருக்கு ஏற்பட்டு விட்டது!''

ஆமாம், பெண்ணைக் கொடுத்ததோடு நிற்காமல், அவருக்குச் 'சோழ சாம்ராஜ்யப் பாதுகாப்பாளர்' என்ற ஒரு விருதுப் பட்டத்தையும் சூட்டி விட்டு, அவரை நன்றாகவே வளைத்துக் கொண்டு விட்டார் குலோத்துங்கர். அந்த உறவு முதிர்ந்து அடுத்த தலைமுறையிலும் கனிந்து குலுங்கத் தொடங்கி விட்டது.

அமைச்சரின் கடைவாயில் ஒரு செருக்குப் புன்னகை நெளிந்தது : 'குலோத்துங்கருக்குப் பிறகும் எங்கள் சாம்ராஜ்யத்தை யாராலுமே அசைக்க முடியாது. இராஜ இராஜர் காலத்தி

இந்தக் கதையில் வரும் இளவரசி பாமினியைத்தான் இவ்விதழ் அட்டைச் சித்திரமாகத் தீட்டித் தந்திருக்கிறார் ஓவியர் வினு.

லும் அவருக்குத் துணையாக வீரநரசிம்மர் தோள் கொடுத்து நிற்கப் போகிறார். கேவலம், பாடிப் பிழைக்கும் புலவனையும் படையில்லாப் பாண்டியரையும் பெரிதாக மதித்து நான் இங்கு வந்திருக்கிறேன்!"

வீர நரசிம்மருக்கு ஒரு புதல்வி இருப்பதையும் அவளைத் தமது குமாரன் இராஜ இராஜனுக்கு மணம் முடிக்கக் குலோத்துங்கர் முயற்சி செய்ததையும் நினைந்துக் கொண்டார் அமைச்சர். முயற்சி வெற்றி பெறாததால் சோழ நாட்டு உறவுப் பெண்ணையே மணம் முடிக்க வேண்டிய அவசியம் வந்து விட்டது. என்றாலும் அந்த ஆவல் இன்னும் குலோத்துங்கருக்குத் தீரவில்லை. இராஜீய உறவுகளுக்காகப் பல பெண்களை அரசர்கள் மணந்து கொண்ட காலம் அது. ஆகவே, இனியும் குலோத்துங்கர் அந்த எண்ணத்தைக் கைவிட்டிருக்க மாட்டார்.

சிங்காபுரி அரண்மனையை நோக்கி அமைச்சரின் ரதம் சென்ற போது, எல்லோருமே நகரத்தின் வடக்குப்புற வாசலுக்குச் சென்றிருப்பதாகத் தகவல் கிடைத்தது. ரதத்தில் சிறிது தூரம் கூட வடக்கே அவரால் செல்ல முடியவில்லை. காஞ்சிபுரத்து ராஜ பாட்டையை இருபுறமும் அடைத்துக் கொண்டு குழுமியிருந்தது மக்கள் கூட்டம். வடக்குப்புற மதிலுக்கப்பால் விருந்தினர்களை வரவேற்கச் சக்கரவர்த்திகள் தம் குடும்பத்தாரோடும் பரிவாரத்தோடும் காத்திருந்தார்.

யானைகள் மலர் தூவி ஒலி எழுப்பப் பழகியிருந்தன. பல்வகை வாத்தியங்களோடும் இசைவாணர்கள் சித்தமாக இருந்தார்கள். சக்கரவர்த்திகளே நேரில் இருந்து கடைசி நிமிஷக் கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார். இளவரசன் இராஜ இராஜன் கண்ணிமைக்க மறந்து போய் நெடுஞ்சாலையில் தன் பார்வையைச் செலுத்தியிருந்தான்; வீர நரசிம்மர் தனியாக வரவில்லையாம். தம்முடைய குமாரத்தி பாமினியையும் அழைத்துக் கொண்டு வருகிறாராம்!

அவ்வளவு சுறுசுறுப்புக்கிடையிலும் குலோத்துங்கர் சயங்கொண்ட சோழ வல்லபரைக் கண்டுவிட்டார். அருகில் சைகை செய்து அழைத்து, "நல்ல நேரத்தில்தான் நீரும் வந்திருக்கிறீர்! மற்ற விஷயங்களை மெதுவாகப் பேசுவோம். முதலில் வரவேற்பைக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்றார்.

தொலை தூரத்தில் குதிரைகளின் குளம்பொலி கேட்டது. வேல் பிடித்த குதிரை வீரர்கள், வேல் முனைகளில் புலித்தலைக் கொடிகள் பறக்க, விரைந்து வந்து சேர்ந்தனர். அவர்களை அடுத்துச் சோழ நாட்டு வீரர்கள் வந்தனர். அவர்களையும் அடுத்து நான்கு வெண் புரவிகள் பூட்டிய அற்புதமான பெரிய ரதம் ஒன்று வந்தது. பட்டும் மணிகளும் கொடிகளும் நிறைந்த கண் கவரும் வனப்புள்ள ரதம் அது. காற்றில் மிதந்து வரும் தோற்றத்தில் அது வெண் புரவிச் சிறகடித்துக் கங்காபுரியின் புற வாயிலை நெருங்கிக் கொண்டிருந்தது.


வாழ்த்தொலிகள் விண்ணதிர எழுந்தன.

அருகில் வந்து நின்ற ரதத்தின் பூந்துகில் மெல்ல ஒதுங்கியது. பக்கத்திலிருக்கும் யாழை விட்டுப் பிரிய மனமில்லாதவள் போல் மெல்ல அதனை ஒரு முறை தடவிக் கொடுத்து விட்டுக் கீழே இறங்கினாள் ஓர் இளநங்கை. வெண் தாமரையில் வீற்றிருந்த கலைமகள் களி துலங்கும் புன்னகையோடு எழுந்து வருவதுபோல், செஞ்சாந்து பூசிய பாதங்கள் இரண்டையும் தரையில் ஊன்றி மெல்லச் சரிந்து நின்றாள். மென்மையும் நளினமும் பூத்துச் சொரிந்த அவளது வண்ண உடலைச் சுமப்பதே அவளுக்கு ஒரு பாரமாகத் தோன்றியது போலும். கனவு காணும் கடல் போன்ற கரு நீல விழிகள், மாதுளை மலர் போன்ற இதழ்கள், கனகத்தால் உருக்கி வார்த்து அதனிடை குழைவையும் கனிவையும் சேர்த்தது போன்ற பொன் மேனி அவளுக்கு. திடீரென்று ஏதோ ஒரு புதிய உலகத்துக்குப் பறந்து வந்திருக்கும் அன்னப் பறவை போன்று அவள் மெய்ம்மறந்து ஒரு கணம் அங்கு நின்றாள்.

மறுகணமே ரதத்தின் மறுபுறத்திலிருந்து இறங்கினார் அவளுடைய தந்தையான வீரநரசிம்மன். அவளுக்குப் பதினேழு அல்லது பதினெட்டு வயதிருக்கலாம். அவருக்கும் நாற்பதுக்கு மேல் இருக்காது.

இராஜ இராஜன் அவளைக் கண்டவுடனேயே கிறங்கி விழுந்து விடுகிறவனைப் போல் தடுமாறினான். குலோத்துங்கர் வீர நரசிம்மனைத் தமது பரந்த மார்பில் அணைத்துக்கொள்ள, அவரது தேவியார் பாமினியை அன்போடு தழுவிக் கொண்டார்.

மலர் மாரி பெய்த வண்ணமாகவே இருந்தது. **(தொடரும்)**


ராஜபோகம்-1
கதை: தம்பு
சித்திரம்: செல்வம்
சென்னை மவுண்ட்ரோடு 'ரவுண்ட் டாணு'வில் ஒரு நாள் மாலை...
இன்று தான் 'டிரை க்ளீனிங்' பண்ணி வந்த புடவையைக் கட்டிக்கொண்டு வந்துவிட்டேனே! இந்தக் கூட்டத்தில் கசங்கிப் போய்விடுமே!
நாற்பது, நாற்பத்தி ஒன்று, நாற்பத்திரண்டு... புற்றீசல் மாதிரி என்ன ஜனக்கூட்டம்! இப்போதெல்லாம் ஸ்திரீகள் பிள்ளை பெறுவதில்லை; குட்டி போட்டுத் தள்ளுகிறார்கள் போலிருக்கிறது!



போலீஸ் காரர்கள் கை காண்பித்
ததும் ஜனங்கள் சாலையைக்
கடக்கிறார்கள்.
அன்ன நடையல்லவா
பயிலுறாங்க!
நமது கதாநாயகன் நிதானமாக
ஏதோ யோசனையாய் நடக்க...
தம்பி! "தின மரணம்"
பத்திரிகையில் உன்
போட்டோ வரவேண்டும்
என்று ஆசைப்படுகிறாயா?
தங்களைக் கேலி செய்தவர்களைக்
கோபத்துடன் முறைத்துப் பார்த்தபடி
இருவரும் எதிரே கவனியாமல்
விரைந்து செல்ல...


மன்னிக்கணும், மன்னிக்கணும்!
மன்னிக்கணும்!
ஹாரன்கள் அலறுகின்றன.
என்னய்யா! நடு ரோட்டிலே நாடகமா ஆடறீங்க? வழியை அடைச்சுக்கிட்டு?
ஹிஹ்ஹிஹி! நீங்கள் வரதைக் கவனிக்கலே! ஹிஹி... ஹி..
கம் ஆன்! கம் ஆன்! உங்களைப் பார்த்தால் படிச்சவங்க மாதிரி தெரியறது. இப்படி டிராபிக்கை ப்ளாக் பண்ணினால் எப்படி?
நிலைமையை உணர்ந்து அவசரம், அவசரமாக நடக்கும் நம் கதா நாயகனை அந்தப் பெண் பின் தொடர்கிறாள்!
இவள் எதற்கு என்னைப் பின் துரத்திக் கொண்டு வருகிறாள்? தப்பி ஓட வேண்டியதுதான்!
அடாடா! கொஞ்சம் நில்லுங்கள்!
நில்லுங்கள்! நில்லுங்கள்!
(தொடரும்)

கட்டாவ் வாயில்கள்

அருணோதயம்முதல் அந்திவரை எந்நேரத்திலும் எவ்விடத்திலும் எச்சந்தர்ப்பத்திலும்....

கட்டாவ் வாயில்களினால் உங்கள் எழில் மேம்படுவதைக் காண்கிறீர்கள்



* எதிர்காலத்துக்கு முதலீடு— தேசியப் பாதுகாப்புப் பத்திரங்களை வாங்குங்கள்

கட்டாவ் துணிகளின் ஓரத்தில் ஒவ்வொரு மீட்டர் அளவிலும் ''கட்டாவ் மில்ஸ்'' என்ற வார்த்தைகளைக் கவனிக்கவும்

தி கட்டாவ் மகன்ஜி ஸ்பின்னிங் அண்டு வீவிங் கம்பெனி லிமிடெட்

தலைமைக் காரியாலயம்: லக்ஷ்மி பில்டிங், பல்லார்ட் எஸ்டேட், பம்பாய்-1 மில்கள் ஹெயின்ஸ் ரோடு, பைகுல்லா, பம்பாய்-27 மொத்த விற்பனை நிலையம்: கோவிந்த் சவுக், முல்ஜி ஜேதா மார்க்கெட், பம்பாய்-2 சில்லறை விற்பனை நிலையம்: 216, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை-1

SISTA'S-KMS-307 A



துளசிஹாரமும் முத்து மாலையும்

'**பச்சை**' என்று ஒரு ஸ்தூல வர்ணமாகச் சொல்ல முடியாமல் அந்த வண்ணத்தின் ஜீவனான பசுமையைப் பெருக்குவது துளசி. புஷ்பத்துக்குத் தனி விசேஷமின்றி இலைகளெல்லாமே புஷ்பங்களாகப் பொலிகிற புனிதச் செடி அது. ரஸத்திலும் மணத்திலும் காரம் என்று சொல்லிவிட முடியாமல் புனிதமான ஒரு விருவிருப்பு கொண்ட திவ்வியச் செடி துளசி.

கர்நாடக சங்கீத உலகிலும் ஒரு துளசி உண்டு. ஆம், துளசியின் மறுபெயர் ஸ்ரீமதி பிருந்தா அவர்களுக்கு அமைந்திருப்பது எவ்வகையிலும் பொருத்தம். பாட்டு என்றும், கானம் என்றும், கீதம் என்றும், சங்கீதம் என்றும் சொன்னால் கூடப் போதாது; நாதம் என்றே சொல்லவேண்டும் இவரது இசையை — பச்சைக்கு மேம்பட்ட பசுமையை. ராக ஆலாபனை அழகா, நிரவல் விஸ்தாரம் அழகா, ஸ்வரப் பிரஸ்தாரம் அழகா, பாவம் அழகா என்றெல்லாம் இங்கு அரும்பையும், மலரையும், கனியையும் ஆராய வேண்டாம். இலையெல்லாமே மலரான துளசி போல் அத்தனையும் அழகானவை. துளசியின் அதே விருவிருப்பான மணமும் சுவையும் செறிந்த சாரீரம். இந்தத் துளசி ஹாரத்தோடு அமைதி யொளி கொண்ட முத்து மாலையாகச் சேர்ந்திருக்கிறார் ஸ்ரீமதி முக்தா அவர்கள். பிருந்தாவன சஞ்சாரியான பரந்தாமனுக்கு மிகவும் பிரியமான துளசி மாலையும் அதனிடையே சாந்தப் பிரகாசம் வீசும் முக்தா ஹாரமும் போல் இசைப் பொருளை இரு சோதரியரும் அலங்கரித்து வருகிறார்கள்.

இசையினாலேயே திவ்விய தரிசனம் பெற்ற வீணை தனம்மாளின் பரம்பரையில் நல்லதனமாக வந்து சேர்ந்தவர்கள் பிருந்தா—முக்தா. இன்னொரு பெரும் கிளை ஸ்ரீமதி ஜயம்மாள். அது இமய பர்வதமாக—கம்பீரத்தில் நவினம் கூடி—விளங்குகிறது. இதுவோ இமயத்தில் பிறந்த கங்கையாக—நவினத்தில் கம்பீரம் கூடி—விளங்குகிறது.

சென்ற ஆகஸ்ட் இருபத்தெட்டாம் தேதியன்று தியாகராய நகரத்தில் கிருஷ்ணகான சபையில் இந்த நவின கம்பீரத்தைப் பருகும் வாய்ப்புக் கிட்டியது.

சபைக்குள் நுழையும் போது பிருந்தாவின் மங்களம் பொலிந்த குரலில் மங்களமான சுருட்டி வர்ணம் காதில் பாய்ந்தவுடனேயே எல்லையற்ற விச்ராந்தி உண்டாயிற்று. உடனேயே நாத அநுபவம் தொடங்கி விட்டது. குரல் வேறு சங்கீதம் வேறல்ல என்னுமாறு இரண்டும் ஒன்றிய சாரீரம். அதே போல் சங்கீதம் வேறு, அதனால் ஏற்படும் உணர்ச்சி வேறு என்று சொல்ல முடியாத அரிய இசை.

இது ஒரு நுட்பமான விஷயம். ஒரு மகா வித்வானின் இசையைக் கேட்கிறோம். மனத்தில் ஒயிலான ஓர் இன்பம் உண்டாகிறது. இன்னொரு மகா வித்வானின் இசையைக் கேட்கிறோம். மனத்தில் சோகம் பிரதானமாக பக்தி இன்பம் உண்டாகிறது. வேறொரு பெரும் இசைக் கலைஞரின் கானத்தைக் கேட்கும் போது மகோன்னதம் செறிந்த ஞானமயமான இன்பம் உண்டாகிறது. ஆனால் பிருந்தாவின் இசையில் ஏற்படும் அநுபவத்தை மனோரஞ்சிதம் என்றோ, பக்தியின் சோக

மாகவோ, ஞான சம்பிரமாகவோ, வேறு ஆத்ம சம்பத்தாகவோ கூறுவதைவிட இது **சங்கீதமான அநுபவம்** என்றே சொன்னால் தான் பொருத்தமாகத் தோன்றுகிறது. இதனால்தான் போலும், உருக்கத்திலும் உணர்ச்சியிலும் தேறிய வித்வான்களும்கூட சங்கீத சூட்சுமங்களுக்கு ஸ்ரீமதி பிருந்தாவைக் கேட்கிறார்கள்.

இந்த சங்கீத அநுபவத்தின் இயல்பு விச்ராந்தி என்பதே. பரபரப்படையச்செய்து கிளர்ச்சியினால் ஆகர்ஷிக்கக் கூடிய சங்கீதத்தை விடப் பரபரப்புக்களை அடக்கி சாந்த சுகத்தைத் தரும் சங்கீதம்தான் உண்மையானது. சுருதிமயமான பிருந்தாவின் சாரீரத்துக்கு ஏற்ற சங்கீதம் இதுவே. அதே சமயத்தில், சரளமாக உருண்டு முத்துக்களைப் புரளவிடும் சாரீரம் வாய்ந்த பிருந்தாவினால் டெம்போ உண்டாக்க முடியாதென்பதில்லை. அன்றைக்கு (வழக்கமாக நாம் கேட்கும் பிம்பிளாஸுக்கு மாறாக) முழுக்க முழுக்க ஆபேரி சொட்ட அவர் பாடிய 'நகுமோமு' எத்துணை விறுவிறுப்பா யிருந்தது! பிராணனையே சுண்டி விடும் 'பருலன மாட...... பிராணநாயகா'வில் 'டெம்போ'வுக்கு என்ன குறைச்சல்! ஆனால் அமைதியை அழுத்திக் காட்டுவதற்கு அநுகுணமாகவே விறுவிறுப்பை உபயோகிப்பது தனம்மாள் பரம்பரையின் சம்பிரதாயம். இந்த அமைதியின் அங்கமான மோனத்தையும் ஆங்காங்கு கானத்தில் கலந்தளித்த பிருந்தா ஓர் அதிசய அநுபவத்தை உண்டாக்கி விட்டார்!

இந்தச் சம்பிரதாயத்தின் மற்றொரு தனிச் சிறப்பு : கன — நய, பிரு — சுரு வேலைப் பாடுகள். பசும் குழந்தையின் நெளிவு சுளிவு தெரிந்து அன்னையானவள் அதன் தலையிலும், கழுத்திலும், இடுப்பிலும், இதர அங்கங்களிலும் எவ்வளவு அழுத்தம் கொடுக்கலாமோ அவ்வளவையே பக்குவமாகத் தந்து, அணைத்து, தூக்கி வைத்துக் கொள்வதுபோல் ஸ்வரங்களின் இயல்புகளை வெகு நுணுக்கமாக அறிந்து அவைகளுக்கு எப்படி கனம் கொடுப்பது எப்படி நயம் கொடுப்பது, எங்கே பிருவாக்கலாம் எங்கே சுகமாக்கலாம் என்று அறிந்து சீராட்டுபவர் ஸ்ரீமதி பிருந்தா. எவ்வளவு பிரு இருந்தாலும் முடிவில் கேட்போர் உள்ளத்தில் நெகிழ்ச்சியே பரவியிருக்கும். கால் பெருவிரலில் வாழை நாரைச் சுருக்கேற்றி அதில் நிலசம்பங்கியை வைத்துச் சுற்றி பிருவாக இழுத்துத் தொடுப்பார்கள். சிறிது பிரு குறைந்தால் மலர்கள் உதிர்ந்து விடும்; சிறிது அதிகமானாலோ பிய்ந்தே விடும். தரமறிந்து பிருவைத் தந்து மாலை தொடுத்தபின், அந்த மாலை சுகமாகத் துவளவில்லவா செய்கிறது? இப்படியே பிருவினால் சுகத்தைத் தோற்றுவிக்கும் சுகந்த ஸ்வர மாலை தொடுக்கிறார் பிருந்தா. ஆஹா, அன்றைய லதாங்கியில் — ஆலாபனை, கிருதி, ஸ்வரம் — யாவற்றிலும் இந்த அழகு எப்படிப் பொலிந்தது? தேர்ந்த வியாபாரி கண்ணோட்டத்திலேயே 'இதன் எடை இவ்வளவு' என்று தெரிந்து, பொருட்களைத் தராசில் நிறுப்பது போல், இன்ன ராகத்தில் இன்ன ஸ்வரத்துக்கு இன்ன அழுத்தமும், இன்ன குழைவும்தான் இருக்கலாம் என்று நிச்சய புத்தியுடன் தெளிந்து, சரி எடையாக அவற்றை நிறுத்துத் தரும் அழகை என்னென்பது? இது பாரம்பரியமாகவோ அல்லது அருள் மூலமாகவோதான் உண்டாகக் கூடிய ஞானம். இரண்டும் பெற்ற முக்தா—பிருந்தாவுக்கு உழைப்பு, ஆராய்ச்சி இவையும் துணை நிற்கின்றன. எனினும் உழைத்துப் பாடும் பாட்டாக இல்லாமல் தானாகவே இவர்கள் மூலம் நாதம் பெருகி வருவது போன்ற உணர்ச்சிதான் உண்டாகிறது.

கச்சேரியில் ஒவ்வொரு உருப்படியாகச் சொல்லத் தேவையில்லை. எங்கும் அமுதமாயிருந்தது. சாதாரணமாக ஸ்ரீமதி பிருந்தாவின் இசையில் உள்ளதாகச் சிலரால் கூறப்படும் 'கத்திரிப்பு'கூட இல்லாமல் ஒரே தைல தாரையாயிருந்தது. அர்ஜுனனின் அம்பு அதல பாதாளத்தில் நின்னென்று பாய்ந்து கங்கையை வாரிச் சொரிந்தாற் போல் ஸ்வச்சமான மந்தர ஸ்தாயி சஞ்சாரங்களில் இசையமுதம் பீறிட்டு வந்தது. ஸ்ரீ தீக்ஷிதரவர்கள் விஸ்தாரமான பிராகாரங்களுடனும், மகோன்னதமான கோபுரங்களுடனும் கூடிய சிவாலயமாக அமைத்த கிருதி 'அக்ஷயலிங்க விபோ'. ஆலயத்தில் இறைவனின் சந்நிதானமாக, 'அக்ஷர ஸ்வரூபா... ஆருட விருஷவாஹ' என்ற இடமும், விமான கலசமாக 'ஸாது ஜனோபேத' என்ற இடமும் அமைந்துள்ளன. இந்தக் கிருதியின் முழுப் பெருமையும் புலப்படப் பாடினர் பிருந்தா—முக்தா. கிருஷ்ண கான சபையில் கிருஷ்ண ஜயந்தித் தொடரில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் 'சேதஸ்ரீ பாலகிருஷ்ணம்' என்ற தனிமையமான கிருதி உள்ளத்தைச் சூழ்ந்து கொண்டு சுகந்தம் கமழ்ந்ததில் வியப்பில்லை.

பியாகடை, முகாரி, காம்போதி ராகங்களைப் பிழிந்து பிழிந்து ரஸப் பிரவாகமாக க்ஷேத்ரக்ஞரின் பதங்களைப் பாடிய போது, 'ஆஹா நாம் சந்தோஷிப்பது இருக்கட்டும் ; கிருதிகளை இயற்றியவர்கள் எப்படி மகிழ்வார்கள்?' என்று எண்ணத் தோன்றியது. அடுத்துப் பாடிய ராகமாலிகை விருத்தத்தில், ஒரே பேரலை சுருண்டு புரண்டு மடிந்து நகர்ந்து கொண்டே வந்து, இறுதியில் துவானமாகச் சிதறி விட்டு, நம் பாதங்களையும் நின்னடி மண்ணில் சொருகி விட்டுப் போவது போல் ஒரே சஞ்சாரத்தில் வராளி, சாவேரி, மத்யமாவதி முதலிய அலைகள் பூரண ஸ்வரூபமாக விரிந்து பரந்து பாய்ந்து வந்து நம்மை நாதாநுபவத்தில் சொருகிச் சென்றன. கௌரவத்துக்கு இலக்கணமாக அமைந்த பேஹாக்கை என்னென்பது ? 'மந்திரங்களைக் கண்டு பிடித்த முனிவர்களுக்குச் சமமாக ராகங்களைக் கண்டு பிடித்த நாத உபாஸகர்கள் இந்த இசையைக் கேட்டால் எப்படி மகிழ்வார்கள்?' என்று நினைத்து உவகை அடைய முடிந்தது. சபை மேடையை அலங்கரித்த சங்கீதத் திரிமூர்த்தியரின் சித்திரங்களில் அப்போது கண்ட புதிய பிரகாசத்துக்கு மேலாக நிகழ்ச்சிக்கு வேறு நற்சான்று தேவையில்லை.

—''**கன்யா**''

குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ ஃபாஸ்ஃபோமின்

உங்கள் குடும்பத்தினர் அனைவரும் வலிவும் ஆரோக்கியமும் பெற்றுத் தெம்புடன் திகழ வைட்டமின் 'பி' காம்ப்ளெக்ஸ் மற்றும் பலவகை கிளிஸரோ ஃபாஸ்பேட்கள் கலந்துள்ளது.

ஃபாஸ்ஃபோமின் அருந்தி வந்தால் களைப்பும் சோர்வும் உங்களை அணுகாது. களைப்பை நீக்கும். பசியைத் தூண்டும். வலிவை பெருக்கும். நோய்களை எதிர்க்கும் சக்தியை அளிக்கும். குடும்பத்தினர் அனைவரும் ஆரோக்கியமாய் வாழ உதவுவது பழரஸ மணம் கமழும் பச்சை நிற வைட்டமின் டானிக் ஃபாஸ்ஃபோமின்.



SQUIBB

A Century of Experience Builds Faith

Sarabhai Chemicals



8. காவலனாய் மாறிய கைதி!

யூசப்கான் சிரித்துக் கொண்டேயிருந்தான். செத்திருக்க வேண்டியவன் சிரிப்பதைக் கண்டு திகைத்தார்கள் போர்ச்சுகீசியர். அவன் சிரிப்பு அவர்களைச் சிந்திக்க வைத்தது. இவ்வளவு சித்திரவதைகளையும் தாங்கிக் கொண்டு ஒருவன் பிழைத்திருப்பதோடு எதையும் பொருட்படுத்தாது சிரிப்பதென்றால், அவன் மனிதன்தானா, அல்லது...?

பேரலை யொன்று பொங்கிக் குமுறியபோது கப்பல் பேயாட்டம் போட்டது. மின்னலொன்று வெள்ளியாக உருகி ஓடிற்று. அதன் வெளிச்சத்திலே யூசப்கானின் உருவம் பயங்கரமாகத் தோற்றமளித்தது. ஆனால் அவனைப் பார்த்துக்கொண்டு சிந்தனையில் ஈடுபடப் புயல் போர்ச்சுகீசியர்களுக்கு இடங்கொடுக்கவில்லை. கப்பலில் இங்குமங்குமாக அவர்களை ஓட வைத்துக் கொண்டிருந்தது. ஓடி ஓடி அவர்கள் ஓய்ந்து போனார்கள்.

காற்று களைப்படைந்த போது, அலைகளுக்கு அயர்வு மிகுந்த போது புயல் ஓய்ந்தது. கடல் அமைதியடைந்தது. மேகத்தின் கருமை கலைந்தது. களங்கமற்ற வானத்திலே நிலவு தலை நீட்டிப் பார்த்தது. திரைச் சீலையிலே எழுதிய சித்திரத்தைப் போல இப்போது கப்பல் ஆடாமல் அசையாமல் மிதந்து கொண்டிருந்தது. புயலைப் போலவே புயலுக்குப் பின் தோன்றிய அந்த அமைதியும் அச்சமூட்டுவதாக இருந்தது. புயலிலே அல்லலுற்ற மாலுமிகள் அங்கங்கே மயங்கிக் கிடந்தார்கள்.

பாமினிப் பாவை

கௌசிகன்

கப்பல் தலைவன் தன் அறையிலிருந்தபடி அமைதியுற்ற கடல்வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பார்வையில் கைகளையும் காலையும் பரத்தியபடி மரணக் கம்பத்தில் கட்டுண்டு நிலவில் குளித்துக் கொண்டிருக்கும் யூசப்கான் சிக்கினான். அவனையே பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு என்ன தோன்றியதோ? இத்தனை புயலிலும் மழையிலும்கூட அதே நிலையில் அவனை விட்டு வைத்திருந்ததற்காக அவனிடம் பரிதாபம் கொண்டானோ என்னவோ! யூசப்கானை அந்தர நிலையிலிருந்து அவிழ்த்துக் கப்பல் தளத்திலே கிடத்தி, அவனது ஒரு காலை மட்டும் அந்தக் கம்பங்களில் ஒன்றோடு சங்கிலியால் பிணைக்கும்படி உத்தரவிட்டதோடு உணவளிக்கும்படியும் கூறினான்.

சவுக்கடியிலிருந்து விடுதலை கிடைத்தது யூசப்கானுக்கு. கம்பத்திலே சாய்ந்தபடி கால் நீட்டி உட்கார்ந்திருந்தான். கட்டுண்ட நிலையில் கசையடியையும் பொருட்படுத்தாதவனுக்குக் கட்டவிழ்த்து விட்ட போது உடலெல்லாம் ரணமாக வலிக்கலாயிற்று. துடைக்கப்பட்ட கண்ணாடியிலே துல்லியமாகத் தெரியும் பிம்பத்தைப் போல, புயலால் புதுப்பிக்கப்பட்ட ஆகாயத்திலே பவனி வந்து கொண்டிருந்தது நிலவு. அந்த அமைதியான இரவில் கப்பலே உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது, யூசப்கானைத் தவிர. உணர்விழந்து பல நாட்கள் உறங்கிக் கிடந்தவன் இப்போதுதானே விழித்துக் கொண்டிருக்கிறான்! இனி இப்போதைக்கு அவனுக்கு உறக்கமேது?

கப்பலைத் திசை பார்த்துச் செலுத்தும் சுக்கானைப் பிடித்தபடி தூங்கி வழியும் அந்த ஒற்றை மாலுமியையும் உறக்கம் தெளிந்து உட்கார்ந்துள்ள யூசப்கானையும் தவிரக் கப்பலில் அத்தனை பேரையும் அசதியும் உறக்கமும் ஆட்கொண்டிருந்தன. நிலவு தேய்ந்து மறைந்த நீல வானத்திலே வைரங்களை வாரி இறைத்திருந்தாள் இயற்கையன்னை. கண் சிமிட்டிக் கதை பேசும் நட்சத்திரங்களைப் பார்த்தபடியே தன்னைப் பற்றிய சிந்தனையிலே லயித்துக் கிடந்தான் யூசப்கான். கைதியாகியுள்ள தான் இனி உணர்ச்சிவசப்படக் கூடாது என்று உறுதி செய்து கொண்டான். பலம் பொருந்திய போர்ச்சுகீசியர்களிடம் தனி மனிதனான தான் நயந்து நல்லதனமாக நடந்து கொள்ளுவதே புத்திசாலித்தனம் என்பதையும் புரிந்து கொண்டான். கப்பல் வாழ்க்கை ஏனோ அவனுக்குக் கைத்துப் போய் விட்டது. தாய்நாடான துருக்கியிலே அவன் வாள் வீச்சிலும் குதிரைப் போரிலுமே வல்லவனாக விளங்கியவன். கடற் போரிலும் கப்பலோட்டுவதிலும்கூடச் சூரனாக வேண்டும் என்ற ஆசையிலே மன்னர் கலிமாவிடம் விரும்பிக் கேட்டுப் பெற்றான் இரண்டு போர்க் கலங்களின் தலைமையை. இப்படி அந்தப் புதிய துறையிலே புகுந்தவனுக்கு முதல் அநுபவமே கசப்பானதாக முடிந்த போது அதில் அவனுக்கு வெறுப்பேற்படுவதுஇயற்கை தானே? 'கடலுக்கும் நமக்கும் ஆகிவரவில்லை. ஆகவே எப்படியும் இங்கிருந்து தப்பிச் சென்று......'

ஆம்! தப்பிச் சென்றேயாக வேண்டும் என்ற தவிப்பு அவன் உள்ளத்திலே உறுதிப்பட்டு அதுவே தாபமாகிப் பூதாகாரமாக வளரலாயிற்று. வாழ வேண்டும் — அதுவும் புகழோடு வாழ வேண்டும் என்ற உயிர் ஆசையின் துடிப்புக்குத் தூபமிடுவது போல் இருந்தது அந்தத் தவிப்பு. இந்த விடுதலை வேட்கை அவனை இமையோடு இமை சேர விடாமல் அந்த இரவெல்லாம் இதே நினைவாக ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது.



இரவுக் கன்னி இருள் ஆடையைக் களைந்து பனிநீராடிக் கொண்டிருந்தாள். அப்போது பகல் மொட்டு விடும் வேளை. காலைக் கருக்கலில் கதிரவனின் ரஸவாதம் அவள் பொன்னுடலில் ஒளி பேதம் உண்டாக்கிக் கொண்டிருந்தது. இந்தப் போதிலே யூசப்கானின் காந்தக் கண்களுக்கு அந்தக் காட்சி தப்பவில்லை. உண்மைதானா? கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தான். அவன் கண்கள் பொய் சொல்லவில்லை. இரண்டு கப்பல்கள் — இரண்டும் கொள்ளைக் கப்பல்கள். அக்கப்பல்களின் முகப்பு, அமைப்பு, கட்டுமானம் ஆகியவற்றிலிருந்து அவை அரபிக் கடலிலே தனியாட்சி செலுத்தி வரும் 'மூர்' என்ற கடற்கொள்ளைக்காரர்களின் கலங்கள் என்பதைப் புரிந்து கொண்டான் யூசப்கான். மேலும் கப்பல்களை உற்றுப் பார்த்து உறுதி செய்து கொண்டதும், அவனால் அமைதியாக இருக்க முடியவில்லை. போர்ச்சுகீசியர்கள் அவனைக் கொடுமைப்படுத்தியது உண்மைதான். ஆனால் அதற்காகக் கொள்ளைக்காரர்களிடம் கப்பலைக் காட்டிக் கொடுப்பதை வீரனான அவன் மனம் விரும்பவில்லை. போர்ச்சுகீசியர்களின் கப்பலோ பெரியது. தன் அடிவயிற்றிலே ஏலம், மிளகு, கிராம்பு என்று இப்படி இன்னும் எத்தனையோ விலையுயர்ந்த பொருள்களை நிரப்பிக்கொண்டு மிதந்தது அந்தக் கப்பல். அவைகளில் ஒரு பகுதியை யூசப்கானே தன் உடல் வியர்வையை வடித்து அதில் ஏற்றியிருந்தான். இவைகளையெல்லாம் கொள்ளையர்கள் சூறையாடிப் போகும்படி விட மனமில்லை அவனுக்கு.

உரக்கச் சத்தமிட்டுக் கப்பல் தலைவனுக்கு எச்சரிக்கலாமென்றாலோ அந்த அமைதியான அதிகாலை வேளையில் அவன் குரலே கொள்ளைக்காரர்களைக் கூவி அழைப்பதுபோலாகி விபரீதத்தின் தன்மையை அதிகமாக்கிவிடுமோ என்று பயந்தான். ஆகவே தன் காலைப் பிணைத்துள்ள சங்கிலியைக் குலுக்கியும், அதைக் கப்பல் தளத்தில் மோதிச் சத்தம் உண்டாக்கியும் ஆர்ப்பாட்டம் செய்யலா



னான் பூசப்கான். துப்பாக்கியை அணைத்தபடி தன்னை மறந்த உறக்கத்திலிருந்த காவல் வீரன் பூசப் கான் எழுப்பிய சத்தத்திலே கண் விழித்து, ஆத்திரத்துடன் துப்பாக்கிச் சனியனால் அவனைத் தாக்கப் போனான். தாக்க வரும் அதை ஒரு கையால் தடுத்துக்கொண்டே மறுகையால் தான் கண்ட காட்சியை அவனுக்கும் காட்டினான் பூசப்கான் மௌனமாக. தலையை இரண்டு முறை குலுக்கி விட்டு இமைகளை இடுக்கிக்கொண்டு பார்த்த காவல் வீரன் தலைதெறிக்கத் தலைவனின் அறையை நோக்கி ஓடினான். அடுத்த சில விநாடிகளிலே கப்பலிலே கலகலப்புப் பெருகியது. கதிரவன் கருநீல வானத்துக்குச் செவ்வண்ணத்தைக் குழைத்துப் பூசும் வேளையிலே போர்ச்சுகீசியக் கப்பல் போருக்குத் தயாராகி விட்டது. அதன் தலைவன் பூசப்கானைப் பார்த்த பார்வையிலே நன்றி கலந்திருந்தது. 'நல்ல சந்தர்ப்பம், இந்த நல்லெண்ணத்தைப் பயன்படுத்திக்கொள். நழுவவிடாதே' என்று முணுமுணுத்தது பூசப்கானது உள் மனம்.

பூதக் கண்ணாடிகளை ஒன்றுக்குள் ஒன்றாகச் செருகியுள்ள தொலை நோக்கியை நீட்டி அதிலே தன் கவனத்தைப் பதித்திருந்தான் கப்பல் தலைவன். கொள்ளைக் கப்பலின் நடவடிக்கையை நன்கு அறிய அங்கும் இங்குமாக நகர்த்தபடி அதன் உதவியால் அங்குள்ள நிலைமையை நிர்ணயிக்கு முன் கொள்ளைக்

கப்பல் பீரங்கி முழக்கம் செய்துவிட்டது. கப்பலின் மிகமிக அருகே அனல் உருண்டைகளாக வந்து விழுந்தன பீரங்கிக் குண்டுகள். அதனால் போர்ச்சுகீசியக் கப்பலே அதிர்ந்து ஆடியது. அடுத்தடுத்துப் பலகுண்டுகள் பறந்து வந்தன. போர்ச்சுகீசியக் கப்பலும் பதில் 'மரியாதை' செய்தது. ஆனால் மூர்களின் கப்பல்களோ சிறியவை. வெகு வேகமாக இக்கப்பலை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. கடலையே தங்கள் வீடாகவும் கொள்ளையடிப்பதையே தங்கள் வாழ்வாகவும் கொண்டுள்ளவர்கள் மூர் ஜாதியினர். கடற் போரிலே அவர்களுக்கு இணையானவர்கள் யாருமில்லை. போர்ச்சுகீசியக் கப்பலோ பெரியது. அதை இயக்குவதோ, லாகவமாகத் திருப்புவதோ கடினம். தவிர முதல் நாள் மாலை புயலிலே சிக்கிய கப்பலை மீட்பதில் தங்கள் சக்தியையெல்லாம் இழந்திருந்தனர் போர்ச்சுகீசியர். இன்று காலை கண் விழித்ததும் போரிட வேண்டுமானால்? மனம் தளர்ந்து விடவில்லை மாலுமிகள். ஆனால் கொள்ளையரின் கூட்டமோ வெறிகொண்ட பருந்துகளைப் போலப் போர்ச்சுகீசியக் கப்பலை மொய்த்துக் கொள்ளலாயிற்று. அவர்களின் சின்னஞ் சிறிய பீரங்கிகள் விளைத்த சேதமோ மிகப் பெரியதாக, பயங்கரமானதாக இருந்தது. கொள்ளைக் கப்பல் வெடித்த பீரங்கிகளில் சில போர்ச்சுகீசியக் கப்பலுக்குள்ளேயே விழுந்து ஜ்வாலை விட்டு எரியலாயிற்று. வீரர்களில் ஒரு பகுதியினர் அதை அணைத்துத் தீ பரவாமல் தடுப்பதில் ஈடுபடலானார்கள். மூர்க்க குணம் படைத்த மூர்களின் கப்பல் மிக மிக அருகே வந்துவிட்டது. இன்னும் சிறிது நேரத்தில் அவர்கள் போர்ச்சுகீசியக் கப்பலுக்குள் தாவிக் குதித்துக் கொள்ளையிடத் தொடங்கிவிடுவார்கள். பண்டங்களை ஏற்றிச் செல்லும் இக்கப்பலினால் மூர்களின் போர்க் கப்பல்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் முறியடிக்கப்படும் நிலை ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்த போர்ச்சுகீசியக் கப்பலின் தலைவன் 'சலாம்!' என்ற குரல் கேட்டுத் திரும்பினான். யூசப்கான் இடுப்பை வளைத்து முன்னால் குனிந்து தன் இன வழக்கப்படி வணக்கம் செலுத்தியபடி ''கொள்ளையர்களை விரட்டிக் கப்பலைக் காக்கும் பொறுப்பை என்னிடம் கொடுங்கள்'' என்றான். 'எங்களால் முடியாததை, தனியொருவனான நீ எப்படி முடிப்பாய்?' என்று கேட்காமல் கேட்டு ஏளனமாக நகைத்தான் தலைவன்.

தன்னை அவன் மதிக்கவில்லை என்பதைப் புரிந்துகொண்ட யூசப்கான் ''தோல்வி உங்களைத் துரத்திக் கொண்டு வருகிறது. எப்படியும் அந்தப் பிடிக்குள் சிக்கப்போகும் இந்த நிலையில் என் தகுதியையோ திறமையையோ பற்றி யோசித்துக் கொண்டிருக்க வேண்டாம். சந்தர்ப்பமளித்துப் பாருங்கள். போரின் போக்கே மாறினாலும் மாறலாமல்லவா?'' நம்பிக்கையோடு பேசினான் யூசப். கப்பல் தலைவன் ஒரு விநாடி அவனையே உற்றுப் பார்த்தான். துருக்கியனான அவன், முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த அந்தக் கொள்ளைக்காரர்களுக்கு எதிராகப் போரிடுவானா அல்லது உதவி செய்வானா என்று யோசிப்பதைப் புரிந்துகொண்ட யூசப்கான், ''துரோகமிழைக்க மாட்டேன். என்னை நம்பலாம். உங்கள் விரோதி என் விரோதி'' என்றான். அதற்கு மேல் தலைவன் யோசிக்கவில்லை. யோசிக்கும்படியான சூழலா அது? படகுகளில் கொள்ளைக் கூட்டத்தினர் சாரி சாரியாகக் கப்பலை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் ஆரவாரக் கூச்சலோ பீரங்கி முழக்கத்தையும் மிஞ்சியதாக இருந்தது.

யூசப்கானின் காலைப் பிணைத்துள்ள விலங்கு அகற்றப்பட்டது. தான் விடுதலை அடைந்ததைக் கொண்டாடும் விழாவாக விரோதிகளைச் சிதற அடிப்பதில் ஈடுபடலானான் யூசப். கப்பலில் இங்கும் அங்கும் எங்குமாகச் சுழன்றான் அவன். அவன் திரும்பிய பக்கமெல்லாம் பீரங்கி அனலை வாரிக் கொட்டிக் கொள்ளையர்களைக் கொன்று குவித்தது. அவர்களின் படகுகள் சின்னாபின்னமாக்கப்பட்டன. போர்ச்சுகீசியரின் பீரங்கிகளை அநாயாசமாக, அலட்சியமாகத் தன் இஷ்டத்துக்குக் கையாண்டு எதிரிகளைத் திணற அடித்தான் யூசப்கான். தங்கள் பீரங்கிகளை இத்தனை இலகுவாக இயக்கும் ஒருவனைக் கண்டு போர்ச்சுகீசியர்களே வியந்தார்கள். கைதியாக எண்ணி அலட்சியமாக நடத்திய அந்நியனின் ஆற்றலைக் கண்டு அதிசயப்பட்டார்கள். தானே அந்தக் கப்பலின் தலைவனைப் போல அத்தனை பேரையும் தன் கட்டளையால் ஆட்டி வைத்தான் அவன். நிலைமை தங்களுக்குச் சாதகமாகத் திரும்பிக் கொண்டிருப்பதைக் கண்ட போர்ச்சுகீசியத் தலைவனும் அந்தத் துருக்கியனின் போக்குப்படி இயங்குமாறு தன் போர்வீரர்களுக்குக் கட்டளை பிறப்பித்தான். கசையடிபட்டவனின் கட்டளையை நிறைவேற்றக் காத்திருந்தார்கள் கப்பலில் உள்ளோர்.

எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும் ஒழுங்கும் கட்டுப்பாடுமற்ற மூர் இனத்துக் கொள்ளைக்காரர்கள் யூசப்கானின் மின்னல் வேகத் தாக்குதல்களினால் நிலைகுலைந்து ஓட்டமெடுத்தார்கள். யூசப்கானின் பீரங்கி இலக்குக்குப் பலியாகி மூழ்கியது அவர்கள் கப்பல்களில் ஒன்று. மற்றொரு கப்பலோ கொடி மரமும் பாய் மரமும் இழந்து பரிதாபமான நிலையிலே பின்வாங்கியது. கொள்ளையரை ஓட்டி, போர்ச்சுகீசியரின் உயிர், உடைமைகளையும் கப்பலையும் காத்துக் கொடுத்த யூசப்கான் அவர்களின் உள்ளத்திலே ஒப்பற்ற வீரனாக உயர்ந்து நின்றான். முதல் நாள்வரை துரும்பாக மதித்த அந்தத் துருக்கியனை இன்று கரும்பாக, கண்ணியம் மிகுந்தவனாகக் கருதலானார்கள். மதிப்பும் மரியாதையும் மிகுந்த பார்வைகளின் ஸ்பரிசத்தினால் பரவசமடைந்து போனான் யூசப்கான்.

கப்பல் தலைவன் ஓடிவந்து யூசப்கானின் கரங்குலுக்கித் தன் களிப்பைத் தெரிவித்துக் கொண்டதோடு அவனைத் தன் அறைக்கு அழைத்துச் சென்று தனக்குச் சமமான ஆசனத்திலே அமர்த்திக் கொண்டான். முதல் நாள் வரை ஈவிரக்கமின்றி ரத்தம் ஒழுக அடித்து ரணமாக்கியிருந்த உடலின் காயங்களுக்குச் சிகிச்சை செய்ய மருந்துடன் ஓடி


உங்கள் கேசத்தை அழகுபடுத்த
நிரூபணமான பாமாலிவ் வழி
பாமாலிவ் பெர்பியூம்டு
கோகோனட் ஹேர் ஆயில்...
PALMOLIVE
HAIR OIL
PALMOLIVE
Coconut
Oil
SHAMPOO
பாமாலிவ் கோகோனட்
ஆயில் ஷாம்பு...
நவநாகரீக இந்தியப் பெண்டிர் கூந்தல் அழகிற்கு விரும்பியெடுப்பது பாமாலிவ்

வந்தார் கப்பல் வைத்தியர். தான் அருந்துவதற்காக வைத்திருந்த உயர்ந்த மதுவைக் கோப்பையிலே நிரப்பி யூசப்கானிடம் நீட்டினான் தலைவன். கைதியாக வந்து காவலனாக மாறிய அவனுக்குத் தன் நன்றியைத் தெரிவிக்கும் வகையறியாமல் அந்தக் கப்பல் தலைவன் தவிப்பதை அவனுடைய பார்வையும், செய்கைகளும் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

ஃ ஃ ஃ

ஆத்திரத்திலே அறிவிழந்து ராமராயரை அவமானப்படுத்த வேண்டுமென்ற வேகத்திலே அசட்டுத்தனமாக நடந்து கொண்டு தானே அவமானப்பட்டுப் போன அகமது நகர் சுல்தான், தம் அரண்மனைக்குத் திரும்பவில்லை. வேதனையினால் தவிக்கும் உள்ளத்தின் தாபம் தணிய யாருடனாவது இதமாக இரண்டு வார்த்தை பேசவேண்டும் போலிருந்தது அவருக்கு. ஆகவே தம் குதிரையைக் கோல்கொண்டாவுக்குத் திருப்பினார். மும்முனைத் தாக்குதல் நடத்தி முற்றுகையிடத் திட்டமிட்டிருந்த ராமராயரோடு ஒத்துழைக்காமல் அகமதுநகருக்கு உதவிகள் செய்து ஒதுங்கிக் கொண்டவராயிற்றே கோல்கொண்டா குதப்ஷா.

கோட்டை என்ற சொல்லுக்கு இலக்கணமாக அமைந்திருந்தது கோல்கொண்டா. இயற்கையாக எழுந்து நின்றதொரு குன்றைத் தங்கள் திறமைக்குச் சான்றாகக் கோட்டையாக்கியிருந்தார்கள். இயற்கை அழகையும் அமைப்பையும் அதன் எல்லாச் சௌகரியங்களையும் பயன்படுத்திக்கொண்டு அந்தக் குன்றிலே அரண்மனை, அந்தப்புரம் இன்னும் அரசாங்கத்துக்குத் தேவையான அத்தனை அங்கங்களையும் அமைத்திருந்தார்கள். ஐந்து மைல் சுற்றளவிலே ஒன்பது வாயில்களைக் கொண்டதோர் ஒப்பற்ற கோட்டை அது. கோட்டையின் உச்சியிலே உள்ள தர்பார் மண்டபத்திலிருந்து முப்பது மைல் சுற்றளவு வரை தம் நாட்டைக் காணும் வாய்ப்பைப் பெற்றவர் கோல்கொண்டாவின் குதப்ஷா. பாராதாரி என்ற தம் பொதுச் சபை கூடும் கூடத்திலே நிஜாம் ஷாவை எதிர்பார்த்துக் காத்திருந்தார் இப்ராஹிம். அகமது நகர் சுல்தான் அங்கு வரும் செய்தியை ஒற்றர்கள் அவருக்கு முன்னதாகவே வந்து சொல்லியிருந்தார்கள்.

பாராதாரியின் உப்பரிகையிலே நின்று பாராக் கொடுத்துக் கொண்டிருந்தவனின் பார்வையிலே, நிஜாம்ஷா தம் குதிரையை வேகமாக விரட்டிக் கொண்டு வருவது பதிந்தது. நாலா திக்குகளிலிருந்து வரும் நெடுஞ்சாலைகளைக் கண்காணிப்பதற்காகவே கோட்டையின் உயர்ந்த பகுதியான பாலா ஹிஸாரில் உள்ள பாராதாரியில் ஓர் உப்பரிகையை உருவாக்கியிருந்தார் குதப்ஷா. பகைவர்களின் வருகையை இந்தப் பாராதாரியிலுள்ள மண்டபத்திலிருந்து பார்த்ததும் கரம் தட்டியோ அல்லது நகராவை அதிரச் செய்தோ ஒலி எழுப்புவான் பாராக்காரன். அந்த எச்சரிக்கை எதிரொலியாகிப் பற்பல முடுக்குகளில் மோதிப் பதறிக் கொண்டே சென்று பாலா ஹிஸாரின் அடிவாரத்து நுழைவாயிலில் இருக்கும் கோட்டைக் காவலாளியை 'உஷார்'ப் படுத்தும். உடனே பாலாஹிஸாரின் கோட்டைக் கதவுகள் மூடப்படும். கோல்கொண்டாக் கோட்டையின் மற்ற வாயில்களுக்கும் எச்சரிக்கைகள் பறக்கும். எதிரொலியின் இந்த அதிசயமான ஆற்றலை அற்புதமான முறையில் பயன்படுத்திக் கட்டி இருந்தார்கள் கோட்டையை. ஒலிகளைக் கொண்டே செய்திகளை அனுப்பும்படியான ஒருவித சங்கேத பாஷையை உருவாக்கி வைத்திருந்தார்கள். பாராதாரியிலிருந்து இவ்வித ஒலிகளை எழுப்பி வெகு விரைவில் பாலாஹிஸாரின் அடிவாரத்துக்குச் செய்தி அனுப்பிவிடலாம். அதேபோல் பாலாஹிஸாரின் அடிவாரத்திலிருந்து அனுப்பும் ஒலிகளையும் பாராதாரியின் மேன் மாடத்திலிருந்தபடி கிரஹித்துக் கொள்ளலாம்.

அகமதுநகர் நிஜாம்ஷாவின் வருகையை அறிவிக்கும் சங்கேத ஒலியை எழுப்பினான் பாராதாரியின் பாராக்காரன். உடனே பாலாஹிஸாரில் அகமதுநகர்ச் சுல்தானைச் சகல மரியாதைகளுடனும் வரவேற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கோட்டைக் கதவுகளை அகலத் திறந்து அணிவகுத்து நின்றனர் கோல்கொண்டா வீரர்கள். குற்றவாளி மனப்பான்மை கொண்ட நிஜாம்ஷா கோபம் கொப்புளிக்கும் உள்ளத்தவராகக் குதப்ஷாவைக் காண விரைந்தார்.

மன்னர்களின் சந்திப்பின்போது நிகழும் சம்பிரதாயச் சடங்குகளுக்குப் பின் சம்பா

திரைத் துணுக்கு

வியாபார நடிகர்கள்

கீழ்க் கண்ட பொருள்களை, பாட்டுப் பாடிக் கொண்டே விற்ற நடிகர்களையும் படங்களையும் சொல்லுங்கள் பார்க்கலாம் !

1.	கைத்தறித் துணி	7.	பாதம் அல்வா
2.	புடவை	8.	பால்கோவா
3.	நியூஸ் பேப்பர்	9.	பால்
4.	தாயத்து	10.	டீ
5.	வளையல்	11.	சுண்டல்
6.	பூ	12.	பலூன்

விடை :

1. எஸ்.எஸ்.ராஜேந்திரன்—புதுமைப்பெண்
2. சிவாஜி கணேசன் — தூக்குத் தூக்கி
3. சந்திரபாபு — சமயசஞ்சீவி
4. எம்.ஜி. ராமச்சந்திரன் — மகாதேவி
5. ஜெமினி கணேசன் — ஆசை
   சிவாஜி கணேசன் — காத்தவராயன்
6. சாவித்திரி — அதிசயத் திருடன்
   ரஞ்சனி — ராஜி என்கண்மணி
7. தங்கவேலு — கைதி கண்ணாயிரம்
8. டி. ஆர். மகாலிங்கம்—ஆதித்தன் கனவு
9. ராகினி — மகாலட்சுமி
10. லலிதா, பத்மினி — தேவகி
11. வி. கே. ராமசாமி — சதாரம்
12. மனோகர் — நல்ல வீடு

— அ. வசந்தா

ஷீனை ராமராயரின் சர்வாதிகாரப் போக்கின் விமரிசனத்திலே சென்றது. "அந்தக் கிழட்டுப் புலிக்குச் சரியான சூடு கொடுத்தீர்கள். அவன் முகத்துக்கு நேராகவே அப்படி உதாசீனப்படுத்திய உங்களைப் பாராட்டுகிறேன்" என்றார் குதப்ஷா. கலியாண் கோட்டையைப் பறி கொடுத்துப் பரிபவப்பட்டு வந்திருக்கும் நிஜாம்ஷாவுக்கு ஆறுதலாக இருக்கட்டுமென்றுதான் இதை அவர் கூறினார். விஜயநகரப் படையணியின் பாசறையிலே நடந்த செய்திகள் அத்தனையையும் குதப்ஷாவின் ஒற்றர்கள் கொண்டுவந்துவிட்டார்கள்.

ஊமையடி பட்டு உள்ளூற உருகிக்கொண்டிருந்த நிஜாம்ஷாவுக்குக் குதப்ஷாவின் பாராட்டு இதமாகவே இருந்தது.

"ராமராயனை அண்டிப் பிழைக்கிறான் இந்த ஆதில்ஷா. நம் இனத்துக்கே பொருத்த அவமானம். நீங்கள் முற்றுகையின்போது ஒப்பந்தத்தை உதறிவிட்டு ஒதுங்கிக்கொண்டீர்களே, அதற்காக உங்களையும் பாராட்டுகிறேன்!" என்றார் நிஜாம்ஷா. ஏமாற்றத்தின் வசப்பட்டு ஏக்கங் கொண்ட ஒருவன் தன்னைப் போலவே இன்னும் சிலரும் ஏமாறியிருப்பதை அறியும்போது எப்படி மனநிம்மதி பெறுவானோ அந்த நிலையிலிருந்தார் நிஜாம்ஷா. தம்மைப் போலவே குதப்ஷாவும் விஜயநகரின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டதில் அவருக்குத் திருப்தி.

"தன் சாம்ராஜ்யத்தைப் பெருக்கிக் கொண்டு தான் மகிமையோடு வாழ்வதற்கு நம்மையெல்லாம் பயன்படுத்திக் கொள்ளுகிறான் அந்த ராமராயன். இதைப் புரிந்து கொள்ளாமல் நாம் அடிக்கடி அவன் உதவியை நாடுகிறோம். நம்மை ஒருவரோடு ஒருவர் மோதவிட்டுப் பிறகு நமக்குள் சமரசம் செய்து வைக்கும் சாக்காகத் தன்னை உயர்த்திக் கொள்வதற்குப் பெயர்—கூட்டு நேசப் பொறுப்பு ஒப்பந்தம். அகமது நகர் பீஜப்பூரைத் தாக்கினால், விஜயநகரம் எதற்காக வரவேண்டும்? கோல்கொண்டா எதற்காக உதவ வேண்டும்?" தம் செய்கை நியாயம் என்பதை நிலைநாட்டக் குற்றவாளியின் குதர்க்கவாதம் பேசினார் குதப்ஷா.

குட்டுப்பட்டவரான நிஜாம்ஷாவும் இப்போது தம் கட்சிக்கு ஆள் கிடைத்துவிட்டதென்ற ஆனந்தத்திலே, "அதேபோலத்தான் கல்யாண் கோட்டையைப் பீஜப்பூரிடம் நான் ஒப்படைத்துவிட்டுப் போகிறேன். இதற்குக் குறுக்கே வந்து விவகாரம் பேச விஜயநகர் எதற்கு? கோட்டையின் சாவிகளை ராயரிடம் கொண்டுவந்து சமர்ப்பித்துவிட்டுத் தாம்பூலம் பெற்றுக்கொண்டு போகவேண்டுமாம்; தோற்றுப் போனேன் என்பதற்காகத்தானே என்னை எப்படித் தாழ்த்திவிட்டான் அந்த அரவீட்டு ஆணவக்காரன்?" என்று நெடுமூச்செறிந்தார்.

"இந்தத் தோல்வியை என்னால் மறக்கவே முடியாது. இப்ராஹிம்! எப்பாடுபட்டாவது இந்தக் கறையை நான் துடைத்துக் கொள்ளத்தான் போகிறேன்." நிஜாம்ஷாவின் வார்த்தைகள் உறுதியுடன் வெளிப்பட்டன.

"நம்மிடையே ஒற்றுமை இருக்குமானால் இந்த ராமராயனின் சாகஸங்களுக்குச் சவுக்கடி கொடுக்கலாம். பாமினி சுல்தான்களின் நல்வாழ்வுக்கு விஜயநகரத்தின் நட்பு அவசியம் என்ற நிலை மாறினால்தான் நாம் மனிதர்களாக வாழ முடியும்." குதப்ஷாவிடமிருந்து கொதிப்புடன் கொப்புளித்தன வார்த்தைகள்.

"ஆனால் பாமினி சுல்தான்கள் ஒருவரின் வாழ்வுக்கு விஜயநகரின் உதவி இன்றியமையாததாக இருப்பதனால் நன்றிக் கடன் பட்டவர்கள் ராயரிடம் நயந்துதான் போகவேண்டியிருக்கிறது" என்றார் எங்கோ பார்த்துக் கொண்டு. கோல்கொண்டா சுல்தானின் கோபத்தைக் கிளறவே இதைக் கூறினார் நிஜாம்ஷா. கோல்கொண்டாவிலிருந்து உயிருக்குப் பயந்து ஓடிவந்த இப்ராஹிமுக்கு ஒரு காலத்தில் இடமளித்து ஏற்றமான வாழ்வளித்தவர் ராமராயர். நன்றிக் கடன் பட்ட குதப்ஷா ராமராயருக்கு எதிராக, தமக்குச் சாதகமாக இணங்கிவர மாட்டாரோ என்றுதான் இப்படிக் குத்திக் காட்டினார். நிஜாம்ஷாவின் பேச்சு நல்ல பலனையே அளித்தது.

"நான் ராமராயரைப் பகைத்துக்கொள்ளப் பயப்படுகிறேன் என்பதைச் சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறார் நிஜாம்ஷா அவர்கள். அப்படித்தானே?" குதப்ஷாவின் கண்கள் கோவைப்பழமாகச் சிவந்தன. "எனக்கு ஒருகாலத்தில் ராமராயர் ஆதரவு அளித்தது உண்மைதான். அதற்காக நான் அவருக்கு அடிமையாக இருப்பேன், இருக்க வேண்டுமென்று நினைக்கக் கூடாது. என் தன்மானத்தைப் பாதிக்கும் எந்த விஷயத்துக்கும் நான் தலைவணங்க மாட்டேன். உங்கள் அருமை மகளின் 'நிக்காஹ்', கைவிட்டுப் போன அந்தக் கல்யாண் கோட்டையிலேயே நடக்கும். இது உறுதி!" என்று முழக்கினார் குதப்ஷா.

இப்படி ஓர் உறுதிமொழியைப் பெறவே அத்தனை அவசரமாக அங்கு வந்தார் அகமதுநகர் சுல்தான். கோல்கொண்டாவின் உதவியுடன் மறுபடியும் முற்றுகையிட்டு இந்தப் போரில் இழந்த பகுதிகளை மீட்க வேண்டுமென்பதே நிஜாம்ஷாவின் நினைப்பு. அதற்கு ஆதரவு தேடவே ஓடி வந்தார் குதப்ஷா. கல்யாண் கோட்டையை மீட்டுக் கொடுத்து அங்கேயே தம் கலியாணத்தை நடத்திக் காட்டுவதாகச் சபதமிடவே பூரித்துப் போனார் ஹுஸைன் நிஜாம்ஷா. வருங்கால மாப்பிள்ளையை மார்போடணைத்துக் கொண்டு மகிழ்ச்சியைத் தெரிவித்தார். மனத்தாங்கலுடன் வந்தவருக்குக் குதப்ஷாவின் ஆதரவு மகத்தான தெம்பை அளித்தது.

பீஜப்பூரை வெற்றிகொண்டு விஜயநகரப் படைகளை விரட்டியடித்துவிட்ட நினைப்போடு விருந்தும், கேளிக்கைகளுமாக அமர்க்களப்பட்டது கோல்கொண்டாக் கோட்டை. குற்றம் புரிந்துவிட்ட இரண்டு பேர்கள் ஒன்று சேரும்போது, ஒருவர் மற்றவரின் பலத்தை எண்ணித் தங்கள் மன உளைச்சலை மறந்து மகிழ்ச்சியோடிருக்க முயலுவார்கள். இந்த நிலையில்தான் அகமதுநகர் நிஜாம்ஷாவும் கோல்கொண்டா குதப்ஷாவும் இருந்தார்கள்.

(தொடரும்)

அஜீரணத்தால்
அவஸ்தைப்பட
வேண்டாம்!



ஹ்யூலெட்ஸ் மிக்சர்



அருந்தி விரைவில் நிவாரணம் பெறுங்கள்

வேலை மும்மரமும் கவலையும் ஜீரணத்தை பாதிக்கின்றன; பசியை மந்திக்கச்செய்து, தளர்ச்சியூட்டுகின்றன. ஹ்யூலெட்ஸ் மிக்சர் விரைவில் நீடித்த பரிகாரம் அளிக்கிறது. ஹ்யூலெட்ஸ் மிக்சர் வயிற்று உபாதையை விரைவில் போக்கி, நிரந்தரமாக குணமளிக்கிறது. வலியுண்டாக்கும் அமிலங்களை அகற்றி, ஜீரண கோசத்திற்கு அதன் வேலையை சரிவர செய்வதற்கேற்ப பாதுகாப்பளிக்கிறது. ஹ்யூலெட்ஸ் மிக்சர் குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளுக்கும் கூட சிறந்தது. வயிற்றுப்போக்குக்கு அபினி சேர்ந்த ஹ்யூலெட்ஸ் மிக்சர் குணமளிக்கும்.

ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்கு சிறந்தது.

C. J. ஹ்யூலெட் & ஸன் (இந்தியா)-பிரைவேட் லிமிடெட்
86 A, நைனியப்ப நாயக் தெரு, மதராஸ் 3

புது வாழ்வு

ஸோமாஸ்

காட்சி 1

இடம் : மாதவன் வீடு.

[அவனது பால்ய நண்பன் கேசவன் பெட்டி படுக்கையுடன் வருகிறன்.]

மாதவன்: என்னப்பா கேசவா! வா, வா. அதிசயமா யிருக்கிறதே உன் வருகை! உன்னைப் பார்த்து ஆறு வருஷங்கள் ஆகிவிட்டனவே. என் கல்யாணத்துக்கு வந்திருந்தாய். அப்புறம் ஆளைக் காணவில்லையே. சௌக்கியந்தானே? இப்பொழுது நீ எங்கேயிருக்கிருய்?

கேசவன்: சௌக்கியத்துக்கு என்ன குறைவு? இவ்வளவு பேசுகிருயே! என் கல்யாணத்துக்கு உன்னை வருந்தி அழைத்துக் கடிதம் எழுதி, அழைப்பும் அனுப்பியிருந்தேன். நீ பெரிய மனிதன் மாதிரி ஒரு வாழ்த்துத் தந்தி கொடுத்துவிட்டுக் 'கம்'மென்று இருந்து விட்டாயே! நீ நடந்துகொண்டது ரொம்ப நன்ருயிருக்கிறதோ? என் கல்யாணத்துக்கு நீ வருவாய் என்று எவ்வளவோ ஆவலோடிருந்தேன்.

மாதவன்: மன்னித்துக்கொள் அப்பா. உன் கல்யாணத்தின்போது என் தகப்பனுருக்கு ரொம்ப உடல் நிலை சரியில்லாதிருந்து ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தோம். அதனுல் தான் நான் உன் கல்யாணத்துக்கு வரவில்லை. சென்னையில் எத்தனை நாட்கள் இருப்பாய்? நீ என்னோடுதான் இருக்க வேண்டும். நான் உன் கல்யாணத்துக்கு வரவில்லை என்கிற கோபத்தை மறந்து என்னைப் பார்க்க வந்தாயே, அதுவரையில் சந்தோஷம்.

கேசவன்: உன்னிடம் கோபித்துக்கொண்டு தான் என்ன செய்வது? மூன்று நாட்களுக்கு இங்கே வேலை இருக்கிறது. உன்னோடு தங்கியிருந்துவிடுகிறேன்.

மாதவன்: உனக்குக் குழந்தைகள் எத்தனை? விவரங்களையெல்லாம் சொல்லு.

கேசவன்: இரண்டு குழந்தைகள். லலிதா மூத்தவள். சுந்தரம் அடுத்தவன்.

மாதவன்: அவ்வளவு தானு?

கேசவன்: என்னடா அவ்வளவுதானு என்கிருய்? சர்க்கார் உத்தரவு அவ்வளவுதானே!

மாதவன்: உம், திட்டமிட்டு வாழ்கிருய். நீ கெட்டிக்காரன். இங்கே எனக்கு ஐந்து குழந்தைகள். மூன்று பெண். இரண்டு ஆண் பிள்ளைகள்.

கேசவன்: வீட்டுக்கு என்ன வாடகை?

மாதவன்: மாதம் நூற்றைம்பது ரூபாய் இந்தப் போர்ஷனுக்கு அழவேண்டியிருக்கிறது. அது சரி, நீ என்ன புது வீடு கட்டியிருக்கிருயாமே. கேள்விப்பட்டேன்.

கேசவன்: ஆமாம். கோயமுத்தூரிலேயே தான். ஒரு சின்ன பங்களா கட்டியிருக்கிறேன். நல்ல சம்பளம் வருகிறது. வசதியாயிருக்கிறேன்... ஆனல் மனசுக்கு நிம்மதியில்லை. என்னமோ வாழ்க்கை!

மாதவன்: என்னப்பா கேசவன், என்னவெல்லாமோ அளந்துவிட்டுக் கடைசியில் இத்தனை விரக்தி ஏன்? மனைவியின் ஆரோக்கியம்...?

கேசவன்: அதெல்லாம் ஒரு கோளாறும் இல்லை... இதுவரையில் அவள் மருந்து என்று எதுவுமே சாப்பிட்டதில்லை. அவளுக்கும் சரி, குழந்தைகளுக்கும் சரி, ஆரோக்கியத்துக்கு ஒரு குறைவும் இல்லை. ஆனல் மனக்குள் ஏதோ ஒரு குறை. எனக்கே சொல்லத் தெரியவில்லை. நாங்கள் சந்தோஷமாக வாழவில்லை. எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது....!

[மாதவனுடைய ஆறு வயதுப் பெண் குமாரி வருகிறள்.]

குமாரி: அப்பா! மாமாவையும், உன்னையும் அம்மா சாப்பிடக் கூப்பிடறு. இலை போட்டாச்சு....!

மாதவன்: இதோ வந்துவிட்டோம். கேசவா, எழுந்திரு. சீக்கிரம் குளித்துவிட்டுவா. சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்.

[மாதவனும், கேசவனும் சாப்பிடப் போகிறர்கள்.]



காட்சி 2

இடம்: மாதவன் வீடு.

[கூடத்தில் இரண்டு இலைகள் போடப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கு எதிரே வழவழப்பான இரு நூக்க மரப் பலகைகள். வெள்ளிக் கூஜாவில் தீர்த்தம் வைக்கப்பட்டிருக்கிறது. கேசவனும், மாதவனும் வந்து பலகைகளில் அமருகின்றனர்.]

மாதவன்: எனக்கென்னவோ கேசவன், இந்த மாதிரி இலை போட்டுச் சாப்பிடுவதில் தனிப் பிரியம்...

கேசவன்: எனக்குக் கூட இதில் பிரியம் உண்டு.

தேவகி (மாதவனின் மனைவி): உங்கள் நண்பருக்கு இலையில் சாப்பிடுவது கஷ்டமாயிருந்தால் மேஜையில் சாப்பிடட்டுமே. நம் வீட்டில் அதுவும்தான் இருக்கிறதே!

கேசவன்: இல்லை, இல்லை. எனக்கு இதிலும் பழக்கம் உண்டு.

மாதவன்: தேவகி! நானும் இவனும் சின்ன வயசில் ஒரே தட்டில் சாப்பிட்டு வளர்ந்தவர்கள். அவனுக்கு இப்படிச் சாப்பிடுவதுதான் பிடிக்கும்.

தேவகி (கலகலவென்று கிண்கிணி நாதத்துடன் சிரித்து): நீங்களே அவரை மறைமுகமாக வற்புறுத்துகிறீர்கள். அது கூடாது. அவரும் பாவம், சாதுபோல் இருக்கிறது... (கேசவனைப் பார்த்துப் புன்முறுவலுடன்) அவர் எப்பொழுதும் இப்படித்தான் தமது பேச்சு வன்மையினால் யாரையும் தம் வழிக்குத் திருப்பி விடுவார். உங்களுக்குக் கீழே உட்கார்ந்து சாப்பிடுவது சிரமமாக இருந்தால் சொல்லுங்கள். மேஜையிலே விருந்து பரிமாறுகிறேன். அவர் தாமாகவே நம் வழிக்கு வந்து விடுவார்...

மாதவன்: (சிரித்துக் கொண்டே) தேவகி! இது ஜனநாயக யுகம். பெரும்பான்மையான வாக்குக்குத்தான் பலம். நீயும் கேசவனும் ஒன்று சேர்ந்து விட்டீர்கள். இதோ நானும் சேர்ந்து விட்டேன்.

[மாதவன் கலகலவென்று சிரிக்கிறான். தேவகியும் கேசவனும் கூடவே சிரிக்கிறார்கள்.]

தேவகி: சரி. உங்கள் நண்பருக்கு இடைஞ்சலாயில்லையென்றால் கீழே உட்கார்ந்தே சாப்பிடலாம்.

கேசவன்: (கூச்சத்துடன்) எனக்கு இதுவும் பழக்கம்தான். ஒரு சிரமமும் இல்லை.

தேவகி: உங்கள் நண்பர் பாவம், ரொம்பவும் கூச்சப்படுகிறார். சகஜமாக, ஆற அமர இருந்து சாப்பிடச் சொல்லுங்கள்.

கேசவன் (சாப்பிட்டுக்கொண்டே): அதெல்லாம் ஒன்றுமில்லை.

மாதவன்: உன் மனைவியிடம் கூட இப்படித்தான் கூச்சப்படுவாயா? கலகலப்பாகப் பழக மாட்டாயா? சின்ன வயசிலேயே நீ கொஞ்சம் உம்மணாமூஞ்சி தான். நீ எப்படிக் குடும்பம் நடத்துகிறாய் என்று பார்க்க ஆசையாயிருக்கிறது. அது இருக்கட்டும். நீ அப்போது என்னவோ உன் குடும்ப வாழ்க்கையில் சந்தோஷம் இல்லை என்று சொன்னாயே! அதைக் கொஞ்சம் புரியும்படியாகத்தான் சொல்லேன்.

கேசவன்: உம். சாப்பிட்டாகி விட்டது. அறைக்குப் போய்ப் பேசலாம் வா.

தேவகி: சமையல் 'அயிட்டங்க'ளெல்லாம் நன்றாயிருந்ததா? அபிப்பிராயமே சொல்லவில்லையே?

கேசவன்: எல்லாம் ரொம்ப நன்றாயிருந்தன. எதிலும் குறையே காண முடியாதபோது சொல்ல என்ன இருக்கிறது?

தேவகி: நன்றாயிருக்கிறதே நீங்கள் சொல்லுவது! சமையலில் குற்றம் குறை இருந்தால்தான் சொல்லுவீர்களா, நல்ல 'அயிட்டங்'களைப் பற்றிப் பாராட்டி ஒரு வார்த்தைகூடச் சொல்ல மாட்டீர்களா? அப்படியானால், உங்கள் மனைவி பாவம், அவளுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள்.

[சிரிக்கிறாள். மாதவனும் சிரிக்கிறான். கேசவன் அசடு வழிகிறான்]

காட்சி 3

இடம்: மாதவனது அறை.

[கேசவனும் மாதவனும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர்.]

மாதவன்: கேசவா! தேவகி எப்பொழுதுமே இப்படித்தான் குழந்தை மாதிரி சுபாவம். நீ ஒன்றும் வித்தியாசமாக நினைத்துக் கொள்ளாதே.

கேசவன்: சேச்சே! இதில் வித்தியாசமாக எடுத்துக் கொள்வதற்கு என்ன இருக்கிறது?



மாதவன்: நான் இவ்வளவு தூரம் இது பற்றிப் பேசுவதற்குக் காரணம் நீ ஒரு 'ஸீரியஸ் டைப்' ஆயிற்றே என்றுதான். நாம் ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது ஒரு சம்பவம் நடந்தது. உனக்கும் நினைவிருக்கும். பள்ளிக்கூடத்தில் ஒரு பொருட்காட்சிக்கு ஏற்பாடாகி இருந்தது. உபாத்தியாயர்கள் அந்தந்த வகுப்பு மாணவர்களுக்கு அவரவர்கள் செய்ய வேண்டிய வேலைகளைச் சொல்லிக் கொண்டிருந்தனர். உபாத்தியாயர் இட்ட பணிகளையெல்லாம் முடித்த பிறகு மாணவர்கள் சொந்தமாகச் செய்ய வேண்டிய பொருட்காட்சிக்குரிய பொருள்களைச் செய்ய ஆரம்பித்தோம். நீ ஒரு பெரிய களிமண் உருண்டை செய்து அதற்கு வர்ணம் தீட்டி அதன் மேல் பூகோளம் வரைந்திருந்தாய். அதியற்புதமாக அமைந்திருந்தது. உனக்கே பெருமை தாங்க முடியவில்லை. வகுப்பில் நீ அதைக் கொண்டு வந்து காண்பித்ததும் உபாத்தியாயர் ரொம்பப் பாராட்டினார். பிறகு, அவர் 'கேசவா! நீ இதை எப்படிச் செய்தாய்?'' என்று கேட்டார். ''நானே என் சொந்த மூளையைக் கொண்டு

கால்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட்டினுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டென்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

செய்தேன் ஸார்!'' என்று நீ உடனே பதில் கூறினாய். நாங்கள் எல்லாரும் கொல்லென்று சிரித்துவிட்டோம். நீ பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு நின்றாய். அதிலிருந்து நீ என்னிடம் கோபித்துக் கொண்டு ஒரு மாசம் பேசாமல் இருந்தாய். இந்தச் சம்பவம் இன்னும் என் நினைவில் இருக்கிறது. அந்த 'ஸீரியஸ் டைப்'பை உன் மனைவியிடம் காட்டியிருப்பாயோ, என்னவோ? அப்படியானால் குடும்பத்தில் எப்படி சந்தோஷம் இருக்கும்? நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லு. நீ உன் மனைவியோடு சிரித்துப் பேசுவதுண்டா?

கேசவன்: என்ன கேள்வியடா இது? அர்த்தம் இல்லாமல் தினம் எப்படிச் சிரிக்க முடியும்? சிரிக்க வேண்டியதற்குத்தானே சிரிக்கலாம்.

மாதவன்: உன் மனைவியும் நீயும் சினிமாப் பார்ப்பதுண்டா?

கேசவன்: நானும் அவளும் படத்துக்குப் போனதேயில்லை. அண்டை அயல் வீட்டாருடன் அவளே படங்களுக்குப் போய்வருவாள். அவள் எங்கே போனாலும் நான் தடுத்து ஒரு வார்த்தை சொன்னதில்லை. இரவு சாப்பிடும்போதோ அல்லது காலையில் ஆபீசுக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போதோ, 'பக்கத்து வீட்டுப் பங்கஜம் கூப்பிடுகிறாள். மாட்னிக்குப் போய்விட்டு வரட்டுமா?' என்பாள். 'இதற்கு என்னைக் கேட்பானேன்? பேஷாகப் போய் வா!' என்பேன்.

மாதவன்: மனைவிக்குப் புடவை, பிளவுஸ் நீ எப்போதாவது வாங்கியதுண்டா?

கேசவன்: நான்தான் என் சம்பளத்தையே அவளிடம் கொடுத்து விடுகிறேனே! அவளுக்குப் பிடித்தமான புடவையோ, 'பிளவுஸோ' எல்லாம் அவளே வாங்கிக்கொள்ளுவாள். இன்னும் கேட்டால் எனக்குத் தேவையான டிரஸ்களைக்கூட அவள்தான் வாங்கி வருவாள். அவளுக்குப் பிடித்தது என்று அவள் வாங்கிவந்தால் அது எனக்கும் பிடித்ததாகத்தான் இருக்கும்.

மாதவன்: வீட்டுக்குத் தேவையான மளிகைச் சாமான்கள், காய்கறிகள் இதெல்லாம் யார் வாங்குகிறார்கள்?

கேசவன்: எல்லாம் என் மனைவிதான்.

மாதவன்: உன் மனைவிக்கு நீ எப்போதாவது வெகுமதிப் பொருள் அளித்திருக்கிறாயா?

கேசவன்: இல்லை, இல்லை.

மாதவன்: அவள் பிறந்தகத்துப் பேர்களை உயர்த்திப் பேசுவதுண்டா?

கேசவன்: அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. நான்தான் அதிகம் பேசுவதில்லையே?

மாதவன்: சரி, போகட்டும். நீ உன் மனைவியோடு வெளியே போனால் என்ன புடவை உடுத்த வேண்டும், என்ன சோளி போட்டுக் கொள்ள வேண்டும் என்று உன் விருப்பப்படி அலங்கரித்துக் கொள்ளச் சொன்னதுண்டா?

கேசவன்: ஊஹூம். கிடையாது. முதலில் நானும் அவளும் வெளியே போனதேயில்லை.

மாதவன்: நீ ரொம்ப விநோதப் பிராணி அப்பா! உம்..... உன் மனைவி பிறந்தகத்துக்குப் போக விரும்பினால் முகத்தைச் சுளிக்காமல் விடை கொடுத்து அனுப்புவதுண்டா?

கேசவன்: கிடையவே கிடையாது.

மாதவன்: அப்பாடி! இப்பொழுதல்லவா விஷயம் புரிகிறது? மனைவியின் மனசையறிந்து நடந்து கொள்ளத் தெரிய வேண்டாமா? அதனால்தான் உங்கள் குடும்பத்தில் மகிழ்ச்சியே இல்லை. ஏன் நீ மனைவியைப் பிறந்தகத்துக்கு அனுப்புவதில்லை? ஏதாவது தகராறு உண்டோ?

கேசவன்: ஊஹூம். அதெல்லாம் ஒன்றும் இல்லை.

மாதவன்: பின்னே அவளை அனுப்புவதற்கென்ன?

கேசவன் (நிதானமாக): என் மாமனார், மாமியார் முதலானவர்கள் என்னுடன்தானேயிருக்கிறார்கள்!

மாதவன்: சிரித்துக் கொண்டு ஹாஸ்யமாகச் சொல்ல வேண்டிய விஷயங்களையெல்லாம் கொஞ்சங் கூடச் சிரிக்காமல் சொல்லுகிறாயே, என் அப்பனே! அதுதானடா உன்னிடம் ஒரு பெரிய அதிசயம்: உம். உன் தாயார், தகப்பனார் இருவரும் எங்கேயிருக்கிறார்கள்? உன் அண்ணனிடம்தானே?

கேசவன்: தகப்பனார் காலமாகி விட்டார். தாயார் இருக்கிறாள். என்னுடன்தான் அவள் இருக்கிறாள்.

மாதவன்: ஏன்டா, இதை முன்னாலேயே சொல்ல வேண்டாமோ? இப்போது கண்டுபிடித்து விட்டேன், உன் மனைவியின் மன வேதனைக்குக் காரணத்தை! ஒரு பெண்ணின் தாயாரும், மாமியாரும் ஒரே வீட்டில் இருந்து விட்டால் அப்புறம் வேறு வினையே வேண்டாமே! வீட்டில் சதா யுத்த காண்டம் தான் நடந்து கொண்டிருக்கும். ஐயோ, பாவம்! உன் மனைவி என்ன செய்வாள்? அவளுக்கு எப்படியடா மகிழ்ச்சி உண்டாகும்? வீட்டில் அவள் எதைக் கண்டு மகிழ்வாள்? வீடு தங்காமல் ஊர் சுற்றிக் கொண்டிருக்கும் 'ஸீரியஸ் டைப்' கணவனையா? இல்லை, சதா போர்க் கோலம் பூண்டு நிற்கும் தாயாரையும், மாமியாரையுமா? அப்பப்பா! அதை விடக் கொடுமை என்ன வேண்டும்?

[அநுதாபத்தால் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொள்கிறான்.]

கேசவன்: அடடா! ஒன்றுமே இல்லாத விஷயத்தை நீதான் இப்போது பெரிதாக்குகிறாய்! எங்கள் குடும்பத்தில் சண்டையும் இல்லை, சச்சரவும் இல்லை. எல்லாரும் ஒற்றுமையாய்த்தான் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் ஏனோ தெரியவில்லை. நாங்கள் சந்தோஷமாக இருப்பதாகச் சொல்ல முடியவில்லை. இங்கு வந்து உன் குடும்பத்தைப் பார்த்ததும் எவ்வளவோ சந்தோஷமாகஇருக்கிறது. நான் பல ஊர்களுக்குப் போகிறேன். அங்கெல்லாம் பல நண்பர்கள் வீட்டில் தங்குகிறேன். எல்லாரும் சந்தோஷமாக இருப்பதாகத்தான் தோன்றுகிறது. ஆனால்...

மாதவன்: அப்படி வா வழிக்கு. உன்னவரையில் உன்நாட்டுக் குழப்பத்தைக் கொண்டு வர விரும்பாமல், உன் மனைவி பாவம்; எல்லாவற்றையும் சகிக்கட்டி மௌனமாய்ச் சகித்துக் கொண்டு போகிறாள் என்று தெரிகிறது. நீயோ ''ஸீரியஸ்' பேர்வழி. உன்னிடம் சொல்லி என்ன பலன்...?

கேசவன்: நீ சொல்வதில் உண்மை இருக்கிறது. நான் எதையும் காதில் போட்டுக் கொள்வதில்லை. வீட்டு நிலைமையைப் பற்றி விசாரிப்பது கூட இல்லை. அவள் மனம் எவ்வளவு வேதனைப்படுகிறதோ? போனது போகட்டும். இனிமேலாவது இன்பமாக இருக்க வழி தேட வேண்டும். நீதான் வாழத் தெரிந்தவன். அதற்கு ஒரு வழி சொல்லு.

மாதவன்: சரி. முதலில் 'டிரான்ஸ்பர்' வாங்கிக் கொண்டு வா.

கேசவன்: பம்பாய் போவதற்கு ஒரு 'சான்ஸ்' இருக்கிறது. 'பம்பாயில் ஸேல்ஸ் மானேஜராகப் பதவி ஏற்கத் தயாரா?' என்று கேட்டு ஆபீஸிலிருந்து கடிதம் வந்திருக்கிறது. நான்தான் குடும்ப சௌகரியத்தை உத்தேசித்து அந்தக் கடிதத்துக்குப் பதில் எழுதத் தயங்கிக் கொண்டிருக்கிறேன்.

மாதவன்: முட்டாள்! பம்பாய்க்குப் பிரமோஷனில் போக நல்ல 'சான்ஸ்' இருந்தும் மௌனமாய் இருந்து விட்டாயே! ஆனால் உன்னைச் சொல்லிக் குற்றம் இல்லை. நீ அந்த நாளிலேயே அப்படித்தான். எந்த அதிசயத்தைக் கண்டும் நீ அதிசயப்படமாட்டாய். எந்த ஹாஸ்யத்தைக் கேட்டும் நீ சிரிக்க மாட்டாய். உனக்கு நினைவிருக்கிறதா? நாம் இருவரும் எஸ். எஸ். எல். ஸி. படித்துக் கொண்டிருந்த போது உபாத்தியாயர்களும் மாணவர்களுமாகச் சேர்ந்து ஓர் உல்லாசப் பிரயாணம் ஹரித்துவாரம் வரையில் போவதாக ஏற்பாடாகியிருந்தது. வழியில் தாஜ்மஹாலைப் பார்க்கலாமென்று உபாத்தியாயர் கூறியதும் உன்னைத் தவிர நாங்களெல்லாரும் உற்சாகமாக உல்லாசப் பிரயாணத்துக்குக் கைகளைத் தூக்கி ஆரவாரம் செய்தோம். நீ மாத்திரம் மௌனமாக ஒதுங்கி விட்டாய். 'நீ வரப் போகிறதில்லையா, உல்லாசப் பிரயாணத்துக்கு?' என்று நான் உன்னைக் கேட்டேன். 'தாஜ் மஹாலாவது இன்னொன்றாவது? அதைத்தான் நிறையப் படங்களில் பார்த்திருக்கிறோமே! ஆக்ராவுக்குப் போய்ப் பார்க்கும்படியாய் என்ன இருக்கிறது?' என்று கூறிவிட்டாய். அன்று மாலையே நாங்களெல்லாம் ஒன்று சேர்ந்து வேண்டுமென்றே உன் வீட்டுக்கு வந்தோம். 'என்னடா பெரிய அதிசயத்தைக் காண வந்து விட்டீர்கள்?' என்று நீ கோபத்தோடு கேட்டாய். 'தாஜ் மஹால் ஓர் அதிசயமா? அதைத்தான் படங்களில் நிறையப் பார்க்கிறோமே' என்று சொன்ன நீ ஓர் அதிசய மனிதன். அதனால் தான் உன்னைக் காண எல்லோரும் வந்திருக்கிறோம்' என்றேன் நான். அதற்குப் பிறகு நீ என்னுடன் ஒரு மாதம் பேசவில்லை...

கேசவன்: ஏண்டா பழி, பழைய குப்பைச் சமாசாரங்களை ஒன்றுவிடாமல் நினைவு வைத்துக் கொண்டு குத்திக் காட்டுகிறாயே!

மாதவன்: சே, சே! அப்படியெல்லாம் ஒன்றும் இல்லையடா! தமாஷுக்குத்தான் சொன்னேன். அதெல்லாம் கிடக்கட்டும். நீ ஊருக்குப் போனதும் நான் சொன்னதை மறந்துவிடாதே! பம்பாய் டிரான்ஸ்பரை ஒப்புக்கொண்டு ஆபீஸுக்கு எழுதிவிடு. அப்புறம் லீவு போட்டுவிட்டு மனைவி குழந்தைகளுடன் இங்கு வந்துவிடு. ஒரு மாதம் ஜாலியாக இருந்துவிட்டுப் பம்பாய் போகலாம். இன்னொரு முக்கியமான விஷயம். உம்மணா மூஞ்சியாக இருக்கும் வழக்கத்தை விட்டுவிடு. மனைவியிடம் சந்தோஷமாகப் பழகு. சினிமா, நடனம் ஆகியவைகளுக்கு அவளை அழைத்துப் போ. என்ன?

கேசவன்: இனிமேல் பாரேன், நான் எப்படி இருக்கிறேனென்று? எனக்கே ஊர் சுற்றும் வேலை அலுத்துப் போய்விட்டது. பம்பாய்க்கு மாற்றிக் கொண்டு போவதையே விரும்புகிறேன்.

மாதவன்: வா, டிபன் சாப்பிட்டுவிட்டு வெளியே போய் வரலாம்.

[இருவரும் உள்ளே செல்லுகின்றனர்.]

காட்சி 4

இடம்: கோய்முத்தூரில் கேசவனின் பங்களா.

[கேசவன் தன் அறையில் அமர்ந்து சுறுசுறுப்பாக ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறான். அவன் மனைவி பாமா வருகிறாள்.]

பாமா: ஊருக்குப் போய் வந்ததிலிருந்து ஒரே பரபரப்பாயிருக்கிறீர்களே! என்ன விஷயம்? எங்கெல்லாமோ போய்விட்டு வருகிறீர்கள். டெலிபோனில் பேசுகிறீர்கள். யாருக்கெல்லாமோ கடிதம் எழுதுகிறீர்கள்.




FAREX
FAREX
SELECTED CEREALS



கேசவன்: எல்லாக் காரியங்களையும்முடித்து விட்டு உனக்குச் சொல்லிக் கொள்ளலாம் என்று பேசாமல் இருந்து விட்டேன். இன்று ஆபீஸிலிருந்து மத்தியானம் ஒரு மணிக்கே வந்து விடுவேன். அப்பொழுது எல்லா விவரங்களையும் சொல்லுகிறேன்.

[கேசவன் சாப்பிட்டு முடிந்ததும் உற்சாகமாக டிரஸ் செய்து கொண்டு புறப்படுகிறான்]

பாமா (தூங்கிக் கொண்டிருந்தவள் மத்தியானம் ஒரு மணிக்கு வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு விழித்துக்கொண்டு): நீங்கள்தானா? இவ்வளவு சீக்கிரமாக எப்படி வர முடிந்தது? ஆச்சரியமா யிருக்கிறதே! இன்றைக்கு என்ன இவ்வளவு குஷி?

கேசவன்: இனிமேல் எப்பவும் குஷிதான்; பாமா! எப்பவும் குஷிதான். இன்று ஒரு ஆங்கில சினிமாவுக்குஇரண்டு டிக்கட் ரிசர்வ் பண்ணி விட்டேன். நாளைக்கு ஓர் அபூர்வ நாட்டிய நாடகம். அதற்கும் இரண்டு டிக்கட்டுகள் ரிஸர்வ் பண்ணி விட்டேன். புதிதாக ஒரு சர்க்கஸ் கம்பெனி வந்திருக்கிறதே, தெரியுமா? ரொம்ப நன்றாயிருக்கிறதாம். அதற்கும் ரிஸர்வ் செய்திருக்கிறேன். இன்றிரவுக் காட்சிக்குப் போகிறோம்... இன்னொன்று மறந்து விட்டேனே. உனக்கு நைலானில் ஒரு புடவையும், நைலக்ஸில் ஒரு புடவையும் வாங்கி வந்திருக்கிறேன். அப்புறம்... நீ... சீக்கிரம் டிரஸ் பண்ணிக்கொள்...

பாமா (பேயறைந்தவள் மாதிரி வெளிறிப் போய்): உங்களுக்கு என்ன வந்துவிட்டது திடீரென்று... இன்றைக்கு...? ஏன் இப்படித் தாறுமாறாக நடந்து கொள்கிறீர்கள்? இத்தனை நாட்களும் ஒழுங்காக இருந்தீர்களே!

கேசவன்: இல்லை, பாமா! இத்தனை நாட்களும்தான் வாழ வழி தெரியாமல் எப்படியோ இருந்து விட்டேன். இனிமேல் பார், நம் வாழ்க்கையில் ஒரே இன்பம்தான். இத்தனை வருஷங்களாக இழந்துவிட்ட நாட்களை மீண்டும் பெறப் போகிறோம். இது நிச்சயம்.

[திடீரென்று பாமாவின் கையைப் பிடித்து அணைத்துக் கொள்ளப் போகிறான்.]

பாமா (திடுக்கிட்டுக் கையைத் திமிறிக் கொண்டு): என்ன இது! யாராவது பார்க்கப் போகிறார்கள்...இன்றைக்கு ஒரே விபரீதமாக இருக்கிறதே! அப்பாவும் அம்மாவும் அடிக்கடி பேசிக்கொள்வார்கள், உங்களைப் பற்றி. 'மாப்பிள்ளை தங்கமானவர். என்ன மரியாதை! என்ன மரியாதை! இந்தக் காலத்துப் பிள்ளைகளைப் போலவா? பெண்டாட்டியை மட்டும் அழைத்துக் கொண்டு குழந்தைகளை வீட்டில் உள்ள பெரியவர்களிடம் விட்டு விட்டுச் சினிமாவுக்கும் கச்சேரிக்கும் போய் வருகிறார்களே! அந்த மாதிரியாகவா இவர்? பாமாவுடன் அவர் இரைந்து பேசிச் சிரித்து நாங்கள் பார்த்ததே இல்லை' என்று சொல்லி அம்மா பூரித்துப் போயிருக்கிறாள். நீங்கள் என்னடாவென்றால் இன்றைக்கு...

கேசவன் (உற்சாகமாக): ...இன்றைக்கு மட்டும் இல்லை பாமா! இனி என்றைக்குமே இப்படித்தான். நீயே பார்த்து ஆச்சரியப் படப் போகிறாய். ஆனால் என் அப்பா, அம்மா — உன் தாயார் இவர்களெல்லாம் தான் உன் ஆச்சரியத்திலும், நீயும், நானும் நடத்தப் போகும் புது வாழ்விலும் பங்கு கொள்ள முடியாது....! (சிரிக்கிறான்)

பாமா (கலவரத்தோடு): நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? ஒன்றுமே புரியவில்லையே!

கேசவன்: உனக்கு எப்படிப் புரியும், பாமா? எல்லாவற்றையும் 'சஸ்பென்ஸி'ல் வைத்திருக்கிறேனே! சரி, நீ சீக்கிரம் டிரஸ் பண்ணிக் கொண்டு புறப்படு. டாக்ஸி காத்திருக்கிறது. இன்று வீட்டில் நமக்குச் சாப்பாடு கிடையாது. தேவிப் பிரசாத் ஹோட்டலில் ஸ்பெஷல் சாப்பாடு ரிஸர்வ் செய்து விட்டேன்...

பாமா (பயத்தினால் முகம் வெளிறிப் போய்): ஐயோ... என்ன இது! எனக்கு மயக்கமாய் வருகிறதே! என்னவோ புது வாழ்வு என்று சொன்னீர்களே, என்ன அது?

கேசவன்: அதுவா? எனக்கு பம்பாய்க்கு மாற்றலாகி விட்டது. இனிமேல் நான் அங்கே சேல்ஸ் மானேஜர். கம்பெனியிலேயே வீடு பார்த்து ஏற்பாடு செய்துவிட்டார்கள். அதிர்ஷ்டம் வந்தால் ஒரே சமயத்தில் வரும் என்பார்கள். சம்பளம் அலவன்ஸ் எல்லாமே அதிகமாகியிருக்கின்றன...! நாம் இருவரும் அடுத்த வாரம் விமானத்தில் பறந்து பம்பாய் செல்கிறோம்.

பாமா (திடுக்கிட்டு): பம்பாய்க்கா? குழந்தைகள் எங்கே இருப்பார்கள்?

கேசவன்: குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளத்தான் உன் அப்பா, அம்மா, என் தாயார் எல்லோரும் இருக்கிறார்களே! நீ புறப்படு, பாமா!

பாமா (கண்ணகி மாதிரி வீரப் பார்வை பார்த்துக் கொண்டு): இப்பொழுதுதான் புரிகிறது. நான் ஒரு அசடு. உங்களை ரொம்பவும் நல்லவரென்று இத்தனை நாட்களும் நம்பி மோசம் போனேனே....ஐயோ! உங்கள் புத்தியே மாறிவிட்டதே...!

['ஓ'வென்று அழுகிறாள்.]

கேசவன் (பதறிப் போய்): நீ என்ன சொல்கிறாய்? ஏன் அழுகிறாய்? நான் பம்பாய்க்கு மாற்றலாகிப் போவது உண்மை. எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டன. பம்பாய்க்குப் போனதும் பாரேன். நான் ராஜா — நீ ராணி! தினம் ஒரு சினிமா பார்க்க வேண்டும். நீ விதம் விதமாக ஆடை, ஆபரணங்கள் அணிந்து அழகு ராணியாய் விளங்க வேண்டும்...!


(பாமாவைக் கட்டித் தழுவப் போகிறான்.]

பாமா (ஒரேயடியாய் நடுங்கிப் போய்): ஐயோ, ஈசுவரா! பம்பாய்க்குப் போவதற்கு முன்னாலேயே உங்களுக்கு அந்தச் சனியன் பிடித்த குடிப் பழக்கம் வந்துவிட்டதே! இந்தச் சைத்தானோடு உங்களுக்கு எத்தனை நாள் பழக்கம்...! இதுதான் நம் அழகான புது வாழ்வா? அட ஈசுவரா!

[பாமாவினால் அதற்கு மேல் பேச முடியவில்லை. விம்முகிறாள்.]

கேசவன்: பாமா, பாமா....! இதைக் கேள்... நான்...

[மேலே பேச முடியாமல் ஒரே குழப்பத்தோடு நாற்காலியில் சாய்கிறான்.]



நீண்ட நடைப் பயணங்கள்

இத்தாலியின் வடகிழக்குக் கோடியிலுள்ளது வெனிஸ் என்ற துறைமுகப்பட்டினம். ஒரு காலத்தில் ஐரோப்பாவின் கடல் வியாபாரம் முழுதும் இதன் மூலமாகவே நடைபெற்று வந்தது. அதனால் இங்கு வசித்து வந்தவர்களில் பலர் பெருஞ் செல்வம் படைத்தவர்களாயிருந்தனர்.

போலோ என்ற வணிகக் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்கள் வியாபார நிமித்தமாக வெனிஸ் நகரத்திலிருந்து சென்று, ஏறக்குறைய கி. பி. 1260ஆம் வருஷம் கான்ஸ்டாண்டிநோபில் என்ற நகரத்தில் தங்கியிருந்தனர். சில நாட்களுக்குப் பிறகு அதே வியாபார நிமித்தமாகக் கிரிமியா தேசத்துக்கும், அங்கிருந்து பொக்காரா (தற்போது சோவியத் ருஷ்யாவைச் சேர்ந்த உஸ்பெக்கிஸ்தான் மாகாணத்தின் ஒரு பகுதி) பிரதேசத்துக்கும் செல்லும்படி நேரிட்டது. பொக்காராவிலிருந்து சில வியாபாரிகள் சீனாவுக்குப் புறப்பட்டார்கள். அவர்களுடன் இந்த இரண்டு சகோதரர்களும் புறப்பட்டு மூன்று வருஷப் பயணத்துக்குப் பிறகு 1265ம் வருஷம் சீனாவை அடைந்தனர்.

சீனாவில் அப்போது மங்கோலியர் ஆட்சி நடைபெற்று வந்தது. உலகனைத்தையும் வெற்றி கொள்ளுமாறு ஆண்டவன் தனக்குக் கட்டளையிட்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டு ஆசியாவின் பெரும் பகுதியில் பெரிய அளவு நாசத்தை உண்டுபண்ணிய செங்கிஸ்கான் (1162–1227) என்பவனுடைய பேரன் குப்ளாய் கான் என்பவன் (1216–1294) ஆண்டுகொண்டிருந்தான். கான்பலிக் என்பது தலைநகரமாயிருந்தது. அதுவே இப்போது பீக்கிங் என்று அழைக்கப்படுகிறது.

இவனுடைய அரசவைக்குச் சகோதரர் இருவரும் வந்தார்கள். இவர்களைப் பார்த்து இவர்களுடன் பழகியதும், கிறிஸ்துவ மதத்தைப் பற்றியும், மேலநாடு பல்வேறு அறிவுத் துறைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளதைப் பற்றியும் அறிந்து அவற்றைத் தன் நாட்டாருக்கு அறிமுகப்படுத்தவேண்டும் என்ற ஆவல் குப்ளாய்கானுக்கு ஏற்பட்டது. எனவே கற்

வெ. சாமிநாதசர்மா



இத்தாலியிலிருந்து சீனாவுக்கு

றறிந்த சிலரைத் தன்னாட்டுக்கு அனுப்பித் தருமாறு அப்பொழுதைய போப்பாண்டவருக்கு ஒரு கடிதம் எழுதி, அதை இந்த இரண்டு சகோதரர்களிடமும் கொடுத்து, இவர்களைத் திரும்ப இத்தாலிக்குச் சென்று வருமாறு உத்தரவிட்டான். இவர்களும் அப்படியே இத்தாலிக்குத் திரும்ப வந்தார்கள். ஆனால் அப்பொழுது குப்ளாய் கான் குறிப்பிட்டிருந்த போப்பாண்டவர் காலமாகி விட்டிருந்தார். அவருக்குப் பிறகு, சிறிது காலங் கழித்துப் பட்டத்துக்கு வந்த போப்பாண்டவர் இரண்டு பாதிரிமார்களை மட்டும் அனுப்பித் தர இசைந்தார். அந்த இரண்டு பாதிரிமார்களுடன் இந்த இரண்டு சகோதரர்களும் 1271-ஆம் வருஷம் மறுபடியும் சீனாவுக்குப் பயணமானார்கள். இவர்களுடன் மூத்த சகோதரனுடைய மகன் மார்க்கோபோலோ என்பவனும் புறப்பட்டான். அப்பொழுது இவனுக்குப் பதினேழு வயது. இவன் பிறந்தது 1254-ஆம் வருஷம்.

பயணமானவர் மூவரென்றாலும் இளையவனை மார்க்கோ மட்டும்தான் — இவனை வெறும் மார்க்கோ என்றே இனி சொல்லிக் கொண்டு போவோம் — பயண வரலாற்றைப் பற்றித் தெரிவித்திருக்கிறான். தவிர, இவன் ஒருவன்தான், குப்ளாய் கானுடைய சேவையில் நீண்ட காலம் இருந்து, அவனுடைய நம்பிக்கையையும் மதிப்பையும் பெற்றவன். மற்ற இருவரும் குப்ளாய் கானின் சேவையில் இருந்தார்களென்று மட்டும் தெரிகிறதே தவிர அவர்களைப் பற்றி வேறு விவரமான தகவல்கள் தெரியவில்லை. ஆதலின், மார்க்கோவினுடைய பயணமாகவே நாம் இங்கே சொல்லிக் கொண்டு போவோம். மூவருடன் புறப்பட்ட இரண்டு பாதிரிமார்களும் பாதி வழியிலேயே மேற்கொண்டு செல்ல முடியாமல் திரும்பிவிட்டனர் என்று சொல்லி முதலிலேயே அவர்களுடைய கதையை முடித்து விடுவோம்.

மார்க்கோ, பாரசீக வளைகுடாவிலுள்ள ஒரு துறைமுகத்துக்கு வந்து அங்கிருந்து கடல் மார்க்கமாகச் சீனாவுக்குச் செல்ல முதலில் திட்டமிட்டான். ஆனால் அது சாத்தியமில்லாமற் போகவே, தரை மார்க்கமாகத் தன் பயணத்தைத் தொடங்கத் தீர்மானித்தான். அப்படியே பாரசீகத்தின் வடக்குப் பக்கமாகச் சென்று அங்கிருந்து சிறிது கிழக்கே திரும்பி, ஆக்ஸஸ் என்ற பெரிய நதியையும் அநேக மலைகளையும் கடந்து, சுமார் பதினெட்டாயிரம் அடி உயரமுள்ள பாமீர் என்ற பீடபூமிக்கு வந்தான். பாமீர் என்ற பெயர் முதன் முதலாக மார்க்கோவின் பயணக் குறிப்புக்களில்தான் காணப்படுகிறது. இந்தப் பீடபூமி பன்னிரண்டு நாள் பயணப் பரப்புடையது. இங்கு குளிர் அதிகமென்றும், பட்சிகள்கூட இங்கு பறப்பதில்லை என்றும், நெருப்பு மூட்டினால் சுடர்விட்டு எரிவதில்லை என்றும் இதனால் ஆகார வகைகளைத் தயாரித்தே எடுத்துப் போக வேண்டியிருந்ததென்றும் மார்க்கோ குறிப்பிடுகிறான்.

இதற்குப் பிறகு மணற் குவியல்களும் கணவாய்களும் நிறைந்த கோபி பாலைவனம். இதன் அகலமான பகுதியில் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு நடந்து செல்வதாயிருந்தால் ஒரு வருடம் பிடிக்கும்; குறுகலான பகுதியில் செல்லக் குறைந்தபட்சம் ஒரு மாதமாவது பிடிக்கும். அப்படியானால் இதைக் கடப்பது எவ்வளவு கடினம்? ஆனால் மார்க்கோ எப்படியோ இதனைக் கடந்து விட்டான். இதற்குப் பிறகு சுமார் முப்பது நாட்கள் நடந்து சென்று கடைசியில் சீனாவின் வடக்குப் பகுதியில் உள்ள கான்ஸு மாகாணத்துக்கு வந்தான். அப்பொழுது குப்ளாய்கான் கெமென்பூ என்ற





நகரத்தில் தங்கியிருந்தான். இது தற்போதைய பீக்கிங் நகரத்துக்குச் சுமார் முந்நூற்றறுபத்தேழு மைல் தொலைவில் உள்ளது.

சுமார் நாற்பது மாதப் பயணத்துக்குப் பிறகு, ஏறக்குறைய 1275-ஆம் வருஷத் தொடக்கத்தில் மார்க்கோ தன் தந்தையுடனும் சிறிய தந்தையுடனும் குப்ளாய் கானின் அரசவையை அடைந்தான். இவனைப் பார்த்ததும் குப்ளாய் கானுக்கு இவனிடத்தில் தனியானதொரு பற்று ஏற்பட்டுவிட்டது. இவன் முகத்தை உற்றுப் பார்த்த வண்ணம், 'இந்த இளைஞன் யார்?' என்று இவனோடு வந்திருந்த மூத்தவர்களைக் கேட்டான். 'என்னுடைய மகன்; தங்களுடைய ஊழியன்' என்று பணிவோடு கூறினான் மார்க்கோவின் தந்தை. 'அப்படியானால் நிரம்ப மகிழ்ச்சி; என்னுடனேயே இருக்கட்டும் இவன்' என்றான் குப்ளாய்கான்.

மார்க்கோ, வெகு சீக்கிரத்தில் குப்ளாயின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகிவிட்டான். அரசவையின் நடைமுறைகள், மக்களின் பழக்கவழக்கங்கள் ஆகிய எல்லாவற்றைப் பற்றியும் நன்கு தெரிந்துகொண்டான். இவனுடைய கூர்மையான அறிவினையும், செயல் திறனையும் குப்ளாயின் கூரிய பார்வை கவனித்தவண்ணம் இருந்தது.

குப்ளாய் கான், தன் ஆஸ்தானத்தைச் சேர்ந்த அநுபவசாலிகளான சிலரிடம் முக்கியமான அலுவல்களை ஒப்படைத்து, அவர்களைத் தன் நாட்டுக்குள்ளும் வெளிநாடுகளுக்கும் அவ்வப்பொழுது அனுப்பி வருவான். அவர்களும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேலையை மட்டும் நிறைவேற்றிவிட்டுத் திரும்பி வந்து அதை அப்படியே ஒப்புவித்து விடுவார்கள். ஆனால் குப்ளாய்கானுக்கு இது திருப்தியளிப்பதில்லை. அந்தந்தப் பகுதிகளில் காணப்படும் விசேஷமான பொருள்கள், மக்களின் பழக்க வழக்கங்கள், அவர்கள் கொண்டாடும் தெய்வங்கள் முதலியவை பற்றி அறிந்து கொள்ள ஆவல் காட்டுவான். இந்த ஆவலைப் பூர்த்தி செய்து வந்தான் மார்க்கோ. இதனால் இவனிடம் அலாதியான பிடிப்பு ஏற்பட்டது குப்ளாய்கானுக்கு. இவனை யாங்செள என்ற மாகாணத்தின் மேலதிகாரியாக நியமித்தான். அந்தப் பதவியில் மூன்று வருஷ காலம் இருந்து, குப்ளாய்கானுக்குத் திருப்தி அளித்தான். இன்னமே விசேஷப் பொறுப்புக்களை ஒப்படைத்து இவனைச் சீனாவின் பல பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தான் குப்ளாய். அப்பொழுது சீனாவில் போக்குவரத்து வசதிகள் அதிகமாயில்லை. இதனால் மார்க்கோ அநேக இடங்களுக்குக் கால்நடையாகவே சென்று தன்னிடம் ஒப்படைத்த காரியங்களைச் செவ்வனே முடித்துக் கொண்டு வந்தான். நடைபயணத்துக்கு இவன் சலிப்புக் காட்டியதே இல்லை.

இப்படிச் சுமார் பதினேழு வருஷ காலம் குப்ளாய் கானுக்குச் சேவை செய்து கொண்டிருந்தான் மார்க்கோ. இந்தப் பதினேழு வருஷத்தின் பிற்பகுதியில் தன் அரசவையிலேயே அமர்த்திக் கொண்டு, மற்ற ஆஸ்தானிகர்கள் பொறாமைப்படக் கூடிய வண்ணம் இவனிடம் விசேஷ அபிமானம் காட்டி வந்தான் குப்ளாய்கான்

இப்படியிருக்கையில் மார்க்கோவுக்கு ஊர் திரும்ப வேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டது. ஆனால் குப்ளாய்க்கு இவனை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. மிகவும் தயங்கினான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குப்ளாய் கானுடைய உறவினனான அர்குன் என்பவன் பாரசீகத்தின் அதிபதியாக இருந்தான். இவனுடைய மனைவி 1286-ஆம் வருஷம் இறந்துவிட்டாள். அவள், அர்குன் மறுமணம் செய்துகொள்வதாயிருந்தால் ஒரு மங்கோலிய இனத்துப் பெண்ணையே தெரிந்தெடுத்துக்கொள்ள வேண்டுமென்று விருப்பம் தெரிவித்திருந்தாள். இதற்காக, தக்க ஒரு பெண்ணைத் தெரிந்தெடுத்தனுப்பும்படி அர்குன், குப்ளாய்க்கு ஒரு தூதுக்கோஷ்டியை அனுப்பியிருந்தான். குப்ளாயும் பதினேழு வயதடைந்திருந்த ஓர் அழகான பெண்ணைத் தெரிந்தெடுத்து அனுப்பினான். அந்தப் பெண்ணைத் தொடர்ந்து சென்ற மேற்படி தூதுகோஷ்டியினரின் விருப்பப்படி, மார்க்கோவும் அவர்களுடன் தரை மார்க்கமாகச் செல்ல முடியாத நிலையில், கடல் மார்க்கமாகச் செல்ல வேண்டுமென்று ஏற்பாடாயிற்று:


அப்படியே மார்க்கோ, தூதுகோஷ்டியுடன் 1292-ஆம் வருஷம் அமாய் என்ற துறைமுகத்திலிருந்து புறப்பட்டு, சையாம், சுமத்ரா, ஜாவா, இலங்கை, தமிழகம் ஆகிய நாடுகளின் வழியாகச் சுமார் இரண்டு வருஷங்களுக்குப் பிறகு பாரசீகம் போய்ச் சேர்ந்தான். இவன் போய்ச் சேருவதற்குள் அர்குன் இறந்துவிட்டான். அவனுடைய சகோதரன் மகன் காஜான் என்பவன், குப்ளாய் தெரிந்தெடுத்தனுப்பிய பெண்ணை மணந்து கொண்டான். மார்க்கோவும், அங்கிருந்து புறப்பட்டு 1295-ஆம் வருஷம் வெனிஸ் நகரம் போய்ச் சேர்ந்தான். இவனோடு இவனுடைய தந்தையும், சிறிய தந்தையும் போய்ச் சேர்ந்தனர்.

இவர்களை உறவினரோ, ஊராரோ முதலில் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. கருமை படிந்த முகம், தளர்ந்துபோன உடல், அழுக்குப் படிந்த உடை, இந்தக் கோலத்திலிருந்த இவர்களை, 'யாரோ அந்நியர்கள்; தார்த்தாரியர்கள் போலிருக்கிறது' என்று எண்ணி விட்டார்கள்; அலட்சியமும் செய்தார்கள். பார்த்தான் மார்க்கோ. ஒரு யுக்தி செய்தான். உறவினர் சிலரையும், ஊராரில் முக்கியமான சிலரையும் அழைத்து ஒரு விருந்து நடத்தினான். விருந்தின்போது, தான் சீனாவிலும், வழியில் சில நாடுகளிலும் சேகரித்துக் கொண்டு வந்திருந்த விதம் விதமான உடைகளை மாற்றி மாற்றி அணிந்து கொண்டு வந்து எல்லோருக்கும் காட்டினான். கடைசியில் கனமான ஓர் அங்கியைப் போட்டுக்கொண்டு வந்து காட்டிவிட்டு, பிறகு அதன் ஓரங்களைக் கிழித்தான். அதிலிருந்து நவரத்தின வகைகள் பொலபொலவென்று கீழே உதிர்ந்தன. 'எவ்வளவு விலை உயர்ந்த

‘சீக்கிரமாகவும் எளிதாகவும் தைப்பதற்கு மாற்றிக் கொள்ளுங்கள்’

உங்கள் தையல் எந்திரத்தில் ஒரு


உஷா மோட்டாரை பொருத்துங்கள்



இப்பொழுது கையினால் செய்யப்படும் வேலைகளை மாற்றிக் கொள்ளலாம். உங்கள் தையல் எந்திரத்துடன் ஒரு உஷா மின்சார மோட்டாரை பொருத்துங்கள். ஏஸி டிஸி இரண்டிலும் இயங்கக்கூடின உஷா மின்சார மோட்டார்கள் உங்கள் தையல் எந்திரத்திற்கு புது சக்தியை கொடுக்கிறது. தைப்பது எளிதாகவும் சீக்கிரமாகவும் சுத்தமாகவும் இருக்கும். இன்றைக்கே ஒரு உஷா மோட்டாரை பொருத்துங்கள்.

‘எளிதாக தையுங்கள்
சக்தியுடன் தையுங்கள்
உஷாவினால் தையுங்கள்

உஷா



ஜே. என்ஜினியரிங் ஒர்க்ஸ் லிமிடெட், கல்கத்தா-31.

பொருள்கள்!' என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். பிறகு மூவரையும் பல ஆண்டுகளுக்கு முன்பு பார்த்ததாக நினைவு வருகிறதென்று சொல்லி உறவு கொண்டாடத் தொடங்கினர். செல்வம் படைத்தவர்களென்று தெரிந்துவிட்டால் அவர்களிடம் வெகு தொலைவில் ஒதுங்கிக்கிடந்த நீண்ட உறவுகளெல்லாம் நெருங்கி வருகின்றன என்பது எவ்வளவு உண்மை!

கி.பி. பதின்மூன்றும் நூற்றாண்டில் இத்தாலியின் பெரும் பகுதி சிறு சிறு ராஜ்யங்களாகப் பிரிந்து ஒன்றுக்கொன்று சண்டை போட்டுக் கொண்டிருந்தன. 1298 வருஷம் ஜினோவாவுக்கும் வெனிஸுக்கும் கடற் சண்டை ஒன்று நடைபெற்றது. அதில் மார்க்கோ ஒரு பகுதிப் படைத் தலைவனாக இருந்து வீரத்துடன் போர் செய்தான். ஆயினும் என்ன? இவன் பக்கம், — அதாவது வெனிஸ் தோல்வி அடைந்தது. இவன் யுத்தக் கைதியானான். சிறையில் ஒரு வருஷ காலம் கழித்தான். பிறகு விடுதலை கிடைத்தது. சிறையிலிருந்தபோதுதான் இவன் தன்னைப்போல் கைதியாயிருந்த ஒருவனிடம், தான் சீனுவுக்குச் சென்று வந்த வரலாற்றைப் பற்றி வாய்மொழியாகச் சொல்லி வர, அதை அவன் எழுதிக் கொண்டு வந்தான். அதுதான் பின்னர் ஒழுங்கான நூல் வடிவம் பெற்றுப் பல மொழிகளிலும் வெளி வந்திருக்கிறது.

சிறையிலிருந்து வெளி வந்த பிறகு, மார்க்கோ, சுமார் இருபத்தைந்து வருஷ காலம், ஓரளவு வசதிகளுடன் வாழ்க்கையைக் கழித்து விட்டு, 1324-ஆம் வருஷம் ஜனவரி மாதம் ஒன்பதாம் தேதி ஏறக்குறைய எழுபதாவது வயதில் இறந்து போனான்.

பீக்கிங் நகரத்துக்கருகில் லூக்கௌச்சியோ என்ற ஒரு கிராமம் இருக்கிறது. இங்கு மார்க்கோவை நினைவு கொள்ளுகிற வகையில் 'மார்க்கோ போலோ வாராவதி' என்று ஒரு வாராவதி இருக்கிறது. 1937-ஆம் வருஷம் ஜூலை மாதத்திலிருந்து சுமார் ஏழு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற சீன-ஜப்பானிய யுத்தம் இந்த மார்க்கோபோலோ பாலத்திலிருந்துதான் தொடங்கியது.

மார்க்கோ, தன் பிரயாண நூலில், தான் கண்டதும், கேட்டதுமான அநேக பிரதேசங்களைப் பற்றியும் அங்குள்ள மக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றியும் பல விவரங்கள் தெரிவிக்கிறான். குப்லாய் கான் சேவையில் பீக்கிங் நகரத்தில் தங்கியிருந்தபோது, அந்நகரத்தின் அமைப்பு, குப்லாய் உபயோகப்படுத்தி வந்த விசாலமான பல அரண்மனைகள், அவனுடைய ஆடம்பர வாழ்க்கை முதலியவைகளைப் பற்றி வியந்து வியந்து கூறுகிறான். பீக்கிங் நகரத்தில் மட்டும் ஐயாயிரம் சோதிடர்கள் இருந்தார்களென்று இவன் தெரிவிக்கிறான்.



"எங்கள் சங்க நிதிக்காக ஒரு நாடகம் நடத்துகிறோம். இடைவேளையின்போது நீங்கள் வந்து மேடையிலே தோன்ற வேண்டும்."

"வீட்டிலிருந்து நான் மேக்கப் போட்டுக் கொண்டு நாடகத்தின் மத்தியில் வருவேன். ஆனால், நீங்கள் ரசிகர்களிடம், இப்போதுதான் ஸ்டூடியோவிலிருந்து ஷூட்டிங்கை முடித்துக் கொண்டு நேரே வருவதாகக் கூற வேண்டும். சரிதானா?"

தமிழகத்துக்கு இவன் வந்த காலத்தில் பாண்டிய மன்னர்களின் செல்வாக்கு மேலோங்கியிருந்தது. 'உலகத்திலேயே மிக அழகுடையதும், செல்வம் நிறைந்தது மாயுள்ளது பாண்டிய ராஜ்யம்' என்று புகழ்கிறான் மார்க்கோ. இத்தகைய பாண்டிய ராஜ்யத்தில் இவன் வந்தபோது சுந்தர பாண்டியன் என்பவன் ஆண்டு கொண்டிருந்ததாக இவன் கூறுகிறான். குலசேகர பாண்டியனுடைய (1268–1308) சொந்த மகன் சுந்தர பாண்டியனையே இவன் குறிப்பிடுகிறானென்று நாம் கொள்ளலாம்.

தமிழகத்தில் முத்துக்கள், பவழங்கள், மற்ற நவரத்தினங்கள் முதலியவை ஏராளமாகக் கிடைக்கின்றனவென்றும், இவற்றிலிருந்து அரசனுக்கு வருஷந்தோறும் ஒரு பெருந் தொகை கிடைக்கிறதென்றும் பொதுவாக நாட்டில் எல்லா வகையிலும் சுபிட்சம் நிலவுகிறதென்றும் மார்க்கோ கூறுகிறான்.

தமிழகத்து மக்களின் பழக்க வழக்கங்களில் சில மார்க்கோவுக்கு அதிசயமாகத் தென்படுகின்றன. பொதுவாக ஆண்கள் இடுப்பளவுக்குத்தான் துணி உடுத்திக்கொள்கிறார்கள். மிதியடி இல்லாமல் வெறுங்காலால் நடக்கிறார்கள். வீட்டில் பெண்டுகள் சாணம் போட்டு மெழுகுகிறார்கள். தண்ணீர் குடிக்கும்போது, எல்லோரும் பாத்திரத்தை உதட்டில் பொருத்தவிடாமல் தூக்கிக் குடிக்கிறார்கள். தினம் இரண்டு தடவை ஸ்நானம் செய்கிறார்கள். தரையில் உட்கார்ந்து பேசுவதோ புசிப்பதோ இவர்களுக்குப் பழக்கமாயிருக்கிறது. எல்லோரும் வெற்றிலை பாக்கு போட்டுக் கொள்கிறார்கள். எங்கும் மது அருந்தும் பழக்கத்தைக் காணோம். சாமுத்திரிகா சாஸ்திரம், சோதிடம், மாந்திரிகம் ஆகிய இவைகளில் ஜனங்களுக்கு அதிக நம்பிக்கை. இவன் கூறும் இந்த மாதிரியான அதிசயங்களைக் கேட்டுத் தமிழர்களாகிய நாம் அதிசயப்படத் தேவையில்லை;

குண்டுமல்லிகை

அரு. ராமநாதன்

உமா வியப்புடன் பிச்சமணியை நிமிர்ந்து பார்த்தாள். அப்போதும் உமாவின் கையைத் தன் பிடியிலிருந்து அவன் விடவில்லை. அந்தப் பிடியின் இறுக்கம் உமாவின் நெஞ்சைப் பலமாக அழுத்தியது.

''உமா! என்னைச் சின்னப் பையனென்று இன்னுமா நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று பிச்சமணி குமுறினான்.

''இல்லை, இல்லை......'' என்று உமா தன் கையைப் பிச்சமணியின் பிடியிலிருந்து மிருதுவாக இழுத்து விடுவித்துக் கொண்டாள்.

பிச்சமணிக்கு அழுகை வந்துவிடும் போலிருந்தது. ''நான் உங்கள் வீட்டுக்கு எப்போது வந்தேன், தெரியுமா உமா?'' என்று அவன் உணர்ச்சி பொங்கக் கூவினான்.

''எப்போது வந்தாய்?.....''

''நேற்று இரவே இங்கு வந்துவிட்டேன். ஆனால்...... ஆனால்.... அந்த அகால நேரத்தில் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டி உங்களை எழுப்பக் கூடாதென்று வாசற்படியிலேயே உட்கார்ந்திருந்தேன். இரவு முழுதும் நான் தூங்கவும் இல்லை. மழையில் நனைந்தபடி நான் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்.''

''அப்படியானால்.....?''

''ஆமாம், உமா! நீங்கள் விடியற் சாமத்தில் கண் விழித்து எழுந்தது, வீணை வாசித்தது, ஆண்டாள் பாசுரங்கள் பாடியது — எல்லாம் என் காதில் விழுந்தன. நீங்கள் ஏதோ கனவு கண்டுதான் அந்த நேரத்தில் விழித்திருக்கிறீர்கள். அந்தக் கனவை மறப்பதற்கும் உங்கள் மனதை ஏமாற்றிக் கொள்வதற்கும்தான் வீணையை எடுத்து வைத்துக் கொண்டு பாட ஆரம்பித்தீர்கள். ஆனால் உங்களை அறியாமலே 'கனாக் கண்டேன் தோழீ.' என்று பாடி விட்டீர்கள். நீங்கள் கண்ட கனவும் அதுவாகத்தான் இருக்கும்'' என்று பிச்சமணி சொல்லி விட்டு வாய் நிறையச் சிரித்தான்.

உமாவின் அமைதியான முகத்தில் திகைப்பும், ஒரு விதச் செம்மையும் பரவின.

அதுதான் சமயம் என்று பிச்சமணி ஆர்வம் ததும்பும் குரலில், ''நீங்கள் கடைசியாக ஒரு பாசுரம் பாடினீர்களே? 'கருப்பூரம் நாறுமோ, கமலப் பூ நாறுமோ, திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ' என்று நீங்கள் பாடிய போது...... அப்போது— அப்போது.....'' என்று மேலே சொல்ல முடியாமல் உணர்ச்சிகளால் தத்தளித்துத் தடுமாறியவாறு உமாவின் பவளச் செவ்வாயையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றான்.

உமாவின் உதடுகளில் கருப்பூரத்தின் மணம், கமலப் பூவின் மென்மையோடு அதன் நூதன வாசனை, அமுதமயமான தித்திப்பு எல்லாம் உறைந்திருப்பது போல் ஒரு பிரமையும் உண்டாயிற்று.

உடனே பிச்சமணியின் வாய் இதழ்கள் வண்டுகளின் இறக்கைகளைப் போலத் துடித்தன. தன் வலிமையான கைகளைப் பிச்சமணி பிரம்மப்பிரயத்தனப்பட்டு அடக்கி வைத்துக் கொண்டான். ஆனாலும் உதடுகளின் படபடப்பு நிற்கவில்லை.

உமா ஒரு கணம் மௌனமாக நின்றாள். பிறகு அவள், ''நீ இப்படியெல்லாம் வருவாய் என்று நான் நினைக்கவே யில்லை, பிச்சமணி!'' என்று சொன்னாள்.

''நினைக்கவே யில்லையா?'' என்று பிச்சமணி திருப்பிக் கேட்டான். அவனுடைய அந்தக் குரலில் சவால் விடும் தீவிரமும் அதன் கூர்மையுந்தான் தொனித்தன.

உமா இரண்டொரு வினாடி நேரம் பிச்சமணியின் முகத்தை ஏறிட்டு உற்றுப் பார்த்தாள். இருவர் கண்களும் சந்தித்தன. பெண்மையின் விழிகளில் கூர்முனை போல் தொனிக்கும் ஆராய்ச்சியையும், கண்டிப்பையும் — ஆண்மையின் விழிகள் அலாக்காகத் தூக்கியெறிந்து விட்டு அப்படியே ஆட்கொண்டு விடும்போல் இருந்தன.

அப்போதும் உமா தன் விழிகளை இறக்கிக் கொள்ளவில்லை. விழிகளை இறக்கினால் தன் நிலை தாழ்ந்து போய் விடும் என்றே நினைத்தாள். அதனால் அவள் நன்றாகவே நிமிர்ந்து பிச்சமணி

யின் விழிகளை அமைதியாக உற்றுப் பார்த்துக் கொண்டே, ''நீ இப்படியெல்லாம் இங்கு வருவாய் என்று நான் எதற்காக நினைக்க வேண்டும்?'' என்று கேட்டாள்.

''இருந்தாலும் என்னைப் பார்த்ததும் நீங்கள் திகைத்துக் குழம்பினீர்கள், இல்லையா?''


''நான் எதற்காகத் திகைக்க வேண்டும்? எதற்காகக் குழம்ப வேண்டும்?''

''உமா! உங்கள் மனத்தை மறைத்துப் பேசவில்லையே?''

''நான் எதற்காக மறைத்துப் பேச வேண்டும்?''

''உமா! உங்களால் என்னைக் கோபப்படுத்தி விட முடியாது!'' என்று பிச்சுமணி சொல்லிவிட்டுச் சிரித்தான்.

உமா தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு கம்பீரமாக நடந்து சென்று ஒரு மூலையில் கிடக்கும் வீணையை எடுத்தாள். அந்த வீணைதான் கனவுகளைப் பிச்சுமணியின் கண்களில் வளர்க்கின்றன என்று நினைத்து அதை உறையால் மூடி ஒரு மூலையில் சுவர் மீது சாய்த்து வைத்தாள். உறையால் அந்த வீணையை மூடி விடலாம். ஆனால் பிச்சுமணியின் இதய வீணையை எந்த உறையால் மூட முடியும்? உமாவின் ஆளுகைக்கு உட்படாத அவளுடைய அழகிய உருவமும் அன்புள்ளமும் அல்லவா பிச்சுமணியின் இதய வீணையில் மாயக் கரங்களாக மாறி இன்ப கீதங்களை மீட்டிக்கொண்டிருக்கின்றன? அந்த



இதுப் வீணையின் நாதத்துக்கு இணை சேர்ப் பது போல் உமாவின் சந்தப் பிடிப்பான உதடுகள் வேறல்லவா மாய சதஸாக மாறிப் பிச்சுமணியின் அதரங்களைச் சதா சதுராட வைத்துக் கொண்டிருக் கின்றன?

ஆனால் உமா அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. அவள் ஒரு நிர் மானத்துடன் திரும்பிப் பிச்சுமணி யின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

ஆசையின் தவிப்பும் அழுகையின் விழிப்பும் பொங்கிப் பரவும் அந்த முகத்தைப் பார்த்துக் கொண்டே, ''பிச்சுமணி! நீ ஏன் இங்கே வந்தாய்?'' என்று உமா கேட்டாள்.

''அதைச் சொல்வதற்கு முன்னால் உங்களிடம் ஒன்று கேட்கிறேன். அதற் குப் பதில் சொல்லுகிறீர்களா உமா?''

''நீ என்ன கேட்கப் போகிறாய்?''

''உமா! நீங்கள் என்ன கனவு கண் டீர்கள்...?''

''அது மறந்து போச்சு!''

''மறந்திருந்தால் விடியற்சாம நேரத் தில் குளிப்பதற்காகக் கிணற்றடிக்கு எழுந்து போயிருக்க மாட்டீர்கள். வீணையை எடுத்து வைத்துக் கொண்டு அப்படிப் பாடியிருக்கவும் மாட்டீர்கள். சொல்லுங்கள் உமா! நீங்கள் பொய் சொல்லவே மாட்டீர்களே! இப்போது எனக்காக ஒரு பொய் சொல்ல வேண் டாம்!'' என்றான் பிச்சுமணி.

''கனவுகளை யாராவது நினைத்து அர்த்தம் பண்ணிக் கொண்டிருப்பார் களோ? அது பைத்தியக்காரத்தனமல் லவா?'' என்று அலட்சியமாகச் சொன்ன உமா, ''அதிருக்கட்டும். நீ இங்கு வந்த விஷயத்தைச் சொல்!'' என்று தீவிரமாக அழுத்திக் கேட்டாள்.

''அதைச் சொல்லட்டுமா?''

''சொல்!''

பிச்சுமணி சிறிது நேரம் மௌன மாகவே நின்றான்.

பொழுது புலர்ந்ததின் மெல்லிய வெளிச்சம் வெள்ளி உருக்குப் போல் முற்றத்தைத் தாண்டிக் கூடத்திலும் ஏறி வந்து கொண்டிருந்தது. அதைக் கண்டதும் உமா மற்ற நாட்களாக இருந்தால் இனி மின்சார விளக்குகள் அனாவசியமாக எரிவானேன் என்று அணைத்திருப்பாள். ஆனால் இன்று விளக்கை அணைக்கவில்லை. அது உசித மாகப் படவுமில்லை.

வெளி வெளிச்சம் கூடத்தினுள் ஏற ஏற, இரவின் நிலா மயக்கம் மறைந்து விடுமோ என்ற தவிப்பு உண்டாகவே பிச்சுமணிக்குக் காதலின் ஜுரவேகம் அதிகரித்தது. உமாவுக்காகத் தன் தாத்தா, தன் வீடு, வாசல் முதலான சகலத்தையும் துறந்துவிட்டு 'இனி உமாவே தனக்கு எல்லாம்' என்ற நிலையில் அநாதையாக வந்துவிட்டான். இனி உமாவை எப்படியும் தன் வாழ்க் கைத் துணைவியாக்கிக் கொண்டுவிட வேண்டும். அதற்கு அடையாளமாக உமாவின் முகத்தில் இப்போதே காத லின் முத்திரையைப் பதித்துவிடவேண் டும். சூரிய வெளிச்சம் பெரிதாகக் கிளம்பி வந்து கண்ணையும் கைகளையும் கூச வைப்பதற்குள் தன் எண்ணத் துக்கு எதிரொலியைக் கண்டேயாக வேண்டும். பொழுது புலர்ந்ததும் புலராததுமாய் இருக்கும் இந்த நேரம் தான் உள்ளங்கள் சரிந்து ஒன்றோடு ஒன்று ஒட்டி உறவாடிச் சங்கமமாகிவிடு வதற்குச் சரியான தருணம்.

இயற்கை உணர்வு அந்த எண்ணத் தைப் பிச்சுமணிக்குத் தூண்டிவிடவே காதலின் காந்தமும், அதன் பசியும் நிறைந்த கண்களால் உமாவை உச்சி முதல் உள்ளங்கால் வரையில் ஏற இறங்கப் பார்த்தான்.

அதிகாலையில் குளித்த உடம்போடு குளுமையாக விளங்கிய உமா, தன் நிறத்தோடு இணைந்து தன் உடல் வாகைத் தழுவிக் கொள்ளும்படியான புதுப் புடவையையும் ரவிக்கையையும் அணிந்து, நெற்றியில் அழகாகச் சிறு திருநீறும் குங்குமத் திலகமும் இட்டு, தலைக் கூந்தலில் பூச்சூடி, அதன் நறு மணத்தோடு புதிய பூச்செண்டுபோல்க் குலுங்கினாள்.

கண்களின் ரசனை பிச்சுமணியின் உள்ளத்தில் மகிழ்ச்சிக் கூத்தாடி மலரும் கனவுகளாகப் பொங்கின: உமா எவ்வளவு அழகாக இருக்கிறாள்? என்ன பூரிப்பு? ரோஜா மொட்டுக் களைப் போன்ற கன்னங்களில்தான் எவ் வளவு செழுமை? மெழுகுப் பொம்மை போன்ற தோற்றத்தில்தான் எத்தனை வாளிப்பு? முகப் பவுடர் பூசாமலே முகத்தில்தான் எத்தனை மெருகு? அவ ளது அமைதியான கண்களின் ஆழத் திலே என்ன ரகசியங்கள் குடிகொண் டிருக்கும்? அவற்றையெல்லாம் அந்தக் கண்களின் ஒளியோடு அள்ளி அள்ளிப் பருக வேண்டும்! இயற்கையாகவே சிவந்திருக்கும் அதரங்களிலே, நெஞ் சத்துப் பேச்சுக்கள் எப்படியெல்லாம் மறைந்திருக்கும்? அவற்றில் கர்ப்பூரம் மணக்குமா, கமலப் பூ மணக்குமா? அவை கசப்பை ஊட்டினாலும் உள்ளூறத் தித்திக்குமே! குங்குமத் திலகமிட்ட

புதியது

ப்ரோடெக்ஸ் ஒரு சர்வ-காரிய டால்க்.

அது குடும்பத்தினர் அனைவருக்கும் மிகச்சிறந்தது.



ப்ரோடெக்ஸ் ஒரு உயர்ந்த ரக, மனோரம்மிய நறுமணமுடைய, சர்வ-காரிய டால்க். எல்லாக் குடும்பத்தினருக்கும், குளித்தபிறகும், கோடைக்காலத்தில் குளிர்ச்சிக்கும் மிகச் சிறந்தது. ப்ரோடெக்ஸ் வாங்குங்கள்—மிக மிகப்பெரிய டப்பா-மிகமிகக் குறைந்த விலை.



ப்ரோடெக்ஸ்

ஆல்-பர்ப்பஸ் டால்கம் பௌடர்

PTP-6-7-TAM.

நெற்றியில்தான் என்ன பிரகாசம்? அந்தக் குறு நெற்றியிலே கூந்தல் கற்றைகள் குறும்புத்தனமாக வருடி வருடி எப்படி யெல்லாம் கொஞ்சி விளையாடுகின்றன? அவளது கூந்தலில் சூடியிருக்கும் பூச்சரங்களுக்குத்தான் என்ன பாக்கியம்? அலை அலையான கூந்தலிலே அம்மல்லிகைச் சரங்கள் எவ்வளவு உரிமையோடு எப்படியெல்லாம் உல்லாசமாக விழுந்தும் புரண்டும் படர்ந்தும் மறைந்தும் ஆனந்தக் கூத்தாடுகின்றன? மஞ்சள் பந்தல் போன்ற உமாவின் பாதங்களை ஏந்தி நிற்கும் இந்தத் தரை ஓர் இருதயமாக மாறினால் அது அனுபவிக்கும் உணர்வுகளெல்லாம் எப்படி யிருக்கும்? உமாவின் கை அசைவுகளோ நெஞ்சை அள்ளுகின்றனவே!

பிச்சுமணியின் வாய் இதழ்கள் துடித்தன. உமாவின் அந்தக் கைகளை, அந்தக் கன்னங்களை, அந்தக் கண்ணிமைகளோடு கண்களை, அந்த நெற்றியை — அந்தக் கூந்தலை, அந்தப் பாதங்களை...

பிச்சுமணி தன்னை மறந்து விட்டான். புருவங்களைக் கரும்பு வில் போல் வளைத்து, தன் காந்தக் கண்களின் பார்வைகளையே மன்மத பாணங்களாக்கிக் கொண்டான். அவனது கண்கள் கரு வண்டுகளாக மாறி உமாவின் நூதன அழகு ஜொலிப்புகளிலேயே மொய்த்துக் கொண்டிருந்தன.

அவ்வண்டுகளுக்கு அழகின் போதை ஏற ஏற அவனது வலிமையான கைகள் முறுக்கேறின. மத்தகஜங்களின் துதிக்கை போலவே ஆடும் அந்தக் கைகளை அவன் மிகவும் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டான். ஆனால் அவன் விரும்பும் குறும்புத்தனத்தை யெல்லாம் கண்களில் மின்னலிடும் பார்வைகளே காட்டிக் கொடுத்து விட்டன.

உமா மிகவும் அமைதியான குரலில், "பிச்சுமணி! நீ ஏன் இங்கே வந்தாய்? அதை இன்னும் சொல்லவில்லையே?" என்று கேட்டாள்.

"எதாக இருந்தாலும் சொல்லலாமா...?"

"சொல்! மனசில் வைத்துக்கொண்டிருந்தால்தான் பாரமாக இருக்கும்!"

பிச்சுமணி சட்டென்று தாவி உமாவின் கைகளைப் பற்றிக் கொண்டு ஜுரத்தின் ஜன்னி வேகத்தில் பிதற்றுபவனைப்போல் உணர்ச்சிகளெல்லாம் பீறிட வெகு உருக்கமாகவும் வேகமாகவும் கூறலானான்.

"உமா! உமா! நான் இங்கே வராமல் வேறு எங்கே போக முடியும்? என் மனசுக்கு ஆறுதலோ, அழிவோ எதாக இருந்தாலும் உங்களிடம் வராமல் இருக்க முடியவில்லை, உமா! நான் சொல்லுவதையெல்லாம் கவனித்துக் கேளுங்கள். நடுவில் காதைப் பொத்திக் கொள்ளாதீர்கள். கண்ணை மூடிக் கொள்ளாதீர்கள். என்னை நன்றாகப் பார்த்துக் கொண்டே நான் சொல்லுவது முழுவதையும் நீங்கள் கேட்டுத்தான் ஆக வேண்டும்... நான் உங்களிடம் ஓடோடி வந்து விட்டேன். ஏனென்றால்... ஏனென்றால்... எனக்கு இந்த உலகத்தில் இருப்பதெல்லாம் நீங்கள்தான்! நீங்கள்தான்! உங்களைத் தவிர எனக்கு வேறு யாருமே இல்லை; இனிமேல் இருக்கவும் முடியாது! அதனாலே... அதனாலே... நீங்கள் எனக்கு வேண்டும்! எனக்கே எனக்கு வேண்டும்! என் வாழ்க்கை முழுவதற்கும் வேண்டும்! உங்களை விட்டுப் பிரிந்து என்னால் இருக்கவே முடியாது, உமா!... உங்களைப் பொறுத்தவரை உங்களுக்கு நான் ஒன்றுமே இல்லை என்றும் நீங்கள் மனப்பூர்வமாகச் சொல்ல முடியாது. அப்படி நீங்கள் சொன்னால் அதை நான் நம்ப மாட்டேன்; நம்பவே மாட்டேன்! தூக்கத்தில் என் கனவுகளில் கூட நீங்கள்தான் நிறைந்திருக்கிறீர்கள், உமா! அதுபோல் உங்கள் கனவுகளிலும் நான்தான் நிறைந்திருப்பேன்!

நரகத்தில் இங்கர்சால்

அறிஞர் இங்கர்சால் ஒரு நாத்திகர். மதகுருக்களை அவர் எதிர்த்தாலும் சொந்த முறையில் அவர்கள்மீது வெறுப்பு இல்லை. ஒருமுறை பிலிப்ஸ் புருக்ஸ் எனும் பாதிரியார் இறப்புப் படுக்கையில் இருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் அவரைப் பார்க்கப் போனார். பலர் அவரைப் பார்க்க வந்திருந்தனர். ஆனால் பாதிரியார் எவரையும் பார்க்க விரும்பவில்லை. இங்கர்சாலை மட்டும் அவர் தம்மிடம் அழைத்தார். ஒரே வியப்பு. இங்கர்சால் அறையினுள் நுழைந்து, "நீங்கள் எல்லோரையும் போகச் சொல்லி என்னை மட்டும் அழைத்தது ஏன்?" என்று பாதிரியைக் கேட்டார். உடனே பாதிரியார் "வேறொன்றுமில்லை, என்னுடைய நண்பர்களை யெல்லாம் சொர்க்கத்தில் என்னால் பார்த்துக் கொள்ள முடியும் என்னும் நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால் உங்களைப் பார்ப்பது இதுவே இறுதியாக இருக்கலாமல்லவா? அதனால்தான்!" என்றார் தயங்காமல்.


'உமா உமா' என்று உங்கள் பெயரைச் சொல்லுவதிலேயே என் வாயெல்லாம், என் கனவெல்லாம் இனிப்பது உங்களுக்குத் தெரியும் உமா! அவ்வளவு தூரம் என் உள்ளத்தை உங்களுக்கு அர்ப்பணித்து விட்டேன். நீங்கள்— இல்லாவிட்டால் எனக்கு உள்ளம் என்பதே இராது. இந்த உலகத்தில் எனக்கு எதுவுமே இராது. அதனால் இல்லையென்று சொல்லாதீர்கள் 'உமா! நான் உங்களை உயிருக்குயிராய்க் காதலிக்கிறேன்! அதுபோல் நீங்களும் என்னைக் காதலிப்பதாகச் சொல்லுங்கள் உமா! தயவுசெய்து அதை மனம் விட்டுச் சொல்லுங்கள்!''

இத்தகைய வாசகங்களுக்கு உமாவிடமிருந்து கடுமையான எதிர்ப்பும் கண்டிப்பும் கிளம்பும் என்று பிச்சமணிக்குத் தெரியும். ஆனால் அதுவே அவனது உணர்ச்சி வேகத்தையும், உமாவை அடைந்துவிடும் முயற்சியையும் அதிகமாக முடுக்கியது. மடைதிறந்த வெள்ளத்துக்கு இனி அணை போட விடக் கூடாது என்றும் நிர்மானித்துக் கொண்டான். அதனால் உமா பதில் சொல்வதற்கு இடம் கொடாமல் உமாவின் மிருதுவான கைகள் இரண்டையும் தன் கைகளுக்குள் சேர்த்துப் பிடித்து அவற்றின் வழியாகத் தன் நெஞ்சத்தின் தவிப்புகளையெல்லாம் கொட்டுவது போல் உணர்ச்சிகரமான வார்த்தைகளைத் தொடர்ந்து பொழியலானான்.

''உமா! என்னை 'வெளியே போ' என்று இங்கிருந்து விரட்டிவிட வீணாக முயலாதீர்கள். ஏனென்றால் நான் போக மாட்டேன். உங்களை விட்டுப் போகவே மாட்டேன். உமா! உங்களுக்கும் என்மீது அன்பு உண்டு, உங்கள் இருதயத்திலே எனக்கு இடம் உண்டு என்பது எனக்குத் தெரியும். இல்லாவிட்டால் கன்யாகுமரியிலிருந்து நான் எழுதிய காதல் கடிதத்துக்கு நீங்கள் பதில் கடிதம் எழுதும் சிரமங்கூட எடுத்துக் கொண்டிருக்க மாட்டீர்கள்! ஆகவே கவனித்துக் கேளுங்கள். இப்போது நான் உங்களைக் கல்யாணம் செய்து கொள்ளவே வந்திருக்கிறேன்! இன்றே நாம் திருப்பதிக்குப் போகலாம்! நாளையே அந்தக் கோவிலில் நாம் கல்யாணம் செய்து கொள்ளலாம்! அல்லது நாம் ரிஜிஸ்தர் ஆபீசுக்குப் போய்ப் பதிவுத் திருமணம் செய்துகொள்ளலாம். நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ அப்படியே உங்களைக் கல்யாணம் செய்து கொள்கிறேன். அதற்காக நீங்கள் என்னென்ன நிபந்தனைகள் விதிக்கிறீர்களோ அத்தனையையும் ஏற்றுக் கொள்ளுகிறேன். உங்களை என் மனைவியாக்கிக் கொண்டு வாழ்க்கை முழுதும் சந்தோஷமாக வைத்துக் கொள்வேன். இது சத்தியம்! என் ஆத்மாவின் குரலும் மனச்சாட்சியும் எனக்குத் தெளிவாகத் தெரிவது போல் உங்களுக்கும் தெரியுமானால் இந்த உறுதியை நீங்களும் உணர்வீர்கள். நான் எல்லாவற்றையும் நன்றாக யோசித்து நிலையான ஒரு முடிவு செய்த பிறகுதான் உங்களிடம் வந்திருக்கிறேன். என்னை நீங்கள் மறுக்க முடியாது! யாரோ என்று என்னைப் புறக்கணித்து உங்கள் இதயத்திலிருந்து ஒதுக்கி விடவும் முடியாது! உமா! ஏற்கெனவே என் இதயத்துக்கு நீங்கள் சொந்தமாகிவிட்டீர்கள். அது போல் உங்கள் இருதயத்துக்கும் நான் சொந்தமாகிவிட்டேன். இதை இனிமேலும் நீங்கள் மறுக்க முயல்வதால் ஒரு பயனும் இல்லை. நீங்கள் என் வாழ்க்கைத் துணைவிதான்! நீங்கள் இல்லாமல் என்னால் வாழவே முடியாது! வாழலாம் என்ற யோசனையைக் கூட என்னால் பொறுக்க முடியாது!''

இவ்வாறு பிச்சமணி அடைமழை போல் உமாவின் முகத்தின் மீது பொழிந்த வார்த்தைகளெல்லாம் பாலைவனத்து மழையையும், கானகத்து நிலவையும் போலவே உமாவின் அசைவற்ற மௌனத்தில் வீணாயின. அப்படித்தான் பிச்சமணி நினைக்கும்படி உமாவின் முக பாவம் நிச்சலனமாகத் தோன்றியது. ஆனால் அவளுடைய கைகள் முன்போல் பூரண பலத்தோடு மூடியபடியே இருக்கவில்லை. இப்போது பிச்சமணியின் விசாலமான இருதயத்தின் மீது அக்கைகள் விரிந்தே கிடந்தன. அவற்றின் வழியாகப் பிச்சமணியின் ஆவேசமான இருதயத் துடிப்புக்களெல்லாம் உமாவின் உணர்வுகள் நெடுகிலும் பாய்ந்து பாய்ந்து பரவி அவளுடைய இருதயத்திலும் அதிர்ந்துகொண்டே யிருந்தன.

அவளுடைய குங்கும முகத்தை நோக்கிப் பிச்சமணி ஆர்வத்தோடும் அளவு கடந்த காதல் தாபத்தோடும் குனிந்து, அப்படியே தன் உள்ளமெல்லாம் கரைந்து உருகி, உமாவின் உள்ளத்தோடு கலந்து ஒன்றாகி விடவேண்டுமென்று தவிப்பது போல், குரலில் உணர்ச்சிகள் தத்தளிக்க, ''உமா! உமா!'' என்று முனகினான். (தொடரும்)


announcing!
new, foil-wrapped packet
with sealed-in goodness
flavour-fresh
crisp & crackly
Salto biscuits
flavour-fresh
crisp & crackly
Salto biscuits
J.B. Mangharam's
Salto
Manufactured by:
J.B. MANGHARAM & CO.
GWALIOR - INDIA
Madras Office: Post Box No. 1397; 35/37, Thambu Chetty Street, Telegram: 24696

[கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் மறைந்து பத்தாண்டுகளாகிவிட்டன. அதேபோல் அவரைப் பாரதியச் செய்த ரஸிகமணியும் நம்மிடையிருந்து சென்று பத்து ஆண்டுகளாகி விட்டன. குமரி வட்டத்தைச் சேர்ந்த சென்னை மக்கள் கவிமணிக்கு இம்மாதம் இருபதாம் தேதி ஒரு நினைவு விழாக் கொண்டாடத் திட்டமிட்டிருக்கின்றனர். இச் சமயத்தில் கவிமணியும் ரஸிகமணியும் உறவாடிய முறையை விளக்கும் இக்கட்டுரை நேயர்களுக்கு நல்விருந்தாக அமையும் என்று நம்புகிறோம். — ஆசிரியர்]

கவிமணியின் தரிசனம்

எஸ். வி. எஸ்.

ஒரு நல்ல கவிதையைப் பற்றி ஓர் ஆங்கில ஆசிரியர் இலக்கணம் வகுத்தார்.

ஒரு நல்ல கவிதையைப் படித்ததும், "ஆகா! இதை ஒரு குழந்தை கூடச் சொல்லி விடுமே! எவ்வளவு எளிமையாக இருக்கிறது!" என்று தோன்றுமாம். ஆனால் அதில் பொதிந்துள்ள ஆழ்ந்த உணர்ச்சிகளைக் காணும்போது "இதை வயதும் அநுபவமும் வாய்ந்த பெரியவர்களால் சொல்ல முடியாமற் போனால், அவர்களை மன்னித்து விடலாம்!" என்றும் தோன்றுமாம்!

ஆம், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களின் கவிதைகளைப் படிக்கும் போது நமக்கு மேற்கண்ட உணர்ச்சிதான் ஏற்படுகிறது. ஆகா! எவ்வளவு எளிமையாக இருக்கிறது என்று ஒரு கணம் தோன்றுகிறது. அடுத்த கணம் கவிதை தாங்கி வரும் உணர்ச்சிகளின் ஆழமும் அழுத்தமும் நம்மைத் திக்குமுக்காட வைக்கின்றன.

இதை நன்கு உணர்ந்து உலகத்துக்கு எடுத்துக் காட்டி வந்தவர் ரஸிகமணி டி. கே. சி.தான். ஆம், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைகூடத் தாம் பாடுவதெல்லாம் தமிழ் நாட்டுக் குழந்தைகளுக்குத்தான் என்று சொல்லி வந்தார். ஆனால் டி. கே. சி.தான், "பெரியவர்களாலே புரிந்து கொள்ள முடியாவிட்டால் அவர்களை மன்னித்து விடலாம்!" என்று சொல்லி வந்தார்.

ஒரு சமயம் கவிமணி அவர்கள் திருக்குற்றாலத்தில் ரஸிகமணி டி. கே. சி. அவர்கள் இல்லத்தில் தங்கியிருந்தார்கள்.

ஒரு நாள் மாலை ரஸிகமணி இல்லத்தில் பத்துப் பன்னிரண்டு நண்பர்கள் கூடி இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் ரஸிகமணி இல்லத்திலேயே கவிமணியையும் பார்க்கக் கொடுத்து வைத்ததைப் பற்றி அளவுகடந்த மகிழ்ச்சி. இந்தச் சூழ்நிலையை ரஸிகமணி இலேசில் விட்டு விடுவாரா? கவிதைச் சுவையை ரஸிக்க வந்த அன்பர்களுக்கு நல்ல விருந்து படைக்க இதை விடத் தக்க சந்தர்ப்பம் எங்கு கிடைக்கும்?

கவிமணியின் மலரும் மாலையும் புத்தகத்தைக் கொண்டு வரச் செய்தார் ரஸிகமணி. அதில் சில பக்கங்களைப் புரட்டினார். ஒரு பக்கத்தைத் திருப்பி வைத்துக் கொண்டார். ஒரு சிறு முன்னுரை வழங்கினார். இரண்டு தோழிகள் கோவிலுக்குப் போகிறார்கள். அவர்களுடன் கவிமணி நம்மையும் அழைத்துப் போகிறார் என்றார்.

கோவில் முழுதுங் கண்டேன் — உயர்
  கோபுரம் ஏறிக் கண்டேன்,
தேவாதி தேவனையான் — தோழி!
  தேடியுங் கண்டிலனே.

தெப்பக் குளங் கண்டேன் — சுற்றித்
  தேரோடும் வீதி கண்டேன்,
எப்பில்லைப் பாம் அவனைத் — தோழி
  ஏழையான் கண்டிலனே!

சிற்பச் சிலைகண்டேன் — நல்ல
  சித்திரவேலை கண்டேன்
அற்புத மூர்த்தியினைத் — தோழி!
  அங்கெங்கும் கண்டிலனே.

பொன்னும் மணியுங் கண்டேன் — வாசம்
  பொங்கு பூமாலை கண்டேன்,
என்னப்பன் எம்பிரானைத் — தோழி
  இன்னும் யான் கண்டிலனே.

தூபமிடுதல் கண்டேன் — தீபம்
  சுற்றி எடுத்தல் கண்டேன்,
ஆபத்தில் காப்பவனைத் — தோழி
  அங்கேயான் கண்டிலனே.

தில்லைப் பதியுங் கண்டேன் — அங்குச்
  சிற்றம்பலமும் கண்டேன்
கல்லைக் கனிசெய்வோனைத் — தோழி
  கண்களாற் கண்டிலனே.



கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

கண்ணுக் கினிய
  கண்டு — மனத்தைக்
காட்டில் அலைய விட்டு

பண்ணிடும் பூசை
  யாலே — தோழி!
பயனொன்றில்லை அடி!

உள்ளத்தில் உள்ளான்,
  அடி — அதுநீ
உணர வேண்டும், அடி!

உள்ளத்தில் காண்பாய்
  எனில்—கோயில்
உள்ளேயுங் காண்பாய் அடி!

மேற்கண்ட பாடலை ஆங்காங்கே நிறுத்தி விளக்கங்கள் கூறி ரஸிகமணி சாங்கோபாங்கமாகச் சொல்லி வந்த போது அன்பர்கள் கைதட்டி

யும் சிரித்தும், மந்திரத்தில் கட்டுண்டவர்கள் போல் அமர்ந்தும் ரஸித்தார்கள். இந்தப் பாட்டைச் சொல்லி முடிக்கக் கிட்டத்தட்ட முக்கால் மணி ஆயிற்று.

இவர்களிடையில் உட்கார்ந்திருந்த கவிமணிக்கு எப்படி யிருந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. நண்பர்களைப் போல் சிரித்துக் கொம்மாளம் அடிக்க முடியாமல் உடம்பெல்லாம் கூச மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் மனத் திரையில் இந்தக் கவி பாட உதவிய சம்பவங்களும் சூழ்நிலையும் அப்படியே சலனப் படம் போல், ஓடிக் கொண்டிருந்தன என்று நான் சொல்ல வேண்டும்.

ரஸிகமணி பாடலைச் சொல்லி முடித்து விட்டுச் சற்றுத் தமது பேச்சை நிறுத்தினார்கள்.

"இந்தப் பாட்டு எழுந்த விதமே தனி தான்" என்று ஆரம்பித்து, கவிமணி அந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார்கள்.

தினம் மாலை நேரங்களில் கவிமணி உலாவப் போவதுண்டு. ஒரு நாள் நாகர் கோவிலிலிருந்து அண்மையிலிருந்த ஒரு பெரிய கோவிலுக்கு மெல்ல நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு முன்னதாக இரண்டு நண்பர்கள் — சிறுவர்கள் — பேசிக் கொண்டே சென்றனர். அவர்கள் பேச்சிலிருந்து ஒருவன் முஸ்லிம் சிறுவன் என்றும், மற்றொருவன் சைவப் பிள்ளை என்றும் தெரிந்தது!

சைவப் பிள்ளை நெற்றியில் திருநீறு அணிந்து கோவிலுக்குப் போகும் உத்தேசத்துடனேயே புறப்பட்டிருக்கிறான். வழியில் அவனுடன் முஸ்லிம் சிறுவன் சேர்ந்து கொண்டான். முஸ்லிம் சிறுவனுக்கு வெகு நாட்களாக ஹிந்து மதக் கோவிலைப் பார்க்க வேண்டும் என்று ஆசை. அதை வெளியிட்டு, "நானும் உன் கூட வரட்டுமாடா!" என்று கேட்டான்.

"ஓ, வரலாம்!" என்றான்.

"என்னை முஸ்லிம் என்று இனம் கண்டு விட்டார்களானால் என்ன செய்வது?" என்று பயந்தான்.

"என்னைப் போலவே செய். நான் எங்கு கை கூப்பி நிற்கிறேனோ, அங்கே நீயும் கும்பிடு. நான் எங்கே கீழே விழுந்து கும்பிடுகிறேனோ அங்கே நீயும் கீழே விழுந்து கும்பிடு! மொத்தத்தில் என்னை அப்படியே காப்பி அடி! யாரும் கண்டு கொள்ள முடியாது!" என்று சமாதானம் கூறினான்.

இவற்றை யெல்லாம் பின்னால் நடந்து வந்தபடி கேட்டுக் கொண்டிருந்த கவிமணிக்கு ஆச்சரியமாக இருந்தது! இந்தச் சிறுவர்களைப் பின்தொடர்ந்து கோவிலில் என்ன செய்கிறார்கள் என்று பார்க்கக் கவிமணிக்கு ஆர்வம் உண்டாகி விட்டது.

கோவிலுக்குள் நுழைந்தார்கள். முன்னால் பிள்ளையார் சிலை இருந்தது. முஸ்லிம் சிறுவன், "இது என்ன?" என்று கேட்டான்.

"இவர்தான் பிள்ளையார். எங்கள் சிவ பெருமானின் மூத்த பிள்ளை. எடுத்த காரியங்களில் தடை ஏதுமின்றி நிறைவேற்றி வைப்பவர்!" என்று சொல்லி விட்டு நெற்றியில் குட்டிக் கொண்டு இரு காதுகளையும் கைமாற்றிப் பிடித்துக் கொண்டு தோப்புக் கரணம் போட்டு விட்டு மேலே நடந்தான்.

முஸ்லிம் சிறுவனோ, "ஓகோ!" என்றான்று அவனைப் போல் ஏதோ செய்தான்.

பிறகு முருகன் சந்நிதிக்குப் போனார்கள். ஹிந்துச் சிறுவன், "இவர்தான் முருகன் — தமிழ்க் கடவுள்!" என்று சொல்லி விளக்கி விட்டுப் பக்திபூர்வமாய் வணங்கினான். மற்ற சிறுவனோ, "ஓகோ!" என்று சொல்லி விட்டு நண்பனைப் பார்த்து ஏதோ செய்தான்,

இப்படி இரு சிறுவர்களும் மூல ஸ்தானம், அம்பாள் சந்நிதி, நாயன்மார்கள் சந்நிதி என்று பல தெய்வங்களைக் கும்பிட்டு விட்டு வெளியே வந்தார்கள்.

இருவரையும் கவனித்து வந்த கவிமணிக்கு ஒரு விஷயம் தெற்றெனப் புலப்பட்டது.

அதாவது முஸ்லிம் சிறுவன் கோவிலில் கண்ட விக்கிரகங்களை யெல்லாம் ஏதோ பொருட்காட்சியில் பார்ப்பது போல் பார்த்து வந்தான். அவன் கண்களிலோ, முகத்திலோ ஓர் உணர்ச்சியுமில்லை.

ஆனால் ஹிந்துச் சிறுவன் ஒவ்வொரு சந்நிதியில் நின்றபோதும் பக்தி புளகிதனாய் நின்றான்; கண்களில் முகத்தில் அங்கங்களில் எல்லாம் பக்தி பொங்கி நின்றது.

இந்த மாறுபாட்டைப் பார்த்த போது தான், உள்ளத்தில் பக்தி கொண்டு, கோவிலுக்குள் போனால்தான் கோவிலுக்குள் உள்ள சிலா மூர்த்தங்களில் தெய்வத்தைக் காண முடியும் என்ற உண்மை பளிச்சென்று பட்டது.

இப்படிக் கூறி முடித்து விட்டு இந்த அடிகளை வசனமாகச் சொன்னார் கவிமணி.

உள்ளத்தில் உள்ளானடி — அதுநீ
உணர வேண்டுமடி
உள்ளத்தில் காண்பாய் எனில் — கோயில்
உள்ளேயும் காண்பாயடி

இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த ரஸிகமணி, "கோவில், தெய்வம் இவ்விஷயத்தில் மட்டுமல்ல. கவிதையை ரஸிக்க வேண்டுமென்றாலும், சற்று உள்ளத்தில் கவிதை உணர்ச்சியை ஏந்திக் கொண்டு அணுகினால் தான் கவிதைச் சுவையையும் அநுபவிக்க முடியும்!" என்று முத்தாய்ப்பு வைத்தார்கள்.

அங்கிருந்த நண்பர்கள் ரஸிகமணி கூறிய உண்மையின் ஆழத்தில் அமிழ்ந்து திக்குமுக்காடிக் கொண்டிருந்தனர் சில விநாடிகளுக்கு!

இப்படிக் கவிதையை டி. கே. சி. ரஸித்ததைத் தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்,

"பாவின் சுவையறிந்து
பாவலரைப் பாரறிய
ஆவலொடு போற்றும்
அருளாளன்"

என்று கூறுகிறார்.

இப்படிப் பாட ஒரு கவியையும், இப்படி ரஸிக்க ஒரு மணியையும் பெற்றிருக்க நாம் பாக்கியசாலிகளல்லவா?

ஜலதோஷத்தை எதிர்க்க


வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

சிவப்பு லேபில்

சாப்பிடுங்கள்








சாதாரண ஜலதோஷம்கூட அபாயகரமானது தான். அது உடலைப் பலவீனப் படுத்தி, நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைத்து, நோய்கள் எளிதில் பிடிக்கும் நிலையை ஏற்படுத்துகிறது. வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் மூன்று விதங்களில் அளிக்கும் பலன் ஒப்பற்றது. அதிலுள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் ஜலதோஷத்தை குணப்படுத்துகிறது. இரும்பு சத்து, பலமளிக்கும் சத்துக்கள், மால்ட் மற்றும் ஸ்பளீன் சாரங்கள், பசியைத் தூண்டுகின்றன, இழந்த சக்தியை ஈடு செய்கின்றன, குணமான நோய் மீண்டும் வராமல் தடுக்கும் சக்தியை யூட்டுகின்றன.

எல்லாக் கால நிலைகளிலும் நோய்களை எதிர்க்கும் சக்தி பெற சிவப்பு லேபிலுள்ள வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுங்கள்.



வாட்டர்பரீஸ் காம்பவுண்டில் கலந்துள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் சுவாசக் குழாய்களில் கிருமிகளால் அபாயம் ஏற்படாமல் பாதுகாக்கின்றன. கபத்தை இளக்கி வெளியேற்றி சுவாசப் பைகளை சுத்தமாக வைக்கின்றன. இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கவும் வராமல் தடுக்கவும் உதவுகின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு அளிக்கிறது

வார்னர்-லாம்பர்ட் ஃபார்மஸூடிகல் கம்பெனி

(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)

INT. WL. 2245 (ம)

கண் கெட்ட பிறகு...

சோம மகாதேவன்

சிவந்தி வாசல் திண்ணையிலே வந்து உட்கார்ந்தபோது ஊரடங்கி விட்டது.

இனியும் எவ்வளவு நேரமோ! தினமும் இப்படித்தான் என்றாலும் — இத்தனை காலமாகப் புகைந்து கொண்டிருந்தது — இப்பொழுது கனிந்து விட்டது.

குனிந்து — நெற்றியில் அரும்பி யிருந்த வியர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டாள் சிவந்தி. போராடிப் போராடி வெற்றி பெறாமல் அலுத்துப் போன ஒரு விரக்தி நிலை அவளது நெஞ்சிலே நிறைந்து நீண்ட பெருமூச்சாக வெளி வந்தது.

கிராமத்தையெல்லாம் கடந்து — கூப்பிடு தூரத்தில் விவசாயத் தோட்டத்திலே அமைந்திருக்கும் தனி வீடு இது. இன்றைக்கெல்லாம் வாய் விட்டு அழுது கொண்டிருந்தாலும் தேற்றுவார் யாருமில்லை. பொழுதடைந்த பிறகு அவளோடு பேசிப் பேசி அலுத்துப் போன எட்டு வயது மகன் பாலு திண்ணையிலேயே பாய் விரித்து அயர்ந்துவிட்டான்.

ஊரெல்லாம் பேசிக் கொள்ளும் போது அவனுக்குக்கூட 'அது' புரிந்து விட்டது.

அத்தனை கேள்விகளையும் பெற்றவளிடம் கேட்க முடியுமா? தாயிடமே கொட்டிவிட்டான். எப்படி என்ன பதில் சொல்லுவது?

''இன்றைக்கோ நாளைக்கோ, அல்லது என்றாவது ஒரு நாள் உன் தகப்பனைப் போலீஸில் பிடித்துக் கொண்டு போய்விடுவார்கள்...!'' என்று சொன்னால் அந்தப் பிஞ்சு நெஞ்சு ஏற்குமா?

சிவந்தியின் கண்களில் நீர் பொங்கி வந்தது. கன்னிப் பருவத்திலே எண்ணிய எண்ணம் எல்லாம் ண்ணுகிவிட்ட போதிலும் — புன்னகை மாறாமல் கைப்பிடித்த கணவனோடு இத்தனை காலமாகக் குடித்தனம் நடத்தியதெல்லாம் இந்த வேளையில் வந்து நிற்பதற்குத்தானா?

பேனா பிடிக்கும் புருஷனைவிட, ஏர் பிடிக்கும் கணவனே ஏற்றவன் என்ற உறுதியோடு அத்தை மகனென்ற பாசம் பொங்கி வரத் தன்னிச்சையாகச் செல்லையாவுக்கு மாலை யிட்டவள் சிவந்தி. ஆனால் — ஆரம்பத்திலிருந்தே அவள் எதிர்பார்த்த இல்லறம் அமையவே இல்லை. இதற்காக மட்டும் சிவந்தி வருந்தவில்லையே. கடந்த இரண்டு வருடங்களாக ஆரம்பமாகி இன்னும் முடிவு பெறாது நடந்து கொண்டிருக்கும் அந்த நாடகமே வேறு!

செல்லையாவின் சொத்துக்களில் பெரும் பகுதி கிரயமாகிக் கரைந்து விட்டது. இப்பொழுது எஞ்சியிருப்பதெல்லாம் இந்தத் தோட்டமும் வீடும்தான். இதிலேயும் விவசாயம் முறைப்படி நடப்பதில்லை. எதற்காக— இங்கே மண்ணைக் கிளறிக் கொண்டிருக்க



வேண்டும்? அவனுக்குத்தான் வேறு தொழில் கைவந்தாகி விட்டதே !

'என்ன குறைவு இருக்கிறது. சிவந்தி வாய் திறந்தால் போதும் அத்தனையும் வந்து நிற்கின்றன. ஆனால் இதில் அமைதி இல்லையே. வாயிலே சோற்றை அள்ளி வைத்தால் அது நிம்மதியாக உள்ளே இறங்க மறுக்கிறதே ! சீ..... இதென்ன பிழைப்பு.'

சொல்லிச் சொல்லி அழுதாகி விட்டது. செல்லையா திரும்பவேயில்லை. குடிசைத் தொழிலாகி விட்டதாம் அது அவருக்கு!

முழுமையாக நாகரிகத்தின் காலடிபடாத அந்தக் கிராமத்தின் வடக்கிலும் தெற்கிலும் உயர்ந்த செம்பூரான் குன்றுகள். பொத்தைக்கள்ளிச் செடிகளைத் தவிர அங்கு வேறு புல்பூண்டு கூட முளைக்காது. பொழுதடைந்து விட்டால் இங்கேதான் கள்ளிப் புதர்களுக்கிடையே செல்லையாவுக்குத் தொழில் நடக்கிறது. கள்ளச் சாராய உற்பத்தி விற்பனையெல்லாம் அங்கேதான்.

'விவசாயத்திலே இத்தனை வருமானம் கிடைக்குமா?' என்று தலை நிமிர்ந்து கேட்டான் செல்லையா. இந்த வகையில் வீட்டுக்குள் நுழையும்போதெல்லாம் சிவந்தியின் புத்திமதிகளைக் கேட்டுக் கேட்டு அவனுக்கும் சலித்துப் போய் விட்டது. அந்தச் சலிப்பு இன்றைக்கு ஆத்திரமாகவே கிளம்பிவிட்டது.

வெகு நாட்களாகவே ஓர் ஆவல் செல்லையாவின் நினைவில் நிலைபெற்றிருந்தது.

மேகவண்ணக் காஞ்சீபுரம் பட்டுப்புடவையைக் கட்டிக் கொண்டு — கொடி போன்ற இடையில் குடம் சுமந்து — புன்னகை சிந்த— சிவந்தி நடந்து வரும் அழகைக் கண் குளிரக் காணவேண்டும் என்பது.... நித்திய கனவாகவே இருந்து வந்தது.

கையிலே காசு புரளும்போது கனவெல்லாம் நனவாக வேண்டியதுதானே. செல்லையா தேடிப் பிடித்து விலை அதிகமென்றாலும் அந்தப் பட்டுப் புடவையை வாங்கி வந்துவிட்டான்!

ஆனால் சிவந்தி, புடவையைக் கையில் வாங்கியவள் பிரித்து அதன் முந்தி அழகை யெல்லாம் பார்த்து ரசித்தவள் அதைக் கட்டிக் கொள்ள மறுத்தது பெரும் அதிர்ச்சியாக இருந்தது அவனுக்கு.

''எத்தனையோ குடிகளைக் கெடுத்துச் சம்பாதிச்ச காசு.. நான் கட்டிக்க மாட்டேன்'' என்று வெளிப்படையாகவே சொல்லிவிட்டாள் அவள்.

''ஏன் நீ திங்கிற சோறுகூட அந்தக் காசிலே இருந்துதானே வருது'' என்று ஆத்திரத்தோடு உறுமினான் அவன்.

''அதை நினைச்சுத்தானே உருகிக் கொண்டிருக்கேன்!'' என்பதை அவள் வெளியிட்டுச் சொல்லவில்லை; உள்ளுக்குள்ளேயே அடக்கிக் கொண்டாள்.

இந்த வெறியோடு வெளியேறிச் சென்றவன்தான் இன்னமும் திரும்பவில்லை.

சிவந்தி அப்படியே தூணின்மீது சாய்ந்து கொண்டவள் குனிந்து கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

அதிகமாகப் படிக்கவில்லை யென்றாலும் எதையும் தீர்க்கமாகச் சிந்திக்கும் அறிவு அவளுக்கு இருந்தது.

ஊருக்குள்ளே நாலுபேரு இழிவாய்ப் பேசறப்ப... இந்தப் பட்டும் பகட்டும் யாருக்கு வேணும்? சட்டத்துக்குப் பயந்து, ஒளிந்து எப்பொழுதுமே இல்லாடியாகத் திரிய முடியுமா? செல்லையாவின் காது கேட்கப் பேசுவார்களோ இல்லையோ, அந்த ஏச்சுப் பேச்சுக்களைச் சிவந்தி நெஞ்சு நிறைய வேண்டிய மட்டிலும் கேட்டுவிட்டாள். இதற்கு மேல் இந்தப் புதுப் பட்டுப் புடவையைக் கட்டிக் கொண்டு ஊர் சிரிக்கத் தண்ணீர்த் துறைக்குச் செல்ல வேண்டுமா?

காலடி ஓசை கேட்டுச் சிவந்தி தலை நிமிர்ந்தாள். செல்லையா வந்துகொண்டிருப்



பனைத் தண்டு பரபரப்புடன் எழுந்து வீட்டுக்குள் சென்றான்.

படியேறிய செல்லையா—திண்ணையில் அமர்ந்திருந்த மகனையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு—ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனைப் போல் உள்ளே திரும்பினான்.

வீட்டுக்குள் நுழைந்தவன் தலைவாசலுக்கு நேர் எதிரேயிருந்த அலமாரியைத் திறந்து கண்ணாடிக் காகிதத்தில் சுற்றப்பட்டிருந்த அந்தப் பட்டுப் புடவையைக் கையிலெடுத்துக்கொண்டு சமையலறையின் பக்கமாகப் பார்வையைத் திருப்பினான்.

'''சிவந்தி!'' என்று அவன் அழைத்ததில் கடூரம் நிறைந்திருந்தது. அவள் குனிந்த தலையோடு சமையலறை நிலைப்படியின் பக்கமாக வந்து நின்றாள்.

''இந்தப் புடவையைக் கட்டிக்கவே மாட்டியா?'' என்று கேட்டான் அவன்.

''இப்ப இதுக்கு என்ன அவசரம்?'' என்று தலையைத் தூக்காமலே முணுமுணுத்தாள் அவள்.

''நான் நல்லா இருக்கிறது உனக்குப் பிடிக்கலே!'' என்று இரைந்தான் அவன்.

சிவந்தி தலை நிமிர்ந்தாள். கண்களில் நீர் பொங்கி வர அவளது குவிந்த உதடுகள் துடித்தன.

''நல்லா இருக்கேன்னு சொல்லிக்கிட்டுத்தான் நாசமாய்ப் போகணுமா? உண்டான விவசாயத்தை யெல்லாம் விட்டு விட்டு இந்தத் தொழிலைத்தான் கையிலே பிடிக்கணுமா? நாலு பேர்கள் சொல்லும்போது நாக்கைப் பிடுங்கிக்கிட்டுச் சாகலாம் போல் இருக்கு!'' என்று குமுறினாள் அவள்.

''ஏன்... அப்படியே செத்துப் போகிறது தானே!''

''என்னிக்கி இருந்தாலும் என் தலையெழுத்துக்கு அந்தச் சாவுதான் வந்து சேரப் போகுது!'' என்று சொல்லிக் குனிந்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் சிவந்தி.

''என்னிக்கி என்ன? இப்பவே அந்தச் சாவு வரட்டும். நீ இங்கே இருக்கிற மட்டும் எனக்கு நிம்மதி யில்லே!'' என்று வெறியோடு கத்திக் கொண்டே கையிலிருந்த புடவையை அவளது முகத்துக்கு நேரே வீசியெறிந்தான் செல்லையா.

எதிர்பாராத இந்தத் தாக்குதலால் நிலை தடுமாறிப் பின்புறமாகச் சாய்ந்தாள் சிவந்தி. அதற்கு மேலும் ஆவேசத்தோடு அவன்மீது பாய்ந்தான் அவன்.

முதுகில் விழுந்த மிதியில் அலறித் துடித்துக் கீழே சரிந்தபொழுது மேலும் பிடரியில் - விழுந்த அடியில் நிலைப்படியின் மீது மோதித் துவண்டு குப்புற விழுந்தாள் சிவந்தி.

''இதோட உனக்கும் எனக்கும் அத்துப் போச்சு!'' என்று ஆத்திரத்தோடு கத்தியவன் எழுந்து வாசல்பக்கமாக நடந்தான். முற்றத்திலே தயங்கி நின்றவன் திண்ணையில் படுத்திருந்த மகனின் பக்கமாகத் திரும்பினான். சிம்னி விளக்கின் ஒளியில் சிறுவன் தலையைத் தூக்கிப் பார்த்து மறுபடியும் குப்புறப் படுத்துக் கொள்வது போலிருந்தது.

மெதுவாக. 'பாலு' என்று அழைத்தான்: பதில் வரவில்லை. அதற்குமேல் செல்லையா அங்கே நிற்கவில்லை.

சற்றுப் பொறுத்துச் சிவந்தி மெதுவாகத் தலைதூக்கினாள். முதுகு எலும்புகளில் ஒன்று இடம் பெயர்ந்து விட்டது போன்ற வலி எடுத்தது. சிரமத்துடன் நிலைப்படியின்மீது சாய்ந்து கையை உயர்த்தி நெற்றியைத் தடவிக்கொண்டாள். விரல்கள் பிசுபிசுத்தன. முன் தலையில் பட்டிருந்த காயத்திலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருக்கிறது. முக்கி முனகி மெதுவாக எழுந்து உட்கார முயற்சி செய்தாள் சிவந்தி. உச்சியிலிருந்து நரம்பு சுண்டி இழுக்கிறது. வேதனை முகத்திலே குவியச் சாய்ந்து விட்டாள். அனலிலே உருகுவது போல நெஞ்சிலே ஓர் எரிச்சல். கண்கள் இருண்டன. 'சாவு' என்பது இப்படித்தான் துடிப்போடு மெல்ல மெல்ல வந்து சேருமோ?

இப்படியே செத்துப் போகலாம்! அப்புறம் எந்தக் கவலையும் இருக்காது.

மகனது நினைவு இடையிலே நுழைந்தது.

அவளது மறைவுக்குப் பிறகு பாலு என்ன செய்வான்? இந்தப் பட்டுப் புடவையைக் கட்டிக்கொள்ள எவளாவது வந்து நிற்கும் போது...அவன் கண் கலங்கி...

'பாலு' என்று அவள் அழைத்தது அரை குறையாகத் தேய்ந்தது. உடலில் எஞ்சி நிற்கும் சக்தியையெல்லாம் ஒன்று சேர்த்துப் 'பாலு' என்று உரக்கக் கூப்பிட்டாள்.

தொடர்ந்து நிசப்தமே நிலவியது.

மகனது நினைவு வேதனை யெல்லாம் மறக்கச் செய்துவிட்டது. நிலைப்படியைப் பிடித்துக்கொண்டு மெதுவாக எழுந்து அடி மேல் அடிவைத்துத் தலைவாசல் பக்கமாகக் கம்பியில் தொங்கிக் கொண்டிருந்த அரிக்கேன் விளக்கைக் கையிலெடுத்துக் கொண்டு தலைவாசலுக்கு வந்தாள் சிவந்தி.

'பாலு' என்று அழைத்துக்கொண்டே திரும்பியவள் திடுக்கிட்டாள்.

பாய் விரித்துக் கிடந்தது. பையனைக் காணவில்லை!

பார்த்துக் கொண்டேயிருக்க அவளது கண்கள் இருண்டன. வேதனையோடு 'பாலு' என்று அழைக்கும் வரையில்தான் அவளது சக்தி இருந்திருக்க வேண்டும். கையிலிருந்த விளக்கு நழுவிப் படிகளிலே விழுந்து உருண்டு அணைந்தது. சிவந்தியும் நினைவிழந்து நிலைப்படியின் மீதே சாய்ந்து விட்டாள்!

ஒத்துக் கள்ளிச் செடிகளுக்கிடையே நிலவொளி இருந்தபோதிலும்கூடப் பாதைதெரிந்தால் அல்லாது இந்த இடத்துக்கு இவ்வளவு சீக்கிரமாக வேறு யாராலும் வர இயலுமா? செல்லையா ஒரு நொடியில் வந்து விட்டான்.

செல்லையா அங்கிருந்ததொரு பாறையின் மையத்திலே விளக்கை வைத்துவிட்டு மேற்குப் பக்கமாக உயர்ந்து கவிழ்ந்திருந்த பாறையின் அடியிலிருந்து பையொன்றை எடுத்துக் கொண்டு திரும்புகிறான். விளக்கின் பக்கமாக அமர்ந்து பையிலிருந்தவற்றை வெளியில் எடுத்து வைக்கிறான். சர்பத் பாட்டிலைப்போல ஒன்று. கூடவே இரண்டு கண்ணாடி டம்ளர்கள்.

சென்னைப் பல்கலைக் கழக செனேட் (SENATE) பட்டதாரிகள் தொகுதிக்கு வேட்பாளராக நிற்கும் எனக்கு உங்கள் பொன்னான வாக்கை அளித்து ஆதரிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் தமிழ்நாட்டில் உயர்தரக் கல்வியின் மேம்பாட்டுக்காக பாரபட்சமின்றியும், நேர்மையுடனும் அயராது பாடுபடுவேன் என்று உறுதியளிக்கிறேன்.

சென்னை

ஆர். எம். சேஷாத்ரி
(இ. வி. எல். கிடையர்ட்)

மூடியைத் திறப்பதற்குள் மனம் பின்னேக்கி இழுக்கிறது. எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த மனத்தில் விரக்தி நிலை கொப்பளிக்கிறது.

அடிபட்டு அப்படியே விழுந்து கிடந்தானே அவன். போகிறதானாலும் போகட்டும். விடியறதுக்குள்ளே கொளுத்திப் போட்டு என்னையும் பாலும் தேய்த்துத் தலையை முழுகிட்டுப் போறேன்! எத்தனை நாளைக்கித்தான் இந்த ஒப்பாரியைக் கேட்டுக்கிட்டேயிருக்க முடியும். கஷ்டப்பட்ட நாளையிலேயும் அழுகை இப்பவும் அழுகையா?

பாட்டிலைத் திறந்து டம்ளர் நிறைய ஊற்றிக் கொண்டான் செல்லையா.

கவலைகளை யெல்லாம் மறக்க — எதை யெந்தயோ நினைத்து நினைவற்றுப்போக—அருமருந்து இதுதான்!

அவன் மறுபடியும் குடித்தான். கொஞ்சம் கொஞ்சமாகக் குடித்துக் கொண்டே இருந்தான். நெஞ்சு மேலும் கனத்தது. இமைகள் விரிய மறுத்துச் சுருங்கின. யாருடனோ பேசுவது போல் அவன் ஆரம்பித்தான்.

''இதுக்கு மேலே அவளுக்கும் எனக்கும் என்ன உறவு இருக்கு! அப்பன் வீட்டுக்குத் தப்பிச்சுப் போகட்டும். என் மகன் என்னோடதான் இருக்கணும். அவனைப் படிக்க வைக்கிறேன். அது என்னோட பாடு!'' நெஞ்சை நீவிக் கொண்டு வந்த வார்த்தைகளைத் தடுமாற வைத்தது. இரு கைகளையும் பின்புறமாக ஊன்றி நன்றாகச் சாய்ந்து கொண்டான்.

பிறை நிலவு அடிவானத்தை நோக்கி ஓடுகிறது. தழுவிச் செல்லும் குளிர்ந்த தென்றல்.

ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன் வாய் விட்டுச் சிரித்துக் கொண்டான். 'இந்த நேரத்திலே சிவந்தி... இப்படிப் பக்கத்திலே உட்கார்ந்து ரெண்டு வெத்திலையை மடித்துக் கொடுத்துச் சிரித்துப்பேசினால் எப்படி யிருக்கும்! 'இதுக்கு மேலே சொர்க்கம்'ன்னு சொல்றாங்களே அங்கே என்ன இருக்கப் போகுது? கண்ணுக்கு முன் இருக்கிறதை விட்டு விட்டுக் காணாததைத் தேடித் திரிவாங்களா?'

அவன் எதற்காகவோ பூரித்துப் போய் மறுபடியும் சிரித்துக் கொண்டான். திரும்பிய திசையில் அவனது பார்வை லயித்து நின்றது. தலையைக் குலுக்கிக் கொண்டான்.

குள்ளமாகக் கால் சட்டையோடு அந்தப் பாறைக்குப் பக்கமாக நிற்பது யார்?

''யாரது?'' என்று உளறிக் கொண்டே தட்டுத் தடுமாறி எழுந்தான் செல்லையா. பக்கத்தில் நெருங்கியவன் பிரமித்துப் போய் நின்றுவிட்டான்.

பாலு — அவனது மகனேதான்! செல்லையாவைப் பின்தொடர்ந்து வந்தவன் இங்கே ஒவ்வொரு கட்டத்தையும் ரசித்தவாறு வெகு நேரமாகவே நின்றுகொண்டிருக்கிறான். இன்றைக்கு அவனது நினைவில் எழுந்துள்ள கேள்விகளுக்கெல்லாம் விடை தெரிந்தாக வேண்டும்.

'' எப்படிடா தனியா வந்தே..... அவ அனுப்பி வச்சாளா?'' என்று அதட்டினான் செல்லையா.

பாலு அவனது முகத்தைப் பார்த்து பயத்தோடு தலையசைத்தான்.

''அம்மா அனுப்பலே... நானுத்தான் வந்தேன். நீ அடிச்சதுக்கு அம்மா உக்காந்து கூட அழலே. அப்படியே தூங்கிப் போச்சு!'' என்று திக்கித் திக்கிச் சொன்னான் பையன்.

அவனது கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே பழைய இடத்துக்கு வந்தான் செல்லையா. மகனையும் பக்கத்திலே இழுத்து வைத்து உட்கார்ந்து கொண்டான்.

''இப்ப நீ எதுக்கு இங்கே வந்தே...அதைச் சொல்லு!'' என்று கொஞ்சினான் அவன்.

பாலு அவனது பிடியிலிருந்து விலகிக் கொண்டான். ''நீ... குடிக்கிறதுக்குத்தான் இங்கே வருவேன்னு... அம்மா... சொல்லிச்சு!'' என்றான் அவன்.

''உங்கிட்டயும் சொல்லிட்டாளா? குடிச்சா என்னவாம்!'' செல்லையா எப்படியோ சிரித்துக்கொண்டான்.

பையன் தகப்பனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''குடிச்சா... கெட்டுப் போவியாம்?''

செல்லையா பின்புறமாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான்.

''இப்ப நான் கெட்டா போயிட்டேன். எத்தனை சொகமா இருக்கு தெரியுமா? அப்படியே... ஆகாசத்திலே பறக்கிறமாதிரி இருக்கு!'' என்று கைகளைத் தலைக்கு மேலே வீசிக் கொண்டே சொன்னான் செல்லையா.

''வீட்டுக்கு வா போகலாம். அம்மா தனியா இருக்கும்!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் பையன்.

செல்லையா திரும்பினான். விளக்கொளியில் அவனது விழிகள் மினுமினுத்தன.

''அவ பேச்சை எடுத்தே கொன்னுபோடுவேன்!'' என்று கூவிக்கொண்டே மகனை இழுத்து மறுபடியும் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டான். சற்றுத் தள்ளியிருந்த பாட்டிலை எடுத்து டம்ளரில் நிரப்பிக் குடித்துவிட்டுக் கீழே வைத்தான்.

''இதோ பாருடா பயலே... இந்த உலகத்தையே மறக்கிறதுக்குத்தான் குடிக்கிறது; மறந்துதான் போகுது. நீயும் கொஞ்சம் குடிக்கிறியா? அப்புறம் உங்கம்மாவை நினைக்காம... இங்கேயே இருப்பே!''

பையன் முகத்தைச் சுளித்துக் கொண்டே நகர்ந்து உட்கார்ந்தான்.

''மாட்டியா... பின்னே இந்த நேரத்திலே இங்கே எதுக்கு வந்தே... இன்னிக்கி மட்டும் கொஞ்சமா குடிச்சுப் பாரு!''

பையன் பதில் சொல்லவில்லை.

செல்லையாவுக்குப் போதை தலைக்கேறியது: அறிவு புரளப் பருத்தறிவு உருண்டது. முரட்டுத்தனமாகப் பையனின் கையைப் பிடித்து அருகில் இழுத்தான்.

''நீயும் குடிச்சுப்போடு. ரெண்டு பேருமாகப் போகலாம். அப்ப... உன்னைப் பாத்து அவ செத்துப் போறாளா பார்க்கலாம்!''

பையன் கையைத் திமிறியபோது செல்லையாவுக்குக் கோபமே வந்து விட்டது! ஓங்கி ஓர் அறை வைத்தான். குடியனின் அடியைத் தாளாத குழந்தை அப்படியே துவண்டு விழுந்து நினைவிழந்தான்.

செல்லையாவோ அவனது போக்கில் பேசிக் கொண்டே இருந்தான்.

அப்போது பின்புறமிருந்து யாரோ ''செல்லையா!'' என்று கூப்பிட்டுக் கொண்டே வரும் குரல் கேட்டது. அதிர்ச்சியோடு திரும்பிய செல்லையா ''நல்லுவா?'' என்றான் அரை குறையாக. கிழவன் நல்லு வாடிக்கையான ஆள்தான்!

கிழவன் படபடப்புடன் பக்கத்தில் வந்து நின்றவன் வேறு எதையும் கவனிக்கவில்லை.

''நீ இங்கே இருப்பேன்னு நினைச்சுத்தான் அவசரமா ஓடி வந்தேன். காடுபட்டியிலே போலீசு லாரி வந்து நிக்குது. எவனுவது இங்கே கையைக் காண்பிச்சு வைக்கப் போறான். எல்லாத்தையும் எடுத்துப் போட்டுட்டு வீட்டுக்கு ஓடு!'' என்று சொல்லிய கிழவன் அதே பதற்றத்தோடு திரும்பிக் கள்ளிச் செடிகளுக்குள்ளே ஓடி மறைந்து விட்டான்.

செல்லையாவுக்கு நெஞ்சு நடுங்கியது.

''போலீசா... இந்த நேரத்திலே இங்கே பத்துப் பேராச் சுற்றி வளைத்துக் கொண்டால்....''

நின்று நிதானிக்க நேரமில்லை.

அவசரத்தோடு குனிந்து மகனை உசுப்பினான். பையனுக்கு உணர்வு எங்கே இருக்க முடியும்?

யோசித்துக் கொண்டிருக்க முடியுமா? பையனைத் தோளின் மீது தூக்கிப் போட்டுக் கொண்டு திரும்பினான். எடுத்த எடுப்பிலேயே அவனது கால்கள் தள்ளாடின. ஆயினும் சமாளித்துக் கொண்டு கிராமத்தை நோக்கி நடந்தான்.

பிறை நிலவும் அடிவானத்தில் ஓடி மறைந்துவிட இருள் சூழ்ந்து கொண்டது. தோளில் சுமையோடு எப்படியோ கள்ளிச் செடிகளை யெல்லாம் கடந்து வண்டிப் பாதையை வந்தடைந்த பிறகுதான் நின்று பெருமூச்சு விட்டான் செல்லையா.

இன்னும் கொஞ்ச தூரம் நடந்தால் சாமியார் மடம் வந்து விடும். அங்கே உட்கார்ந்து விட்டுக்கூட வீடு போய்ச் சேர்ந்துவிடலாம்.

மறுபடியும் பாதையை எறிட்டுப் பார்த்த பொழுது அவனது கால்கள் துவண்டன.

கிராமத்தின் பக்கமிருந்து கையில் விளக்கோடு யார் யாரோ வருவது தெரிந்தது. போலீசாகவே இருக்குமோ. இந்த நேரத்தில் இந்தப் பாதையில் வேறு யாருக்கு என்ன வேலை இருக்கப் போகிறது. தகப்பனும் மகனுமாக எதிர்ப்பட்டுச் சிக்கிக் கொண்டால் அவன் சொன்னது போல ஊரே சிரிக்கும்.

செல்லையா பரபரப்புடன் திரும்பித் தோளில் தொங்கிக் கொண்டிருந்த மகனை அணைத்தவாறு காட்டுக்குள்ளே ஓடினான். சற்றுத் தூரம் சென்றபின் கால்கள் துவள நின்று மேல் மூச்சு வாங்கத் திரும்பிப் பார்த்தான்.

விளக்கின் ஒளி நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.

அம்பு முதுகிலே பாய்ந்திருக்கும் வேதனை இருந்தாலும் தன் உயிரைக் காத்துக் கொள்ளத் துடித்து ஓடும் கலைமானைப் போல் செல்லையா மறுபடியும் திரும்பி ஓடினான்.

இருளில் ஓடிய வேகத்தில் நிலைதடுமாறியது. என்ன இது? எதிரே பெரிய பள்ளம், செங்கல் காளவாய்க்கு மண் எடுக்கும் பெருங் குழியல்லவா!

நின்று நிதானிப்பதற்குள் புரண்டு மூன்றும் சாய்ந்து மகனோடு பள்ளத்தில் உருண்டான் செல்லையா! விழுந்த அதிர்ச்சியில் பிடியிலிருந்து விலகி எங்கோ விழுந்த மகனை நினைத்து அவன் ''பாலு!'' என்று அலறியது நிசப்தத்தில் எதிரொலித்தது. அடித்தளத்தில் குத்திட்டு நின்ற சரளை மேடு தலையில் பலமாக மோதவே அவன் மல்லாந்து விழுந்தான். மேலே நோக்கிய அவனது விழிகள் விரிந்தன.

மேட்டிலே கையில் விளக்கோடு நிற்பது யார்...?

அங்கிருந்து ''பாலு'' என்று துடிப்போடு சிவந்தி அலறும் குரல் செல்லையாவுக்குக் கேட்டது.

பார்த்துக் கொண்டே இருக்க எல்லாமே ஒரே இருளாகி வந்தது அவனுக்கு!

ஃ ஃ ஃ

கட்டிலின் மீது படுத்திருக்கிறான் செல்லையா. அவனது பார்வை சற்றுத் தள்ளிச் சமையலறைக்கு முன்பாக முழங்கால்களைக் கட்டியவாறு உட்கார்ந்திருக்கும் சிவந்தியின் மீது நிலைத்து நிற்கிறது.

பாலு போய்விட்டான். அவனது உடலை நீறாக்கி நான்கு நாட்களாகி விட்டன. இதை நினைக்கும்போதெல்லாம் நெஞ்சு வெடிப்பது போல உடலே நடுங்குகிறது.

பெரும் பள்ளத்திலே தலை குப்புற விழுந்ததில் நெஞ்சில் அடிபட்டு வீடு வந்து சேர்வதற்குள்ளாகக் கண்ணை மூடிவிட்டான் மகன். சிவந்தியின் கண்ணீருக்காகக் கிராமத்தில் எல்லோரும் ஒத்துப் போனார்கள். இல்லையென்றால் இந்தக் கொலைகாரன் உயிரோடு இப்படிப் படுத்திருக்க முடியுமா?

அவள் அழுது அழுது ஓய்ந்து விட்டாள். எந்த முகத்தோடு அவளுக்கு எப்படித்தான் ஆறுதல் சொல்ல முடியும்?

செல்லையா இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு உடல் குலுங்க அழுதான். தலை நிமிர்ந்து அவனைப் பார்த்த சிவந்தி எழுந்து கட்டிலருகே வந்தாள். முகத்தை மூடியிருந்த அவனது கைகளை விலக்கினாள். கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்து குனிந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.


''இனிமே அழுது என்ன ஆவப் போகுது?''

''சிவந்தி.. இதுக்கு மேலே நான் எதுக்கு உயிரோட இருக்கணும்!'' என்று சொல்லிக் குமுறினான் அவன்.

அவனது நெற்றியில் சுருண்டு விழுந்த தலைமுடியை ஒதுக்கியவாறு சிவந்தி கூறினாள்.

''நீங்க இல்லேன்னு நான் எதுக்கு இருக்கப் போறேன். இதோட... அந்தச் சாராயத்தைத் தொடாம இருந்தாலே போதும். இன்னும் எத்தனையோ பெத்துக்கலாம்!''

சிலையாக அமர்ந்திருந்த அவளையே இமையாது பார்த்துக் கொண்டிருந்தான் செல்லையா. அவனது விழிகளில் புதிய ஒளி பரவியது.



மகிழ்ந்து விளையாடும் நேரம்— உட்வர்ட்ஸுக்கு நன்றி



மந்தம், புளிப்பு, உப்புசம் மற்றும் பல்முளைக்கும்போதுள்ள உபாதைகளிலிருந்து உடனடி நிவாரணம்பெ உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் உபயோகியுங்கள்.

இது 100 வருடங்களாக புத்திசாலிகளான தாய்மார்களால் உபயோகிக்கப் பட்டு வருகிறது

Aiyars ATC-486-TAM

அதிசயமான புதுமுறை தயாரிப்பு



பெப்ஸோடெண்டின் அற்புத நுரை உங்கள் பற்களின் வெண்மையை பளிச்சிடச் செய்யும்

எப்படி என்று பாருங்கள்: புது முறைப்படி தயாராகும் பெப்ஸோடெண்டில் மட்டுமே அற்புத நுரையை உண்டுபண்ணும் 'இரியம் ப்ளஸ்' உள்ளது. இந்த அற்புத நுரை பற்களைப் பாழாக்கும் பழுப்பை அகற்றி அவைகளை இயற்கை வெண்மையுடன் பிரகாசிக்கச் செய்கிறது...வாயைச் சுத்தம் செய்வதுடன் பெப்பர்மிண்டின் சுவையையும் அளிக்கிறது.



இந்துஸ்தான் லீவர் லிமிடெட்
இந்தியாவில் தயாரிப்பு

பாட்டி போய்ச் சேர்ந்தாள்

ர. வெங்கடரத்தினம்

பஸ் ஓட்டி தன் ஆசனத்தில் வந்தமர்ந்தான். உடனே வாகனத்தின் குழல் 'பொலபம் பூம்' என்று நாலு திசைகளும் முழங்க ஒலித்தது. "கூப்பிடப்பா, ஆருக யாராச்சும் அப்பிடி இப்பிடிப் போயிருந்தா, ஓடி வருவாங்க. குரல் கொடுத்திடு." பஸ் ஓட்டியின் உத்தரவுப்படி கண்டக்டர் கத்தினுன்-"வாங்க வாங்க, பஸ் கிளம்பப்போவுது. ராமாபுரம்! ராமாபுரம்!"

வண்டி புறப்படலாயிற்று. காப்பி பலகாரம் என்று போயிருந்த பிரயாணிகள் எல்லோரும் தத்தம் இடங்களில் ஓடி வந்து அமர்ந்தனர்.

"இன்னிக்கி என்ன கூட்டத்தையே காணும்?"

"எதுக்கும் 'ஆரன்' அடிச்சுக்கிட்டே போங்க, மணிக்கூண்டு தாண்டறமட்டும்."

வண்டி நகராட்சி பஸ் நிற்குமிடத்துக் காம்பவுண்டுச் சுவரை வலம் வந்தாயிற்று. நாற்சந்தி வந்தது.

"ராமாபுரம்! ராமாபுரம்!" — கண்டக்டரின் அறைகூவல்.

"ஹோல்டான், ஹோல்டான்" என்ற குரல் எங்கிருந்தோ வந்தது. பஸ் ஓட்டி வண்டியை நிறுத்திவிட்டுப் பக்கத்து ரோட்டைப் பார்த்தான்.

"ஒரு பாட்டியம்மா வருதே, அதோ! நிறுத்திக்க வண்டியை" என்று அவனுக்குக் கூறிவிட்டுக் கண்டக்டர் "சுருக்க வாபாட்டி" என்று கூவியவண்ணம் அந்தப் பிரயாணியை வரவேற்றிருப்போல் வண்டியின் கிழ்ப் படியில் கால் வைத்து நின்று முகமன் கூறினுன்.

வெள்ளைப் புடவைப் பாட்டி ஒருத்தி உடல் குலுங்கக் குலுங்க ஓடிவந்தாள். ஒரு கையில் கித்தான் பை, இன்னொரு கையில் மாற்றுப் புடவை போலும்! — கொசுவி முறுக்கிய துணி. பை பிதுங்கிக் கொண்டு நின்றது. இடம் இருந்திருந்தால் அந்தப் புடவையையும் அதனுள் திணித்திருப்பாளே.

பஸ்ஸில் இருந்த பிரயாணிகள் அவ்வளவு பேருடைய கண்களும் பாட்டி ஓடி வருவதையே நோக்கின. "சுருக்க வா, மேலே ஏறிப் போய் உட்காரு. இப்படிக் கொடு ஒரு சாமானே." கண்டக்டர் அவசரப்படுத்தினுன்.

"வந்துட்டேண்டாப்பா" என்று கூறியவாறு பாட்டி உள்ளே நுழைந்தாள். அவன் கையில் எதையும் கொடாமல், உள்ளே தன் புடவையை அந்தண்டை இந்தண்டை எதன் மீதும் படாதவாறு பற்றியவண்ணம் காலியாயிருந்த ஒரு பெஞ்சில் அமர்ந்தாள்.

"என்ன, பாட்டி! முழிக்கிறே? துணிப் பொட்டலத்தைப் பக்கத்திலே அப்பிடியே வச்சிக்கலேன்... ரைட், போலாம்!... பாட்டி, எங்கே போறே, ராமாபுரமா? விக்கிரமனூரா அல்லது சாலியப்பாளையமா?.... எதுக்கும் மெதுவாவே போ. மார்க்கெட்டுக்கிட்டே யாராச்சும் வரலாம்."



பாட்டி தன் கித்தான் பையை இரண்டு கால்களுக்கும் இடையே வைத்தாள். புடவை முறுக்கை வைக்கச் சரியான இடம் கிடைக்கவில்லையோ, என்னவோ? மேலும் கீழும் பார்த்தாள். பக்கத்து இடம் கடைசி வரை வெற்றாகவே இருக்குமா என்கிற பயமா, ஆசையா?

பஸ் ஊர் எல்லையைத் தாண்டியாயிற்று.

"சரி, எல்லாரும் டிக்கட்டுக்குக் காசு எடுங்க!"

முன் பக்கத்திலிருந்து தொடங்கிக் கண்டக்டர் ஒவ்வொருவராகச் சீட்டுப் போட்டுக் கொண்டு வந்தான். பாட்டிக்கு முந்திய பெஞ்சில் இரு வாலிபர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கும் சீட்டுப் போட்டாயிற்று. பாட்டி கண்டக்டரையே விழுங்கி விடுகிறாற் போல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் சீட்டைக் கிழிக்கும்போது ஒவ்வொரு தரமும் பாட்டியின் முகம் கோணியது. உதடுகள் முணுமுணுத்தன. என்ன சபித்தாளோ?

"எங்கே போகணும் பாட்டி?"

"ராமாபுரம்தான்."

"நாலு ரூபா பதினெட்டுக் காசு எடு."

தன் வயிற்றைச் சொறிகிறாற் போல் இரண்டு நிமிஷங்கள் என்னவோ செய்து விட்டுப் பாட்டி காசை எடுத்தாள். நாலு ரூபாயை எடுத்துவிட்டுச் சில்லறையிலிருந்து உரிய தொகையைச் சேர்க்கலானுள்.

"பரவாயில்லே. அப்பிடியே கொடு, பாட்டி! சில்லறை இருக்குது. மிச்சம் தந்திடறேன்."

பாட்டி கணக்காகப் பதினெட்டை அவன் எதிரே பெஞ்சில் வைத்தாள். கண்டக்டர் சிரித்தான். "நான் மிச்சம் தருவேன் கிட்டு நம்பிக்கை இல்லியா பாட்டி?"

அவன் 'சீட்'டில் வைத்த காசை எடுத்துத் தன் தோல் பையில் போட்டுக்கொண்டு, ராமாபுரம் சீட்டு ஒன்றைக் கிழித்தான். வழக்கம் போல் தன் நாக்குப் பசையில் ஆள் காட்டி விரலை ஒத்தி எடுத்துச் சீட்டைப் பற்றிப் பாட்டியினிடம் நீட்டினுன்.

"இந்தா, பாட்டி."

"நீயே வைச்சுக்கோ, பழையபடி சீட்டு வாங்குன்னு நீ சொல்லாமெ இருந்தால் சரி!"

"என்ன பாட்டி, இது? உன் சீட்டை நான் வச்சிக்கிட்டு இருக்கறதா?" அவன் சீட்டை நீட்டிப் பிடித்தான்.

பாட்டி தன் முன் சீட்டில் அமர்ந்திருந்த பிள்ளையினிடம் கூறினாள். ''குழந்தே! நீயும் ராமாபுரம்தானே போறே? என் டிக்கட்டையும் வாங்கி வச்சுக்கோ, உன்கிட்டே.''

எல்லோரும் பாட்டியைக் கவனித்தனர். முன்புறம் அமர்ந்திருந்த இளைஞர்களில் ஒருவன் கண்டக்டர் தந்த சீட்டை வாங்கிக் கொண்டான். கண்டக்டருக்கு ஒன்றுமே விளங்கவில்லை; ஏன், யாருக்குமே பாட்டியின் பேச்சு புதிராயிருந்தது. அது அவனுக்குமே தெரிந்திருக்க வேண்டும்.

''பின்னே என்ன? அப்போ புடிச்சு நானும் பார்த்திண்டே யிருக்கேன். ஒவ்வொரு சீட்டையும் கிழிச்சுக் கிழிச்சுக் கொடுக்கறதுக்கு முன்னாடி நாக்கிலே விரலை வைச்சு எச்சில் பண்ணித் தரணும்னு ஏதாவது சாஸ்திரமா?''

அப்பாடா, இப்போது விளங்கியது என்பது போலப் பிரயாணிகள் அனைவரும் ஒரு பெருமூச்சு விட்டு வியப்போடு பாட்டியை நோக்கினர்: கண்டக்டர் சிரித்துக்கொண்டே, ''கோவிச்சுக்காதே, பாட்டி!'' என்றான்.

''எனக்கொரு கோபமும் இல்லேடாப்பா'' என்று கூறி, சற்றுப் பின் சரிந்திருந்த தன் முட்டாக்கை முன்னால் இழுத்து விட்டுக் கொண்டு, காது மடல்களை மடித்து அமுக்கிப் பிடித்தாள்: கண்டக்டர் தன் இருக்கையில் சென்று உட்கார்ந்தான். அவன் அங்கிருந்தே பாட்டியைக் கவனித்தான். அவள் கணக்காகக் காசை எடுத்துக் கொடுத்ததன் கருத்தும் புரிந்தது. அவன் கைப்பட்ட எச்சில் காசை வாங்க வேண்டாம் என்பது தான் பாட்டியின் சித்தாந்தம்!

எதிரே தூரத்தில் கோபுரம் ஒன்று தெரிந்தது: பாட்டியின் கரங்கள் கூப்பின. வாய் ஏதோ சொல்லியது.

விக்கிரமனூர் வந்தது. வண்டி ஊராட்சியினர் கட்டித் தந்திருந்த நிறுத்தகத்தில் போய் நின்றது. பஸ்ஸின் ஊதுகுழல் ஒலித்தது. கடைசியில் யாரோ ஒரு பெண்ணும் பையனும் மட்டும் வந்தனர்.

''சுருக்க வந்து உட்காருங்க'' — கண்டக்டரின் கட்டளை இது.

பெண் உள்ளே ஏறி வந்தாள். உடன் வந்த பையன் பாட்டியின் பக்கத்தில் இருந்த காலி இடத்தைக் காட்டி, ''அப்பிடிப் போயிடு, அக்கா!'' என்று இறங்கினான்.

''நீ வரலியா? ஓர் ஆறுதானா இன்னிக்கி விக்கிரமனூரிலே!'' எனக் கேட்டுக்கொண்டே கண்டக்டர் உள்ளே வந்தான்.

பையன், ''அக்கா, போய் வரேன். சாக்கிரதை!'' எனக் கூவினான்.

வண்டி ஆட்டத்துடன் கிளம்பியது. அத்தனை கண்களும் புதிதாய் வந்த அந்தப் பெண் பிரயாணியையே கவனித்தன. தலையில் கனகாம்பரம், நெற்றியில் சிவப்புச் சாந்துத் திலகம். அவளுக்கு இருபது வயது இருக்கலாம். பாட்டிக்கு முன் உட்கார்ந்திருந்த வாலிபர்களின் கண்கள் விழுங்குகிறாற்போல வேலை செய்தன.

''பாட்டி, நகர்ந்துக்கவேன். ரெண்டு பேர் உட்கார்ற சீட்டாக்கும்'' என்று கண்டக்டர் சொல்ல வேண்டியிருந்தது.

பாட்டி முகத்தைச் சுளித்தாள். கொசுவிய புடவையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள்.

''நல்லா நகர்ந்துக்க பாட்டி.'' கண்டக்டர் மீண்டும் சொன்னான்.

பாட்டி அரை அங்குலம் நகர்ந்திருப்பாள்? முன் வரிசைக் காளைகள் இருவரும் வெட்கம் — 'நாசுக்கு' இரண்டையும் மறந்துவிட்டு முக்கால் பாகம் திரும்பிக் கழுத்தை வளைத்து அந்தப் பெண்ணைப் பார்த்தனர்.

அவள் உட்கார்ந்தாள். 'சரக்'கென்று பாட்டி எட்டி நகர்ந்து, ஓரமாய்ப் பதுங்கியமர்ந்தாள். தன் புடவையையும் உடலோடு அமுக்கிக் கொண்டாள். பழையபடி தலை முட்டாக்கை இழுத்து விட்டுக் கொண்டாள்: வந்து அருகில் அமர்ந்தவளின் வயிறு விம்மிப் பருத்து நின்றதைப் பாட்டி பார்த்தாள். ஆனால் அதற்காக நகர்ந்து அமரவில்லை.

''இன்னிக்கின்னு பஸ்ஸிலே வர வேண்டியாச்சு பாரு. ஏகாதசியும் அதுவுமா?'' என்று பாட்டி முணுமுணுத்தாள்.

பஸ்ஸில் ஓர் இளவட்டம், ''ஏகாதசியா இன்னைக்கி? அதுதான்! பாட்டிக்குக் கோபம்! வவுறு காலி யில்லே!'' என்றான்.

''ஒரு கோபமும் இல்லேடாப்பா.''

''ஒரு கோபமும் இல்லேடாப்பா, இல்லேடாப்பான்னு சொல்லிக்கிட்டே நீயும் அப்போ பிடிச்சு ஏதோ சொல்லிக்கிட்டேதான் வர்றே, பாட்டி!'' — இது கண்டக்டரின் குரல். ''என்னைத் திட்டிக்கிட்டு வர்றியோ?''

''ஏகாதசி ஆச்சேன்னு தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரம் சொல்லிண்டு வந்தேன். உன்னை நான் எதுக்குடாப்பா வையணும்?''

''அதெல்லாம் நல்லாத்தான் சொல்லிக்கிட்டு வர்றே, பாட்டி. எனக்கும் சேர்த்தே சொல்லு. புண்ணியமாச்சும் வரட்டும் எனக்கும் உன் தயவிலே.''

பாட்டி பதில் பேசவில்லை.

கண்டக்டர் காசைக் கணக்குப் பார்த்து எழுதப் புகுந்து.விட்டான்.

''எண்டியம்மா, எத்தனை மாசம் இது?'' பாட்டி பெண்ணிடம் பேசினாள். வெட்கத்தினால் தாழ்ந்த குரலில் அந்தப் பெண் பதில் சொன்னாள்.

''இப்போ போய் இந்த மாதிரி பஸ்ஸிலெல்லாம் கிளம்பலாமோ? நன்றாயிருக்கு போ உன் காரியம்!''

அந்தப் பெண்ணின் கண்களில் மருட்சி—பீதி ஒருபுறம்.

''வேறே வழியில்லாமெப் போச்சுங்க: எப்பிடியும் போய்த்தான் ஆகணுமின்னு சொன்னாங்க'' என்று ஏதோ குடும்பக் கதையை எடுத்துரைத்தாள். அவள் குரலில் தொனித்த அச்சத்தைக் கவனித்த பாட்டி சமாதானமும் கூறினாள்.

''எத்தனை மாசமா இருந்தால் என்ன? ஈசன் விட்ட வழி. எல்லாம் அவன் பார்த்துப்பான்......''


பாட்டி பழையபடி தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரம் தொடங்கி விட்டாள்.

சிறிது நேரத்தில் சாலியப்பாளையம் வந்தது; கண்டக்டர் அறிவிப்புக் கொடுத்தான்: ''வண்டி இருபது நிமிஷம் நிக்கும். பலகாரம் சாப்பிட்டு வர்றவங்க வரலாம்.''

ஒவ்வொருவராகப் பிரயாணிகள் கீழே இறங்கினர். பாட்டியின் டிக்கட்டை வாங்கி வைத்துக் கொண்டிருந்த வாலிபன் தன் துணைவனுடன் எழுந்தான்.

எல்லா டயர்களும் ஒன்றுபோலத் தோன்றலாம் - ஆனல் பயர்ஸ்டோன் டயரில் ஒரு வித்தியாசம் இருக்கிறது

Firestone



இந்த டிரெட்டைப் பாருங்கள் - இதில் உள்ள ஆயிரக்கணக்கான வழுக்குவதைத் தடுக்கக் கூடிய கோணங்கள் வண்டியை ஓட்டும் போதும், நிறுத்தும்போதும் திருப்பும் போதும், தக்கவாறு ரஸ்தாவைக் கவ்விப் பிடித்து பாதுகாப்பளிக்கிறது.



பிரத்தியேகமான, பசையில் தோய்க்கப் பட்ட கார்டு பாடி, டயர் பலவீனமடை வதைத் தடுத்து உங்களுக்கு டயர் வெடிப் புகள் மற்றும் 'பிளை' பிரிதல் முதலியவற்றி லிருந்து சிறந்த பாதுகாப்பளிக்கிறது.



டயரில் பொறிக்கப்பட்டிருக்கும் இந்தப் பெயர்தான் மிகவும் முக்கியமான வித்தி யாசம்—அதுதான் நாணயத்திற்கும் உழைப் பிற்கும் உங்கள் சின்னம்.



''எங்கேடாப்பா போறே?''— பாட்டி தான் பேசினாள்.

''ஹோட்டலுக்குப் போறேன் பாட்டி. ஏன், ஏதாவது வேண்டுமா...?''

உடனே இச்சொற்கள் காதில் விழுப்பெற்ற அத்தனை பேரும் சேர்ந்து ஒரு சிரிப்பு எழுந்தது. பெண் சிரிக்கவில்லை. அவள் சிரிக்கிறாளா என்பதைக் கடைக்கண்ணால் கவனித்து மேற்படி ஹாஸ்யத்தை உதிர்த்த இளைஞன் முகம் சிறிது சுண்டியது.

''சிவ சிவா! எனக்கு இப்ப இந்த ஹோட்டல் கண்றாவியைத் தின்கணும்னுட்டுத் தான் மசக்கை!''

''பின்னெ, எதுக்குப் பாட்டி எங்கே போறேன்னு கேட்டே?''

''என் டிக்கட்டை வச்சிருக்கயே. நீ பாட்டிலே இறங்கிப் போயிடாமெ இருக்கணுமேன்னு தான் கேட்டேன்.''

ஹாஸ்யக்காரன் முகம் அசடு வழிந்தது. பாட்டியின் தோத்திர முணு முணுப்புத் தொடர்ந்தது.

பழையபடி வண்டியில் ஆள் கூட்டம் சேர ஆரம்பித்தது. திமரெனப் பாட்டியின் மூக்கில் நெடி ஏறுகிறாற்போல இருந்தது.

இரண்டு தரம் பாட்டி, 'உஹூம்', உஹூம்' என்று மூக்கினாலும் வாயினாலும் ஓசை செய்து தன் அருவருப்பைத் தெரிவித்தாள். அப்படியும் புகை நாற்றம் நின்றபாடில்லை. பாட்டி சன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். பல் பிரயாணி ஒருவர் புகை விட்டுக் கொண்டு இருந்தார்.

''கொஞ்சம் தள்ளிப் போய்க் குடிக்கக் கூடாதா?'' பாட்டிக்குப் பொறுக்கவில்லை. சொல்லி விட்டாள்.

அவருக்குக் கோபம் வந்து விட்டது. ''பாட்டி! பொது இடத்துக்கெல்லாம் வந்தால் 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கிட்டுத்தான் போகணும்; நம்ம இஷ்டப்படியெல்லாம் நடக்கணுமின்னு வீட்டை விட்டு வெளியே வரவே கூடாது.''

பாட்டி பலே பேர்வழி! தட்சிணமூர்த்தி துதிக்குச் சற்று ஓய்வு கொடுத்து விட்டு விடை பகர்ந்தாள்: ''நானும் அதுதான் சொல்றேன். இதுவோ பொது இடம். இங்கெல்லாம் வந்தாக்கே, நாலுபேர் மேலே ஊதிண்டு நிக்கப்படாது. 'அட்ஜஸ்ட்' பண்ணிண்டு போக வேண்டாமோ? கொஞ்ச நேரத்துக்கு ஊதுறதை நிறுத்தி வச்சால் உயிர் போயிடப் போறதோ!''

அந்த மனிதரின் முகம் சிவந்து விட்டது. ''எல்லோரும் வண்டிலே ஏறி உட்காருங்க'' என்று கூறியவாறு கண்டக்டர் வந்தான்.

''என்னங்க, பாட்டிக்கிட்ட என்ன சண்டை?''

பாட்டி விட்ட இடத்தில் துதியைத் தொடர்ந்தாள்.

வண்டி புறப்பட்டது. புகை பிடித்தவர் தம் கட்சியைக் கண்டக்டரிடம் சொன்னார்.

''பாட்டியோட என்னத்துக்குங்க சண்டை? ரொம்பக் கோவமா இருக்காங்க. ஏகாதசிப் பட்டினி பாருங்க'' என்று அவன் முத்தாய்ப்பு வைத்தான்.

வண்டி காற்றைக் கிழித்துக் கொண்டு ஓடியது. பிரயாணிகள் எல்லோரும் அரைத் உறக்கத்தில் இருந்தனர்.

பாட்டியை இரண்டு மூன்று தரம் உறுத்துப் பார்த்தாள் பக்கத்திலிருந்த பெண்; அவளது கரங்கள் இடுப்பைப் பற்றியிருந்தன. பாட்டி கண்களைப் பாதி மூடிய வண்ணம் என்னவோ முணுமுணுத்துக்கொண்டிருந்ததுதான் அந்தப் பெண்ணுக்குப் புரிந்தது. மெல்லிய குரலில் ''இந்தாங்க... இந்தாங்க..'' என்று இரு தரம் அழைத்தாள்.

பாட்டி கனவுலகிலிருந்து திரும்புபவள் போல் அவள் புறம் திரும்பினாள்.

''என்னடியம்மா?''

பெண்ணின் முகத்தில் வேதனையுணர்வைக் கவனித்த பாட்டிக்குச் சட்டென்று திக்கென்றிருந்தது. புரிந்து கொண்டு விட்டாள். இருந்தாலும் ஒரு நப்பாசை!

''இந்தா'' என்று கூறித் தன் பட்டுச் செருகுப் பையிலிருந்து ஒரு சிட்டிகை திருநீற்றைப் பெண்ணின் கரத்தில் பதித்தாள். பாட்டியின் முகத்திலும் பீதி கண்டது. வண்டி செல்ல வேண்டிய தூரம் நிறைய இருந்தது. இப்போது இந்த இடத்தில் ஏதாவது ஆகிவிட்டால்?

பெண்ணின் முகம் வேதனையால் துடிதுடித்துக் கொண்டிருந்தது.

''அம்மா!'' என்று சிறு குரல். பாட்டியின் மீது அவள் சாய்ந்தாள். அப்புறம் நடந்தவற்றைச் சுருக்கமாகச் சொல்லி விடலாம்—

கவர்னரின் திண்டாட்டம்!

வியோமிங்கின் கவர்னராயிருந்த ஹண்ட் சிறைச்சாலையொன்றுக்கு விஜயம் செய்த சமயத்தில் கைதிகள் மாலை உணவுக்காகக் கூடியிருந்தார்கள். அவர்களுக்கு ஏதாவது கூறும்படி கவர்னரைக் கேட்டுக்கொண்டார் சிறைச்சாலை அதிகாரி. இதை எதிர்பார்க்கவில்லை கவர்னர்.



அதுவும் இன்றி இதுவரை முன் தயாரிப்பில்லாமல் பேசியதும் கிடையாது. தயங்குவதும் நல்லதல்ல. துணிவை வரவழைத்துக் கொண்டு ''சகக் குடி மக்களே'' என்றார் கைதிகளைப் பார்த்து. உடனே பலத்த சிரிப்பொலி எழுந்தது. செய்த தவற்றை உணர்ந்த ஹண்ட் சமாளித்துக் கொண்டு, ''சக கைதிகளே!'' என்றார். முன்னைவிடப் பலமான சிரிப்பு ஒலி எழுந்தது. கவர்னரின் உடல் வியர்த்தது. என்ன சொல்வது என்று புரியாத படபடப்புடன், ''நல்லது நண்பர்களே! உங்களை எப்படி அழைப்பதென்றே எனக்கு விளங்கவில்லை. போகட்டும். இங்கு நீங்கள் இவ்வளவு பேர்கள் இருப்பதைக் காண நிரம்ப மகிழ்ச்சியடைகிறேன்'' என்று கூறிவிட்டு நடையைக் கட்டினார்.

கூட வந்த மர்மம்!

ஒருநாள் மிர்ஸா காலிபுடன் இரவு வெகு நேரம் வரை பேசிவிட்டுப் புறப்பட்டார். வெளி வாசலுக்குச் சிறிது தூரம் இருந்தது. காலிபும் தமது நண்பருடன் அங்கிருந்த மெழுகுவத்தியை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். "நீங்கள் பாட்டுக்கு இருங்கள். நான் போய் வருகிறேன்" என்றார் நண்பர். காலிப் பதிலே பேசாது தொடர்ந்தார். "வெளிச்சமாகத் தானிருக்கிறது. நீங்கள் போங்கள்" என்று கூறினார் நண்பர். "பரவாயில்லை"–காலிபின் பேச்சு. "ஏன் சிரமப்படுகிறீர்கள்?" – நண்பரின் அனுதாபம். இருவரும் இப்படிப் பேசிக் கொண்டே வாயிலுக்கு வந்து விட்டார்கள். "சொல்லச் சொல்லக் கேட்க மாட்டேன் என்று வந்துவிட்டீர்களே!" என்று கூறிக்கொண்டே நண்பர் தம் செருப்பை மாட்டினார். "நீங்கள் வேறு! புதிய செருப்பு என்னுடையது. மாறி விடக் கூடாது என்பதற்காக வந்தேன்" என்றார் காலிபு.



னெம்பியாச்சு. சர்வேசுவரன் புண்ணியத்துலே நல்லபடியா இந்தப் பொண்ணு பிரசவிச்சு..." என்று நீளமாக என்னவோ சொன்னான்.

வண்டி மிகவும் மெதுவாகச் செல்ல வேண்டும் என்று பாட்டி உத்தரவு போட்டு விட்டாள். அவளது கொசுவிய புடவைமீது புதுப் பிறவி படுத்திருந்தது. இடையிடையே கண்ணைத் திறந்து பார்த்தாள் பிரசவித்தவள். பாட்டி தன் இடத்தை ஒழித்துக் கொடுத்துவிட்டு வழி நடையில் அமர்ந்திருந்தாள். அவள் முகமெல்லாம் அரும்பரும்பாக ஒரே வியர்வை.

வண்டி ஊர்ந்து ஊர்ந்து கடைசியில் ராமாபுரம் போய்ச் சேர்ந்தது. பின்னுக்குச் சென்று தனக்குரிய ஸ்தானத்தில் போய் நின்றது. ஒவ்வொருவராக யாவரும் இறங்கலாயினர். பாட்டிக்கு முன் வரிசையில் இருந்த பையன்கள் இருவரும் ஒருமுறை அசட்டுத்தனமாகப் பின் திரும்பிப் பெஞ்சின் மீது நோட்டம் விட்டு விட்டுக் கீழே இறங்கினர்.

பாட்டி கண்டக்டரை "இந்தாப்பா, வண்டியை நிறுத்தச் சொல்லு" என்று உத்தரவு போட்டாள். சில விநாடிகளில் வண்டி அலறிக் கொண்டு நின்றது. பாட்டியின் சுறுசுறுப்பைப் பார்க்க வேண்டுமே! "புருஷாளெல்லாம் கொஞ்சம் டுடுடுன்னு இறங்கிப் போயிடுங்கோ... சீக்கிரம்! கண்டக்டர் கொஞ்சம் நீதான் சொல்லேன். உங்களையும்தான் சொல்றேன். இறங்கிக் கீழே போயிடுங்கோ பசங்களா!" கடைசிக் கட்டளை முன் வரிசை இளைஞர்களுக்கு.

வண்டி நிற்க மரத்தடி அகப்பட்டது ஒரு நல்ல காலம்; அருகிலிருந்து கண்டக்டர் ஓடிச் சென்று கூஜா நிறையத் தண்ணீர் கொணர்ந்தான். தன் புடவை முறுக்கைப் பிரித்துக் கிழித்து விறுவிறுவென்று பாட்டியின் கரங்கள் இயங்கலாயின. பெண்ணின் ஓலம் நின்று சில விநாடிகள் ஆயின. அதிசயம்தான் அவ்வளவும். இல்லாவிடில், குவா. குவாவென்று வீறிட்டுக் கொண்டு ஒரு புதிய பிறவி அவ்வெதிர்பாராத இடத்தில் நல்லபடியாக இவ்வுலகில் தோன்றிவிட முடியுமா?

பாட்டி கைகளைக் கழுவிக் கொண்டாள். அவளுடைய வெள்ளை நிறத் தூய புடவை ஒரே கருமையாகப் போய்விட்டது. 'ஏண்டியம்மா. முழிச்சுப் பாரு' என்று அவள் தலையைத் தடவிக் கொண்டே பாட்டி மெதுவாகச் சொன்னாள்.

கைக்கடிகாரத்தைப் பார்த்து. "ஒரு மணி வண்டி 'டிலே' ஆயிடுச்சு. நல்ல கூத்து இது! எப்ப போய்ச் சேர்றது ராமாபுரம்?" என்று பொரிந்து தள்ளினார் பழைய புகைக்காரர்.

பாட்டிக்குக் காதில் விழுந்துவிட்டது. "ஆபத்துன்னு விட்டுக் கொடுக்கப்படாது பாருங்கோ. கோவிச்சுக்காதீங்கோ. இதோ

நல்லவேளையாக அந்தப் பெண்ணைச் சேர்ந்தவர்கள் அவளை அழைத்துச் செல்ல வந்திருந்தனர். அவர்கள் வண்டியினுள் ஏறினர். தாயையும், சேயையும் பிடித்து மெதுவாக இறக்கினர். கண்டக்டர் வண்டியின் உள்ளே ஏறினான்.

பிரசவித்த பெண்ணைக் கூட்டிச் செல்ல வண்டி வந்திருந்தது. அவள் அதில் ஏறினாள். குழந்தையைப் பிடித்து அவள் மடியில் விட்டனர். அவள் சிரமப்பட்டுக் கொண்டே என்னவோ முணுமுணுத்தாள். அவளைச் சேர்ந்தவர்களில் ஒருவர் திரும்ப பஸ்ஸுக்கு வந்தார். கண்டக்டரைக் கேட்டார்:

"எங்க, யாரோ பெரியம்மா வந்திச்சாமே.....?"

கண்டக்டர் கத்தினான். – "இறங்கி வா, பாட்டி!"

பாட்டி பெஞ்சின் அடியே கிடந்தாள்.

"ஆமாங்க. உள்ளார ஒரு பாட்டி இருக்குது. அவுங்க ரொம்ப வைதீகமுங்க. ஏகாதசின்னுப்புட்டு வாயிலே தண்ணி கூட ஊத்தாமெ வந்தாங்க. இந்தப் பிரசவம் வேறே பார்த்த ஆயாசத்திலே அப்பிடியே தூங்கிப்பிட்டாங்களோ. என்னவோ?"

கண்டக்டர் கிட்டேசென்று கூவினான். "பாட்டி; ஏ பாட்டி! ராமாபுரம் வந்தாச்சு. இறங்கு சுருக்க."

பாட்டி அசைந்து கொடுக்கவில்லை.

"ஏன்தான் நீங்களெல்லாம் நம்ம வண்டியிலே வந்து உயிரை வாங்கிறீங்களோ?" என்று கண்டக்டர் இரண்டாந் தடவையாகச் சொன்னான்.

பாட்டியின் காதில் அவன் போட்ட சத்தம் விழவில்லை. அவளுடைய கண்களில் சின்னஞ்சிறு மாம்பழக் கொசுக்கள் வரிசை வரிசையாக அமர்ந்து கரை கட்டியிருந்தன. கண்டக்டரின் கண்களில் நீர் நிறைந்தது.

இடுப்பு வலியால் ராஜன் பட்ட பாடு...



உலகப்புகழ் பெற்ற வலி நிவாரணியான ஸாரிடான் துரிதமாக, கெடுதல் எதுவுமின்றி, நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. முதுகுவலி, தலைவலி, பல்வலி, ஜுரம் வரும் போலிருப்பது, ஜலதோஷம் இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். பெரியவர்களுக்கு ஒரு வில்லை முழு டோஸ்; குழந்தைகளுக்கு $\frac{1}{4}$ லிருந்து $\frac{1}{2}$ வில்லை வரை கொடுக்கலாம்.

ஒரே ஒரு வில்லை

ஸாரிடான் 'ரோஷ்'

வலியைப் போக்குகிறது, ஆசுவாசப்படுத்துகிறது, புத்துணர்ச்சி யூட்டுகிறது

ஸாரிடான் ஒரே வில்லை போதும்
ஒரு வில்லை 13 பைசா

'ரோஷ்' தயாரிப்பு   ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்

JWT/VT-1848 (a)

அதிருஷ்டம் மிதந்தது!

‘மேனு’

வாரிசு இல்லாமல் யாராவது ராஜாக்கள் காலமாகி விட்டால் அந்தக் காலத்தில் பட்டத்து யானையின் தும்பிக்கையில் ஒரு பூ மாலையை வைத்து அனுப்புவார்களாம். அந்த யானை யார் கழுத்தில் மாலையைப் போடுகிறதோ அந்த நபருக்கு ராஜாவாகும் அதிருஷ்டம் அடிக்கும்! காலம் மாறிவிட்டது! இப்போதெல்லாம் அப்படி ராஜாக்களும் இல்லை. இருக்கும் யானைகளுக்கும் வேறு எத்தனையோ வேலைகள் !

இப்படி யானைகளை, அரசியல் ஏஜண்டுகளாகப் பயன்படுத்திக் கொள்வது போல, பல விசித்திர முறைகளிலும் மேலை நாட்டவர்கள் தங்கள் சொத்துக்களுக்கு வாரிசு தேடுகிறார்கள்!

ஜாக்வுரம் என்னும் ஆசாமிக்கு ஐம்பத்தி ஐந்து வயதாகி விட்டது. வாழ்க்கையில் எந்த வகையிலும் தோல்வியே கண்டவர். கடைசியாக அவர் நடத்திய தோட்டமும் நஷ்டத்தில் கவிழ்ந்து அவர் காலை வாரிவிட்டு விட்டது. மனமுடைந்த அந்த ஆசாமி, ஆகாயத்தைப் பார்த்தவாறு சான்பிரான்ஸிஸ்கோ கடற்கரையில் மணற்பரப்பில் படுத்திருந்தார். அவர் விரல்கள் மணலைக் கிளறிக் கொண்டிருந்தன. இது நடந்தது 1949ம் ஆண்டு மார்ச் மாதம்.

அவர் விரல்களில் ஏதோ கண்ணாடி உராய்வது போல் உணர்ச்சி ஏற்பட்டது. கவனித்தார். மணலில் ஒரு சீசா பாதி புதையுண்டு கிடந்தது. மணலைத் தோண்டினார். ஒரு முழு கண்ணாடிச் சீசாவே அழுத்தமான மூடியுடன் அவர் கைக்கு வந்தது. உள்ளே என்ன இருக்கும் என்று பார்க்கப் பாட்டிலின் மூடியை உடைத்துத் திறந்தார். உள்ளே நன்கு மடிக்கப்பட்ட ஒரு கடிதம் இருந்தது.

“எந்த வித சிக்கல்களையும் தவிர்க்கும் வகையில் இந்தப் பாட்டில் யார் கையில் கிடைக்கிறதோ, அவருக்கே என்னுடைய பாதி சொத்துக்களை விட்டுச் செல்கிறேன். அவர் உடனே என்னுடைய வக்கீலான பாரி கோஹனைச் சந்திக்கவும். அவருக்கு மறு பாதி சொத்துக்கள் சேரும். இப்படிக்கு—டெய்ஸி அலெக்ஸாண்டர், ஜூன் இருபதாம் தேதி, 1937” என்று அதில் கண்டிருந்தது.

டெய்ஸி அலெக்ஸாண்டர் என்ற பெயர் ஜாக்வுரத்தின் உள்ளத்தில் எந்த விதமான படபடப்பையும் ஏற்படுத்தவில்லை. அந்தப் பெயரை அவர் கேள்விப்பட்டதே இல்லை. யாரோ கேலிக்காக இப்படி எழுதிச் சீசாவுக்குள் போட்டு மூடிக் கடலில் போட்டிருக்கிறார்கள் என்று நினைத்தார். பாட்டிலைச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு எழுந்து நடந்தார். இந்தச் சம்பவத்தைப் பற்றி அநேகமாக மறந்தும் போய் விட்டார்.

மூன்று மாத காலத்துக்குப் பிறகு இங்கிலாந்திலிருந்து திரும்பிய ஒரு நண்பருடன் பேசிக் கொண்டிருந்த போது ஜாக்வுரம், வேடிக்கையாகத் தமக்குக் கிடைத்த சீசாவைப் பற்றியும் அதற்குள்ளிருந்த சீட்டு பற்றியும் தெரிவித்தார்.

“ஆஹா! டெய்ஸி அலெக்ஸாண்டர் என்னும் மூதாட்டி, ஸிங்கர் தையல் இயந்திர ஸ்தாபனத்தைச் சேர்ந்த பெரும் பணக்காரி யல்லவா? அந்த அம்மாள் தன் எண்பத்தியோராவது வயதில் 1939ம் ஆண்டில் வாரிசுகள் இல்லாமல் காலமாகி விட்டாளே! உயிலும் எழுதி வைத்ததாகத் தெரியவில்லையே! நீ உடனே, குறிப்பிட்ட பாரி கோஹன் என்ற வழக்கறிஞரைப் போய்ப் பார்! உனக்கு அதிர்ஷ்டம் அடிக்கலாம்” என்றார் நண்பர். ஜாக்வுரம் அப்படியே செய்தார். ஒரு கோடியே இருபது லட்சம் பெறுமான சொத்துக்களில் பாதியான 60 லட்சம் பவுன் தம்மைச் சேரவேண்டும் என்று மனுவும் போட்டார்.

டெய்ஸி அலெக்ஸாண்டரின் உறவினர்கள் டெய்ஸிக்கு அடிக்கடி கடலில் சிறு சீசாக்களை எறிந்து அவை எங்கு போகின்றன என்பதைக் கவனிக்கும் குழந்தைத்தனம் உண்டு என்பதை ஒப்புக் கொண்டார்கள். சமுத்திர நீரோட்ட ஆராய்ச்சியாளர் ஒருவர் தேம்ஸ் நதியில் எறியப்பட்ட சீசா, இங்கிலீஷ் கால்வாய், வடக்கு பஸிபிக் சமுத்திரம், வழியாகக் கலிபோர்னியாவை அடையச் சுமார் பன்னிரண்டு வருடங்கள் ஆகும் என்று கணக்கிட்டுச் சொன்னார். இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பாட்டில் பதினொன்றே முக்கால் வருடங்களை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதிக வித்தியாசம் இல்லையே!



ஜாக்வுரத்தின் கோரிக்கைக்குச் சாதகமாக இப்படிப் பல விஷயங்கள் நிரூபணமாகி விட்டன. ஆகவே அந்த உயிலில் கண்ட சொத்து இவருக்கு உரியது என்று தீர்மானிப்பதில் சங்கடமொன்றுமிருக்கவில்லை. ஜாக்வுரத்துக்கு, அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய வரிகள் சுமார் எழுபத்தி ஐந்து சதம் வரை போனது போகக் கைக்கு வந்தது லட்சத்து அறுபதினாயிரம் பவுன்கள் தான் கிடைக்கும் என்பது நிச்சயமாயிற்று.

அவர் உடனேயே தமக்கு மூட்டை முடிச்சுகளோடு வரவிருக்கும் சொத்துக்களுக்கு முன்னேற்பாடாக உயில் எழுதி வைத்தார். பாதியை வைத்திய, பொதுப்பணி ஸ்தாபனங்களுக்கும் பாதியை உறவினர்களுக்கும் பகிர்ந்தார்.

“நான் இப்படி எழுதி வைக்காதுபோனாலும் என் உறவினர்களெல்லாம், கடற்கரையில் போய் மிதந்து வரும் சீசாக்களுக்காக ஆவலுடன் காத்திருப்பார்களே!” என்றாராம் திடீர் அதிர்ஷ்டத்துக்குப் பாத்திரமான ஜாக்வுரம்!

(ஆதாரம் : கரனெட்)

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



அமிர்தாஞ்சனம்

தடவி விரைவில் நிவாரணம் பெறுங்கள்

பத்து மருந்துகள் கொண்டு விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட அமிர்தாஞ்சனம், ஜலதோஷம் மற்றும் மார்புச்சளி இவைகளிலிருந்து பூரணமாக நிவாரணம் அளிக்கிறது. தசைவலி, தலைவலி, சுளுக்கு இவைகளுக்கும் சிறந்த வகையில் நல்ல குணமளிக்கும் மருந்து அமிர்தாஞ்சனம். ஒருசமயத்தில் தேவையானதெல்லாம் மிகச் சிறு அளவே; ஆதலால் ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்திற்கு மாதக்கணக்கில் வரும் • அமிர்தாஞ்சனம் 70 வருடங்களாகக் குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி.



பத்து மருந்துப் பொருள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற சிறந்த நிவாரணி

அமிர்தாஞ்சன் லிமிடெட்
மதராஸ் - பம்பாய் - கல்கத்தா - டெல்லி

JWT/AM/2017

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



தன்னிகரில்லாச் சிறப்பு! கண்ணைப் பறிக்கும் வெண்மை! துப்புரவான தூய்மை! எல்லாம் ஸர்ப் செயல், எல்லைமீறிய வல்லமை. கரைகடந்த நுரைவளம். சலவையே வெகு எளிது. ஆம், சிறுவர் உடை முதல், சட்டை, சேலைவரை எல்லாத் துணிகளையும் கைப்பட வீட்டிலேயே சலவை செய்துகொள்ளச் சாலச் சிறந்தது ஸர்ப்!

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை

SU. 45-140 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு